மகாமகோபாத்...யாய, டாக்டர்
வே. சாமி...ர் நூ... ...யம்
நன்கொடை
அடை ... ...

# பாலபோதவிலக்கணம்.

---

## முதலாவது எழுத்ததிகாரம்.

௧. வது.

## எழுத்தின் பெயரியல்.

காப்பு.

ஆன்றோரொருகருமந் தாந்தொடங்கும் போதுமுதற்
றேன்றோய்மலர்தூய்த் துதியளிக்கும் — ஆ...ேறனைப் *
போற்றியுரைப்பேன் பாலபோதவிலக்கணத்தைச்
சாற்றுமிளையோர்பொருட்டுத்தான் — — — *

---

௧. இலக்கணநூலாவது, செய்யுள்வழக்கத்தையும், உயர்ந்தோர் வழக்கத்தையும், நன்றாகவறிந்து எழுதுவதற்கும் பேசுவதற்குங் கருவியாகவிருக்கின்ற நூலாம்.

௨. இந்நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், புணர்ச்சியதிகாரம், தொடர்

பொழிப்பதிகாரம், என நான்கதிகாரங்களால் வகுக்கப்படும்.

௩ அவைகளில் எழுத்ததிகாரம், எழுத்தின்பெயரியல், எழுத்தினமயியல், எழுத்துச்சாரியையியல், எழுத்துமொழியியல், என நான்கியல்களாக வகுக்கப்படும்.

௪ எழுத்தாவது, சொல்லுக்கு முதற்காரணமாயுள்ளது.

௫ அது, முதலெழுத்தென்றும், சார்பெழுத்தென்றும், இரண்டுவகைப்படும்.

௬. முதலெழுத்துகள், உயிரெழுத்தும், மெய்யெழுத்தும், ஆம்.

௭ உயிரெழுத்துகள், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, இப்பன்னிரண்டெழுத்துகளுமாம்.

௮. இவைகளில், அ, இ, உ, எ, ஒ இவ்வைந்தும், குற்றெழுத்துகளாம்.

௯. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, இவ்வேழும், நெட்டெழுத்துகளாம்.

௰. மெய்யெழுத்துகள், க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், இப்பதினெட்டெழுத்துகளுமாம்.

௰௧. இவைகளில், க, ச, ட, த, ப, ற, என்கின்ற ஆறும் வல்லெழுத்துகளாம்.

௰௨. ங, ஞ, ண, ந, ம, ன, என்கின்ற ஆறு மெல்லெழுத்துகளாம்.

௰௩. ய, ர, ல, வ, ழ, ள, என்கிற ஆறும் இடையெழுத்துகளாம்.

௰௪. சார்பெழுத்துகள், ஆய்தவெழுத்தும், உயிர்மெய்யெழுத்துமாம்.

௰௫. அவைகளில், ஆய்தவெழுத்து, குற்றெழுத்திற்கும், உயிர்மெய் வல்லெழுத்திற்கும், நடுவே மூன்றுபுள்ளி வடிவாய், வரும் ஓரெழுத்தாம்.

(உ-ம்) எஃகு, கஃசு, அஃது, பஃறி, எனவரும்.

௰௬. உயிர்மெய்யெழுத்துகள், பன்னிரண்டுயிரும், பதினெட்டு மெய்களின்

மேலுந் தனித்தனி யேறிவருதலாலாகிய இருநூற்றுப்பதினாறும்.

அவை, க, கா, கி, கீ, முதலியவையாம்.

மேற்கூறப்பட்ட முதலுஞ் சார்புமாகிய இருநூற்றுநாற்பத்தேழெழுத்துக்களும், தமிழ்ச்செய்யுள்வழக்கில் வழங்கிவருதல் காண்க.

௫. சமஸ்கிருத எழுத்துக்களுள், ஜ, ஶ, ஷ, ஸ, ஹ, க்ஷ, முதலிய சிலவெழுத்துக்கள் தமிழினுள் உலகவழக்கில் வழங்கிவரும். அவைவருமாறு. புஜம், பாஶம், மேஷம், வாஸம், மஹாராஜன், பக்ஷம், எனவரும்.

சமஸ்கிருத எழுத்துக்கள், செய்யுளில் வருங்கால் திரிந்துவரும். அவை திரிந்துவருமாறு பின்னர்க் கூறப்படும்.

---

எழுத்தின்பெயரியல், முற்றிற்று.

# எழுத்தினளபியல்.

II. 25 ______ 1200

௰௮. குற்றெழுத்திற்கு, மாத்திரை ஒன்றாம், நெட்டெழுத்திற்கு, மாத்திரை இரண்டாம்.

மெய்யெழுத்திற்கும், ஆய்தவெழுத்திற்கும், தனித்தனி மாத்திரை அரையாம்.

உயிர்மெய்க்குற்றெழுத்திற்கு, ஏறிய உயிரினளவாகியமாத்திரை ஒன்றாம் உயிர்மெய் நெட்டெழுத்திற்கு, ஏறிய உயிரினளவாகிய மாத்திரை இரண்டாம்.

ஒருமாத்திரை என்னுங் காலவளவையாவது, மாந்தருடைய இயல்பாகவெழுகின்ற கண்ணிமைப்பொழுது, அல்லது, கைந்நொடிப்பொழுதாம்.

௰௯. உயிரெழுத்துக்களில், உகரமும், இகரமும், சிலவிடங்களில் அரைமாத்திரை ஒலித்துநிற்கும். அவ்வுகரத்திற்குக் குற்றியலுகரமென்றும், அவ்விகரத்திற்குக் குற்றியலிகரமென்றும், பெயராம்

குற்றியலுகரத்திற்குங் குற்றியலிகரத்திற்குந் தனித்தனி மாத்திரை யரையாம்.

உய. குற்றியலுகரமாவது, தனியே வருகிற நெட்டெழுத்துக்குப் பின்னும், தொடர்ந்து வருகிற எல்லா வெழுத்துக்கும் பின்னும், மொழிக்கிறுதியிலே வல்லின மெய்களின் மேலேறிநிற்கு முகரமாம்.

அவ்வுகரம் - நெடிற்றொடர்க் குற்றியலுகரம், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம், என ஆறுவகைப்படும்.

(உ-ம்)

நாகு- ஆடு- ஆறு- எ-ம்,
எஃகு- கஃசு- அஃது- எ-ம்,
வரகு பலாசு- அரிது- எ-ம்,
கொக்கு கச்சு- பட்டு- எ-ம்,
சங்கு- வண்டு- பந்து- எ-ம்,
அல்கு- எய்து- தெள்கு- எ-ம்,

உகு.

அன்றியும், நுந்தை என்னுஞ் சொல்

லிலே நகரமெய்யி லிருக்கிற உகரமுங் குற்றிய லுகரமெனப்படும்.

௨௧. குற்றெழுத்திற்குப்பின் வல்லினமெய்களின்மேலேறி நிற்கும் உகரமும், குற்றெழுத்திற்குப் பின்னும், நெட்டெழுத்திற்குப்பின்னும், ஆய்தமும், வல்லின மெய்யும், ஒழிந்த இணைந்துவரும் ஏனைய வெழுத்துக்களுக்குப்பின்னும், மெல்லின மெய்களினும், இடையின மெய்களினும், ஏறிநிற்கும் உகரமும், முற்றிய லுகரமாமென அறிக.

(உ-ம்) நகு, பொசு, கடு, அது, எ-ம், கணு, திரு, வழு, எ-ம், புணு- வாரு, எ-ம், உருமு, கதவு, எ-ம், வரும்.

௨௨. குற்றிய லிகரமாவது, யகரத்தைத் தொடருமிடத்துக் குற்றிய லுகரந் திரிந்த இகரமாம். (உ-ம்) நாகியாது, எஃகியாது, வரகியாது, கொக்கியாது, சங்கியாது, அல்கியாது, என வரும்.

அன்றியும், மியாவென்னும் அசைச்சொல்லிலே மகரத்தைப் பொருந்தி நிற்கும் இகரமும், குற்றிய லிகரமெனப்படும்.

௩. வது.

# எழுத்தினிலையியல்.

---

௨௬. எழுத்தினிலை, முதனிலை, இறுதிநிலை, இடைநிலை என மூன்று வகைப்படும்.

[ முதனிலை. ]

௨௭. பன்னிரண் டுயிரெழுத்துக்களும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, என்னும், ஒன்பதுமாகிய மெய்யெழுத்துக்களும், சொற்களுக்கு முதலில் நிற்கும் எழுத்துக்களாம்.

( உ-ம். )

அணி, ஆடை, இலை, ஈரல், உரல், ஊர்தி, எழு, ஏணி, ஐயம், ஒளி, ஓதி, ஔவை, கரி, சரி, தலை, நன்மை, பந்து, மணி, வயல், யமன், ஞமலி, எனவரும்.

இவ்வொன்பது மெய்களுள் வல்லினமெய், க, ச, த, ப, என்னு நான்கெனவும், மெல்லினமெய், ஞ, ந, ம, என்று மூன்றெனவும், இடையினமெய், ய, வ, என்னும் இரண்டெனவும், அறிக.

௨அ. இவைகளில், க, ச, த, ந, ப, ம, என்னும் ஆறு மெய்களும், பன்னிரண்டுயிரோடும் மொழிக்கு முதலாகிவரும்.

(உ-ம்)

கனி, காளி, கிளி, கீரை, குளிர், கூடு, கெண்டை, கேழல், கைதை, கொண்டை, கோடை, கௌவை. எ-ம், சட்டி, சாந்து, சினம், சீர், சுக்கு, சூரல், செக்கு, சேவல், சையம், சொன்றி, சோறு, சௌரியம், எ-ம், தகை, தார், திங்கள், தீமை, துணை, தூசு, தெளிவு, தேன், தையல், தொண்டு, தோடு, தௌவை, எ-ம், நஞ்சு, நாரி, நிலம், நீறு, நுகம், நூல், நெய், நேயம், நைதல், நொய்து, நோய், நௌவி, எ-ம், பந்து, பால், பிட்டு, பீடம், பூமி, பெருமை, பேய், பையல், பொய், போது, பௌவம், எ-ம், மணி, மாடு, மின்னல், மீன், முனி, மூரி, மெய்ம்மை, மேதி, மையல், மொட்டு, மோகம், மௌவல், எ-ம், வரும்.

௨௯. வகரமெய், அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ, என்னும் எட்டுயிரோடு மொழிக்

கு முதலாகிவரும். (உ-ம்.) வளி, வாளி, விளி, வீடு, வெண்மை, வேரல், வையம், வௌவால், என வரும்.

௩௰. யகரமெய், அ, ஆ, உ, ஊ, ஓ, ஒள என்னும் ஆறுயிரோடுங் கூடி மொழிக்கு முதலாகி வரும். (உ-ம்.) யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம், என வரும்.

௩௧. ஞகரமெய், அ, ஆ, எ, ஒ, என்னும் நான்குயிரோடுங் கூடி மொழிக்கு முதலாகி வரும். (உ-ம்.) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல், என வரும்.

[இறுதிநிலை]

௩௨. எகரம் ஒழிந்த பதினொருயிரும், ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ன், என்னும் பதினொரு மெய்களும், மொழிக்கு இறுதியில் நிற்கும் எழுத்துக்களாம்.

(உ-ம்.)

விள, பலா, கிளி, தீ, கடு, பூ, சே, கை, நொ, போ, வௌ, உரிஞ், மண், வெரிந்

நீர், மரம், பொன், காய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எனவரும்.

[இடைநிலை.]

௧௩. இடைநிலையாவது, ஒருமொழியிலுந் தொடர்மொழியிலும் இரண்டெழுத்துப் பொருந்தும் பொருத்தமாவதாம்.

௧௪. அது, மெய்ம்மயக்கமும், உயிர்மெய்ம்மயக்கமும், எனவிருவகைப்படும்.

௧௫. அவற்றுள், மெய்ம்மயக்கமாவது, மெய்யுடன் மெய்பொருந்துவதாம்.

௧௬. அம்மெய்ம்மயக்கம், உடனிலைமெய்ம்மயக்கமெனவும், வேற்றுநிலைமெய்ம்மயக்கமெனவும், இருவகைப்படும்.

௧௭ மெய்பதினெட்டினுள், க, ச, த, ப, என்கிற நான்குந் தம்முடனேதாம் மயங்கி வரும். (உ-ம்)

சுக்கு, கச்சு, பத்து, செப்பு, எனவரும்.

௩௮. ர, ழ, இவ்விரண்டுமெய்களும், பிறமெய்களோடுமயங்கிவரும்.

(உ-ம்.) சேர்தல், வாழ்தல், எனவரும்.

௩௯. ங, ஞ, ட, ண, ந, ம, ய, ல, வ, ள, ற, ன, இப்பன்னிரண்டுமெய்களும் தம்மெய்யோடும், வேறுமெய்யோடும், மயங்கிவரும். (உ-ம்.) அங்ஙனம், அங்கு, எ-ம், மஞ்ஞை, மஞ்சு, எ-ம், வட்டம், வட்கல், எ-ம், வண்ணான், வண்டு, எ-ம், வெந்நீர், வெந்து, எ-ம், அம்மை, அம்பு, எ-ம், வெய்யர், வெய்து, எ-ம், வெல்லம், வெல்க, எ-ம், செவ்வர், செவ்வாழை, எ-ம், கொள்ளல், கொள்க, எ-ம், கற்றல், கற்பு, எ-ம், அன்னை, அன்பு, எ-ம், வரும்.

௪௰. உயிர்மெய்ம்மயக்கம், உயிருடன்மெய்யும், மெய்யுடனுயிரும், நியதியின்றி மயங்குவனவாம். (உ-ம்.) அவ, [illegible], வில், புள், புகழ், எனவரும்.

---

எழுத்திநிலையியல்

முற்றிற்று.

# எழுத்தொழிபியல்.

[இனவெழுத்து]

௧௧ உயிரெழுத்துகளில் நெட்டெழுத்துகளுக்கு, அதனதன் குற்றெழுத்துகளேயினமாம். குற்றெழுத்தில்லாத ஐகாரத்துக்கு, இகரமும், ஔகாரத்துக்கு, உகரமும், இனமாம். மெய்யெழுத்துகளில் வல்லின எழுத்துகளுக்கு, அதனதன்பின் நிற்கின்றமெல்லின வெழுத்துகளே இனமாம். இடையின வெழுத்துகளுக்கு, இனமில்லையென்றறிக.

[எழுத்துச்சாரியை]

௧௨. உயிர்நெட்டெழுத்துகள் காரச்சாரியையும், அவைகளில், ஐ, ஔ, இரண்டும் காரசாரியையுமன்றிக் கான்சாரியையும்பெறும் (உ-ம்.) ஆகாரம், ஈகாரம், ஊகாரம், ஏகாரம், ஐகாரம், ஓகாரம், ஔகாரம், எ-ம், ஐகான், ஔகான், எ-ம், வரும்.

உயிர்க்குற்றெழுத்துகளும், உயிர்மெய்க்குற்றெழுத்துகளும், கரம், காரம்,

கான், என்றுமூன்றுசாரியைகள் பெறும். (உ-ம்.) அகரம், அகாரம், அஃகான், எ-ம். ககரம், ககாரம், கஃகான், எ-ம், வரும்.

மெய்யெழுத்துகள், அ, என்னுஞ் சாரியையும், அதனோடு, கரம், காரம், கான், என்னுஞ் சாரியைகளும் பெறும்.— (உ-ம்) க, ங, எ-ம், ககரம், ககாரம், கஃகான், ஙகரம், ஙகாரம், ஙஃகான், எ-ம். வரும்.

உயிர்மெய்நெடில்கள்சாரியைபெற்றும் மெய்கள்சாரியைபெறாமலும் இயங்குவாம்.

[போலியெழுத்துகள்.]

௬௯. அகரத்தோடு யகரமெய் சேர்ந்து ஐகாரம்போன்றும், அகரத்தோடு வகர மெய்சேர்ந்து ஔகாரம் போன்றும், ஒலித்துப் போலியெழுத்துகளாய் பட்டுவரும், ( உ-ம். ) ஐயன் - அய்யன், ஔவை-அவ்வை, எனவரும்.

---

எழுத்தொழிபியல்முற்றிற்று.

எழுத்ததிகாரம்

முற்றுப்பெற்றது.

இரண்டாவது.

# சொல்லதிகாரம்.

---

௧ வது.

## பெயர்ச்சொல்லியல்.

---

௬௪. சொல்லதிகாரம், பெயர்ச்சொல்லியல், வினைச்சொல்லியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல், என நான்கு வகைப்படும்.

௬௫. சொல்லாவது, ஓரெழுத்தாலும் பலவெழுத்தாலும், ஆக்கப்பட்டுத் திணையும், பாலும், எண்ணும், இடத்தையும், அறிதற்குக் கருவியாயுள்ளதாம்.

௬௬. ஓரெழுத்து மொழிகளாவன: ஆ, ஈ, தா, தீ, பூ, போ, வா, எனவருவனவாம்.

௬௭. பலவெழுத்து மொழிகளாவன

கி

கிளி, அரம், அரக்கு, பம்பரம், உத்திரா டம், உத்திரட்டாதி, எனவருவனவாம்.

௪அ. திணைபாலாவது இலக்கணநூலி ற்பகுக்கப்பட்டபொருள்களின்சாதியாம்.

௪௯. அது உயர்திணையெனவும், அஃறிணையெனவும், இருவகைப்படும். உய ர்திணை - உயர்வாகியசாதி. அஃறிணை உயர் வில்லாதசாதி.

௫௦. உயர்திணை மக்களும், தேவரும், நரகரும், ஆகிய மூவகைச்சாதிப்பொ ருளாம்.

௫௧. அஃறிணை மிருகம், பறவைமுத லியஉயிருள்ளசாதிப்பொருள்களும், நில ம், நீர், கல், முதலிய உயிரில்லாதசாதிப் பொருள்களுமாம்.

௫௨. பாலாவது மேற்சொல்லிய பொருள்களின் பகுப்பாம்.

௫௩. அது ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், என ஐந்துவகைப்படும்.

௫௪ ஆண்பால், பெண்பால், பலர்பால், என்னு மூன்று பாலுமுடைய உயர்திணைக்குரியனவாம்.

(உ-ம்)

அவள், வந்தாள், எ-ம்,
அவன், வந்தான், எ-ம்,
அவர், வந்தார், எ-ம், } வரும்.

௫௫ ஒன்றன்பால், பலவின்பால், என்னும் இரண்டு பால்களும் அஃறிணைக்குரியனவாம். (உ-ம்.)

அது, வந்தது, எ-ம்,
அவை, வந்தன, எ-ம், } வரும்.

௫௬ எண்ணுவது பொருள்களின் அளவின் வேறுபாட்டைக் காட்டுவதாம்.

அது ஒருமையென்றும், பன்மையென்றும் இருவகைப்படும். உயர்திணையில் ஆண்பாலும், பெண்பாலும், ஒருமையென்றும், பலர்பால் பன்மையென்றும். அஃறிணையில் ஒன்றன்பால் ஒருமையென்றும். பலவின்பால் பன்மையென்றும்.

௫௭. இடமாவது சொற்களினிகழ்ச்சிக்குரியகாரணமாம்.

௫௮ அது தன்மை, முன்னிலை, படர்க்கை, என மூன்றுவகைப்படும்.

சொல்லுவோர், தன்மையிடமாம்.
கேட்போர், முன்னிலையிடமாம்.
சொல்லப்படுவோர், படர்க்கையிடமாம்.

௫௯. இச்சொல் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், என நான்குவகைப்படும். அவையலாமல் திசைச்சொல்லும், வடசொல்லும், உண்டு.

௬௰ திசைச்சொற்கள் தென்பாண்டிமுதலிய பன்னிரண்டு கொடுந்தமிழ்நாடுகளிலிருந்து வந்து செந்தமிழ் நாட்டு மொழியோடு கலந்து வழங்குஞ் சொற்களாம்.

செந்தமிழ் நாடாவது பாண்டி நாடாம்.

கொடுந்தமிழ் நாடாவன தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி

பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புனனாடு, என்பனவையாம்.

தென்பாண்டிநாட்டார்- ஆவினைப்பெற்றம் எ-ம்,
குட்டநாட்டார், தாயைத்தள்ளை எ-ம்,
குடநாட்டார், தந்தையை அச்சன் எ-ம்,
கற்காநாட்டார், வஞ்சரைக்கையர் எ-ம்,
வேணாட்டார், தோட்டத்தைக்கிழார் எ-ம்,
பூழிநாட்டார், சிறுகுளத்தைப்பாழி எ-ம்,
அருவநாட்டார், செறுவைச்செய் எ-ம்,
அருவாவடதலையார், புளியைஎகின்எ-ம்,
சீதநாட்டார், தோழனை எலுவன் எ-ம்,

வழங்குவர். பிறவுமன்ன.

௬௧ வடசொற்கள், ஆரியத்திற்குந்தமிழிற்கும் பொதுவெழுத்தாலும், ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்துக்கிரந்தவெழுத்தாலும், இவ்விருவகையெழுத்தாலும், இயைந்து தமிழில்வந்து வழங்குஞ்சொற்களாம். உ-ம்., அமலம், கமலம், காரணம், காரியம், இவைபொதுவெழுத்தாலியைந்தன. சுகி, போகி, சுத்தி, இவை சிறப்பெழுத்தாலியைந்தன. அரன், அரி, கடினம், சலம், இவை ஈரெழுத்தாலுமியைந்தன

௩௨. பெயர்ச்சொற்களாவன காலத்தைக் காட்டாமல், வேற்றுமை யுருபுகளை யேற்பனவாய்ப் பொருளை யுணர்த்திவருஞ் சொற்களாம். ஆயினும், வினையாலணையும் பெயரொன்று மாத்திரம் காலத்தைக்காட்டுமெனக் கொள்க.

இவை இடுகுறியுங், காரணக்குறியும், காரண விடுகுறியுமாகிப் பகாப்பதம், பகுபதமென இருவகைப்பட்டுத் திணைபாலிடங்களில் ஒன்றற் குரியவாயும், பலவற்றிற்குப் பொதுவாயும், வரும்.

௩௩. இடுகுறிப்பெயர்கள் சமுதாயவாற்றலாற் பொருளை புணர்த்துவருஞ்சொற்களாம். (உ-ம்) மரம், பனை, எனவரும்.

௩௪. காரணப்பெயர்கள் உறுப்பாற்றலாற் பொருளை யுணர்த்திவருஞ் சொற்களாம். (உ-ம்) பறவை, அணி, பொன்னன், எனவரும்.

௩௫. காரண விடுகுறிப் பெயர்கள் உறுப்பாற்றலுடனே கூடிய பொருளைச் சமுதாயவாற்றலா லுணர்த்திவருஞ்சொற்களாம். (உ-ம்) முக்கணன், அந்தணன், முள்

ணி, கறிக்கு, என்றும்.

முக்கணையுடைத்தாகலானுங் காரணங் காறி
யவழி பிறாவுமொரிகதி [illegible]
க்கு [illegible] ஆகலானு [illegible] காரணச் [illegible] வழி
இடு [illegible] பாவமயிப்பட்டமாயி [illegible]
லுதலாலும், கார [illegible] பெயராம்.
மேர்வி [illegible] காரணங் [illegible]
மா [illegible] பெயர் [illegible]
செய [illegible] காரணக்குறி [illegible]
பெ [illegible] செ
[illegible] காரணவிடுகுறி
ப்பெயராம் [illegible] படும்.

௬௬. இவை பொதுப் பெயரும், சி
றப்புப்பெயரும்,என இருவகைப்படும்.

௬௭. பொதுப்பெயர்களாவன பல
பொருள்களுக்குப் பொதுவாகிவரும்பெ
யர்களாம் (உ-ம்) மரம், விலங்கு, பறவை,
எனவரும்.

௬௮. சிறப்புப்பெயர்களாவன ஒவ்
வொருபொருளுக்குச்சிறப்பாகிவரும்பெ
யர்களாம் (உ-ம்) ஆல், கழி, காரி, எனவரும்

# பெயர்ச்சொல்லியல்.

௬௯. இப்படி வரும் பெயர்கள் தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப் பெயர், என மூன்று வகைப்படும்.

௭௰. தன்மைப்பெயர்கள் நான், யான், நாம், யாம், என நான்காம். இவைகளில், நான், யான், இவ்விரண்டும் ஒருமைப்பெயர்களாம்; நாம், யாம், இவ்விரண்டும் பன்மைப் பெயர்களாம்.

இத்தன்மைப்பெயர்கள் உயர்திணை ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிவருவனவாம்.

(உ-ம்.)

யானம்பி, யானங்கை, எ-ம், }<br>யாமைந்தர், யாமகளிர், எ-ம், } வரும்.

௭௧. முன்னிலைப் பெயர்கள் நீ, நீர், நீயிர், நீவிர், எல்லீர், என ஐந்தாம். இவைகளில் நீ என்பது ஒருமைப் பெயராய், மற்றவை பன்மைப் பெயர்களாம்.

இம்முன்னிலைப் பெயர்கள் இருதிணை ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகி வருவனவாம்.

(உ-ம்)

நீநம்பி, நீநங்கை, நீபூதம், எ-ம், நீர்மைந்தர், நீர்மகளிர், நீர்பூதங்கள், எ-ம், வரும். மேற்கூறப்பட்ட தன்மைப்பெயர் நான்கும், இம்முன்னிலைப்பெயர்களும், பகாப்பதங்களாமெனவறிக.

நாங்கள், யாங்கள், என்பனவும் தன்மைப்பன்மையிலும், நீங்கள், என்பது முன்னிலைப்பன்மையிலும், உலகவழக்கில் வரும்.

௭௨. படர்க்கைப்பெயர்களாவன மேற்கூறப்பட்ட தன்மை முன்னிலைப் பெயர்களல்லாத மற்றைய எல்லாப்பெயர்களுமாம். (உ-ம்) பொன், மணி, நிலம், அவன், அவள், எனவரும்.

இப்படர்க்கைப்பெயர்கள் பகாப்பதங்களாயும், பகுபதங்களாயும் வருமாறும், இவை திணைபாலிடங்களில் ஒன்றற்குரியவாயும் பலவற்றிற்குப் பொதுவாயும் வருமாறும் இனிக்கூறப்படும்.

௭௩. பகாப்பதங்கள் பகுதிவிகுதி முதலிய உறுப்புகளைப் பெறாமல் வரும்.

பெயர்ச்சொற்களாம் (உ-ம்) மண், பொன், கல், மணி, நெல், மரம், நீர், எனவரும்.

எச. பகுபதங்கள் பகுதி விகுதிமுதலிய உறுப்புகளைப்பெற்றுவரும்பெயர்ச்சொற்களாம்.

இப்பெயர்ப்பகுபதங்கள் பொருளிடங்காலஞ் சினை குணந் தொழில் என்னும் இவ்வாறு பெயர்களடியாகவும், சிறுபான்மை இடைச்சொல்லடியாகவும், வரும்.

(உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| பொன்னன், | குழையன், | எ-ம், | வரும். |
| நிலத்தன், | அகத்தன், | எ-ம், | |
| வேனிலான், | தையான், | எ-ம், | |
| கண்ணன், | தோளன், | எ-ம், | |
| கரியன், | பெரியன் | எ-ம், | |
| ஊணன், | நடையன், | எ-ம், | |
| அவன், | எவன், [ன் | எ-ம் | |
| பிறன், | மற்றையா | | |

எரு. பகுதிகளாவன அப்பகுபதங்களின் முதனிலையாய் வருகின்ற பகாப்பதங்களாம்.

(உ-ம்.)

பொன்னன், நிலத்தன், எனவரும். இவைகளில்முறையே, பொன், நிலம், பகுதியாய் வருதல்காண்க. மற்றவைகளு மிப்படியே.

எசா. விகுதிகளாவன திணை, பால், எண், இடம், இவைகளை யுணர்த்தி அப்பகுபதங்களின் இறுதி நிலையாய் வருபவைகளாம்.

எஎ. அன், ஆன், முதலிய விகுதிகளையிறுதியிலே பெற்றுவருவன உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்ப்பகுபதங்களாம். (உ-ம்.)

பொன்னன், பொருளான், எனவரும்.

முதலியவென்றதனால்-வடமன், கோமான், பிறன், எனச் சிறுபான்மை மன், மான், ன், என்றும்விகுதிகளையும் இப்பெயர்ப்பகுபதங்கள் பெற்றுவரும்.

எஅ. அள், ஆள், இ, முதலியவிகுதிகளை இறுதியிலே பெற்றுவருவன உயர்திணைப் பெண்பா லொருமைப் படர்க்கைப்பெயர்ப்பகுபதங்களாம். (உ-ம்.) குழை

யள், குழையாள், பொன்னி, எனவரும்.

முதலிய வென்றதனால் - பிறள் என ளகரவீற்று விகுதியையும் இப்பகுபதங்கள் சிறுபான்மைபெற்றுவரும்.

௪௯. அர், ஆர், கள், முதலியவிகுதிகளை இறுதியிலே பெற்றுவருவன உயர்திணைப்பலர்பாற் படர்க்கைப் பெயர்ப்பகுபதங்களாம். (உ-ம்) குழையர், குழையார், கோக்கள், எனவரும்.

முதலிய வென்றதனால் - தேவிமார், பிறர், எனச்சிறுபான்மை மார், ர், என்னும் விகுதிகளையும், இப்பகுபதங்கள் பெற்றுவரும்.

தச்சர்கள், தட்டார்கள், எனக் கள்விகுதி விகுதிமேல விகுதியாயும் வரும்.

௫௰. து, விகுதியை யிறுதியிலேபெற்றுவருவன அஃறிணை யொன்றன்பாற்படர்க்கைப்பெயர்ப்பகுபதங்களாம் (உ-ம்) குழையது, ஊரது, எனவரும்.

௫௧. வை, அ, கள், முதலிய விகுதிகளை இறுதியிலே பெற்றுவருவன அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயர்ப்

பகுபதங்களாம். (உ-ம்) குழையுடைமை, குழையன, மரங்கள், எனவரும்.

அஉ. து, என்னும் ஒருமை விகுதியையாவது வை, அ, கள், என்னும் பன்மை விகுதிகளையாவது பெறுமல் அஃறிணையியற்பெயராய்வரும் எல்லாப்பெயர்களும் பாலபகா அஃறிணைப்பெயர்களாம்.

(உ-ம்.)

யானைவந்தது, யானைவந்தன,
குதிரைவந்தது, குதிரைவந்தன,
மரம்வளர்ந்தது, மரம்வளர்ந்தன, } எனவரும்.

அங. மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், முதலிய விகுதிகளை யிறுதியிலே பெற்றுவருவன பண்புப்பெயர்ப் பகுபதங்களாம். (உ-ம்.) நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர், எனவரும்.

இம்மைமுதலிய விகுதிகளின் பொருள் முதனிலைப் பண்பைப் பெயர்த்தன்மைபெறச் செய்துநிற்றலாம்.

அச. தல், அல், கை, அம், ஐ, வை, கு, பு, உ, தி, சி, வி, முதலிய விகுதிகளை இறுதியிலே பெற்றுவருவன தொழிற்

பெயர்ப்பகுபதங்களாம். (உ-ம்) வருதல், வரல், வருகை, வாட்டம், கொலை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி, புலவி, எனவரும் அன்றியும் - நடவாமை உண்ணாமை, என மையீற்றினை இறுதியிற் பெற்றுவருவனவற்றையெதிர்மறைத்தொழிற்பெயரெனக்கொள்க.

இத்தல்முதலிய விகுதிகளிற் பொருள் முதனிலை தொழிலைப் பெயர்த்தன்மைபெறச்செய்து நிற்றலாம்.

அவை இ, ஐ, அம், என்னு மூன்று விகுதிகளும் வினைமுதற் பொருளையும், செயப்படு பொருளையும், கருவிப்பொருளையும், உணர்த்திவரும். (உ-ம்)

அலரி, பறவை, எச்சம், என்பன வினைமுதற் பொருளை யுணர்த்திவந்தன.

ஊருணி, தொடை, தொல்காப்பியம், என்பன செயப்படுபொருளை யுணர்த்திவந்தன

மண்வெட்டி, பார்வை, நோக்கம், என்பன கருவிப்பொருளை யுணர்த்திவந்தன.

இவ்விகுதிகள் சிறுபான்மை புணர்ந்து கெட்டும்வரும். (உ-ம்) காய், தளிர், பூ,

கனி, என்பவற்றில் வினைமுதற் பொருளை புணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்டது. எழுத்து, ஊண், என்பவற்றிற் செயப்படுபொருளை புணர்த்தும் ஐ விகுதிபுணர்ந்துகெட்டது மற்றவைகளுமிப்படியே இவை கெடினும் புணர்ந்து நின்றுற்போலவே அப்பொருளை புணர்த்திவருதல்காண்க அன்றியும் பொன்மை யென்பது பொன்றன்மையெனவும், ஆண்மையென்பது ஆண்டன்மையெனவும், பொருள்பட வருதலால் மைவிகுதி தன்மைப்பொருளுணர்த்து மெனக்கொள்க.

௮௬ பெயர்ப்பகுபதங்களிலேபகுதிக்கும், விகுதிக்கும், இடையில் இடைநிலை, சாரியை, சந்தி, விகாரங்களும், சிறுபான்மை வரும்.

௮௭ பெயர்ப்பகுபதவிடைநிலைகள் அப்பெயர்ப் பகுபதங்களிலே பகுதிக்கும், விகுதிக்கும், இடையிலே சாரியை சந்தி விகாரங்களை யொழித்தொழிந்து நிற்பனவாம். (உ-ம் அறிஞன், வலைசி, வண்ணாத்தி, எனவரும். இவைமுறையே, ஞகர, சகர,

தகர, வேறுபாடுடன் பெற்றன.

சாரியைசந்திவிகாரங்கள் இருபான்மையும் வரும் அவற்றைப் பகுபதமுடிக்குமிடத்துக் கண்டுகொள்க.

அஅ. இப்பகுபதங்கள் பகுதிவிகுதி முதலியவுறுப்புக்களாலே முடியுமாறு.

பொன்னன் என்னும் பொருட்பெயர்ப் பகுபதம் பொன் என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும், பெற்றுத் தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்த மெய்ம்முன் உயிர்வந்தால் அம்மெய் இரட்டிக்குமென்பதினாலே பகுதியீற்று னகரமிரட்டித்து இரட்டித்த னகரமெய்யின்மேல் விகுதி அகரமேறிமுடிந்தது.

நிலத்தன் என்னும் இடப்பெயர்ப் பகுபதம் நிலம் என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும், அத்துச்சாரியையும், பெற்றுப் பகுதியீற்று மகரமெய்யுஞ் சாரியையின் முதலை அகரமுங்கெட்டு உயிர்வரிற் குற்றியலுகரங்கெடும் என்பதினாலே சாரியையீற்று உகரமுங்கெட உகரங்கெட்டுநின்ற தகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறிமுடிந்தது.

வேனிலான் என்னுங் காலப்பெயர்ப் பகுபதம் வேனில் என்னும் பகுதியும், ஆன் என்னும் விகுதியும், பெற்றுப் பகுதியீற்று லகரமெய்யின்மேல் விகுதி ஆகாரமேறி முடிந்தது.

தோளன் என்னுஞ் சினைப்பெயர்ப் பகுபதம் தோள் என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும், பெற்றுப் பகுதியீற்று ளகரமெய்யின்மேல் விகுதி அகரமேறி முடிந்தது.

பெரியன் என்னும் பண்புப்பெயர்ப் பகுபதம் பெரு என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும், பெற்றுப் பகுதியீற்று உகரம் இகரமாய்த் திரிந்து யகரவுடம்படுமெய் தோன்றப்பெற்று அவ்வுடம்படுமெய்யின்மேல் விகுதி அகரமேறி முடிந்தது.

நடையன் என்னுந் தொழிற்பெயர்ப் பகுபதம் நடை என்னும் பகுதியும், அன் என்னும் விகுதியும், பெற்று யகரவுடம்படுமெய் தோன்றப்பெற்று அவ்வுடம்படுமெய்யின்மேல் விகுதி அகரமேறி முடிந்தது.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்.

நன்மை என்னும் பண்புப்பெயர்ப் பகுபதம் நல் என்னும் பகுதியும், மை என்னும் விகுதியும், பெற்று மெல்லினம்வரின் லகரம் னகரமாய்த் திரியுமென்பதினாலே பகுதியீற்று லகரம் னகரமாய்த் திரிந்து முடிந்தது.

நடத்தல் என்னுந் தொழிற்பெயர்ப் பகுபதம் நட என்னும் பகுதியும், தல் என்னும் விகுதியும், பெற்று அகரவீற்றின்முன் வரும்வல்லின மிகுமென்பதினால் விகுதிமுதல தகரமிரட்டித்து முடிந்தது.

எழுத்துஎன்னுஞ்செயப்படுபொருட்பெயர்ப்பகுபதம் எழு என்னும்பகுதியோடு செயப்படுபொருளையுணர்த்தும் ஐவிகுதிபுணர்ந்து விகுதிஐகெட்டுகெட்டவிடத்துத் தகரமிரட்டித்து முடிந்தது.

காய் என்னும் வினைமுதற் பொருட்பெயர்ப்பகுபதம் காய் என்னும் பகுதியோடு வினைமுதற் பொருளை யுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து அவ்விகுதி கெட்டுமுடிந்தது. மற்றைய பகுபதங்களையுமிவ்வாறே முடித்துக்கொள்க.

௮௯. சுட்டுப்பெயர்கள் - அ, இ, உ, என்னும் இடைச்சொற்களடியாகவும், வினாப்பெயர்கள் - எ, யா, ஏ, என்னும் இடைச்சொற்களடியாகவுந், தோன்றி, அன், அள், அர், து, வை, என்னும் ஐம்பால் விகுதிகளை இறுதியிற் பெற்றுப் படர்க்கைக்குரியனவாய்வரும். (உ-ம்.)

அவன், இவன், உவன்,
அவள், இவள், உவள்,
அவர், இவர், உவர், } எ-ம்,
அது, இது, உது,
அவை, இவை, உவை,

எவன், யாவன், ஏவன்,
எவள், யாவள், ஏவள்,
எவர், யாவர், ஏவர், } எ-ம், வரும்.
எது, யாது, ஏது,
எவை, யாவை, ஏவை,

௯0. வினையாலணையும் பெயர்கள் பொருள்களின் றொழிலை யுணர்த்தி நின்ற முற்றுவினைச்சொற்கள் அப்பொருள்களுக்குப் பெயர்களாய், ஐம்பால் மூவிடங்க

ளில் ஒவ்வொன்றற் குரியனவாய் ஈறுதிரி
ந்தும், திரியாமலும், வருவனவாம்.

முற்றுவினைச் சொற்க ளென்றதனு
லேகாலத்தையுணர்த்திவருமென்றும் பெ
யர்களாய் என்றதனாலே வேற்றுமையுருபு
களையேற்றுவருமென்றும், அறிந்துகொள்க

(உ-ம்.)

நடந்தேனை, நடந்தேமை, எ-ம்,
நடந்தாயால், நடந்தீரால், எ-ம்,
நடந்தானுக்கு, நடந்தவனுக்கு, எ-ம்,
நடந்தாளை, நடந்தவளை, எ-ம்,
நடந்தாரை, நடந்தவரை, எ-ம்,
நடந்ததை, நடக்கின்றதை, எ-ம்,
நடந்தனவற்றை, நடப்பனவற்றை, எ-ம்,
உருந.

௬௧. விகுதி பெறுமல் உயர்திணை-அ
ஃறிணைகளில் ஆண்பால் பெண்பால்களை
யுணர்த்திவரும் பெயர்களுஞ் சிலவுண்டு.

அவைவருமாறு.

நம்பி, விடலை, கோ, வேள், ஆடூஉ, என
வருவன உயர்திணையில் ஆண்பாலை யுணர்
த்திவரும் பெயர்களாம்.

மாது, தையல், மகடூஉ, நங்கை, எனவருவன உயர்திணையிற் பெண்பாலையுணர்த்திவரும் பெயர்களாம்.

கடுவன், ஒருத்தல், போத்து, கலை, சேவல், ஏறு, எனவருவன அஃறிணையில் ஆண்பாலையுணர்த்தி வரும் பெயர்களாம்.

பிடி, பிணை, பெட்டை, மந்தி, பிணா, எனவருவன அஃறிணையிற் பெண்பாலையுணர்த்திவரும் பெயர்களாம்.

அன்றியும், ஆண்பால் பெண்பால் இரண்டற்கும் பொதுப்பெயரா யிருக்கின்ற சிலவிலங்கின் பெயர்கள்- ஆண்யானை, ஆண்புலி, எ-ம், பெண்யானை, பெண்புலி, எ-ம், ஆண் பெண் என்பவற்றோடுசேர்ந்து ஆண்பாலையும், பெண்பாலையும், உணர்த்தி வருமென்றும், மரப்பெயர்களுட்சில ஆண்பனை, பெண்பனை, என ஆண்பெண் என்பவற்றொடுசேர்ந்து ஆண்பாலையும் பெண்பாலையும், உணர்த்தி வருமென்றுங் கொள்க.

௬௨. தந்தை, தாய், சாத்தன், கொற்றன், சாத்தி, கொற்றி, ஆண், பெண், தான், தா

ம், எனவரும்பெயர்கள் உயர்திணை அஃறிணை இரண்டற்கும்பொதுப்பெயர்களாம்.

(உ-ம்)

தந்தையவன், தந்தையவ்வெருது, தாயிவள், தாயிப்பசு, சாத்தனவன், சாத்தனவ்வெருது, கொற்றனவன், கொற்றனவ்வெருது, சாத்தியவள், சாத்தியப்பசு, கொற்றியவள், கொற்றியப்பசு, ஆண்வந்தான், ஆண்வந்தது, பெண்வந்தாள், பெண்வந்தது, அவன்றான், அவடான், அதுதான், அவர்தாம், அவைதாம், எனவரும்.

௩௫. ஒருவர், பேதை, ஊமை, செவியிலி, காதறை, எனவரும்பெயர்கள் உயர்திணைஆண்பால், பெண்பால், இரண்டற்கும், பொதுப்பெயர்களாம். (வ-று)

ஆடவரு ளொருவர்வந்தார், பெண்டிருளொருவர்வந்தார், பேதையவன், பேதையவள், ஊமைவந்தான், ஊமைவந்தாள், செவியிலிபோனான், செவியிலிபோனாள், காதறைநின்றான், காதறைநின்றாள், எனவரும்.

இவைகளுட் சில செவியிலிவந்தது, காதறைநின்றது, என அஃறிணை யிடத்தும்வருமெனக்கொள்க.

௬௪ எல்லாமென்னுஞ்சொல் நாமெல்லாம், நீயெல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம், என மூவிடத்திற்கும்பொதுப் பெயராம்.

௬௫ காரணப்பெயர்களுள் ஆகுபெயர் ஒருபொருளினியற்பெயர் அப்பொருளிற்குச்சப்பந்தமாகியபிறிதொருபொருளிற்கு ஆகிவருப்பெயராம். (வ-று.)

| | | |
|---|---|---|
| காரறுத்தது, | வெற்றிலை நட்டான், | என |
| உலகம்புகழ்ந்தது, | நீலஞ்சூடினாள், | வரும் |

காரறுத்தது என்பதில்- காரென்னுங் காலத்தின்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்காயிற்று.

வெற்றிலை நட்டான் என்பதில்- வெற்றிலையென்னும் அவயவப்பெயர் அதன்முதலுக்காயிற்று.

உலகம் புகழ்ந்தது என்பதில் - உலகமென்னுமிடப்பெயர் அதில்வாழ்பவருக்காயிற்று.

நீலக்குவளைமலர்ன்பதில் - நீலமென்
னுநிறப்பெயர் அந்நிறத்தை யுடைய
ஓர் பூவிற்காயிற்று.

இப்படி யொன்றன்பெயரொன்றற்
காகி வருபவைக ளெல்லாம் ஆகுபெயரெ
ன்று அறிந்துகொள்க.

இவற்றின் விகற்பங்களெல்லாந் தொ
டர்மொழி பரிகாரத்துள் விரித்துக்கூறப்
படும். அங்குக்கண்டுகொள்க.

௬௯ இப்பெயர்களேற்றுவரும் வே
ற்றுமையுருபுகள் - முதலாவது, இரண்டா
வது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது,
ஆறாவது, ஏழாவது, எட்டாவது, என எண்
வகைப்படும்.

௬௯ முதல் வேற்றுமையினது உரு
பாவது திரிபில்லாத பெயரேயாம்.

இது எழுவாய் வேற்றுமை யெனவு
ம், பெயர்வேற்றுமை யெனவும், பெயர்
பெறும்.

இது வினையையும், பெயரையும், வி
னாவையும், கொள்ளும்.

(உ-ம்)

சாத்தன்வந்தான், எ-ம்,
சாத்தனிவன், எ-ம், } வரும்.
சாத்தன்யார், எ-ம்,

இத்திரிபில்லாதபெயர், தன்னைத்தானே வினைமுதற் பொருளாக வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட வினைமுதற்பொருளே இதன்பொருளாம்.

வினைமுதற்பொருளாவது தன்புடைபெயர்ச்சியாகிய தொழிலிற் சுதந்தரமுடையபொருளாம். (உ-ம்)

சாத்தன் வந்தான் என்பதில் சாத்தனென்பது தன்புடைபெயர்ச்சியாகிய வருகைத்தொழிலிற் சுதந்தரமுடையபொருளாதல்காண்க.

வினைமுதல், கருத்தா, செய்பவன், என்பன ஒருபொருட்சொற்கள்.

இவ்வெழுவாய்க்கு வேற்றுருபு இல்லையாயினும், ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்பவன், முதலிய வைம்பாற்சொற்

# பெயர்ச்சொல்லியல்

களுஞ் சொல்லுருபாகவரும்.

(உ-ம்)

சாத்தனானவன்வந்தான்,
சாத்தியானவள்வந்தாள்,
சாத்தரானவர்வந்தார்,
மரமானதுவளர்ந்தது,
மரங்களானவைவளர்ந்தன, } என வரும்

மற்றவைகளுமிப்படியே.

௯அ. இரண்டாம்வேற்றுமையினது உருபு, ஐ, ஒன்றுமேயாம்.

இது வினையையும், வினைக்குறிப்பையும், கொள்ளும்.

இவ்வுருபு தன்னையேற்ற பெயர்ப்பொருளை ஆக்கப்படுபொருளும், அழிக்கப்படுபொருளும், அடையப்படுபொருளுமாகிய செயப்படுபொருளாக வேறுபடுத்தும். அப்பெயர்ப்பொருள் வேறுபட்ட செயப்படுபொருளே இதன்பொருளாம்.

செயப்படுபொருளாவது, வினைமுதற்றொழிற்பயனுறுவது.

(உ-ம்)

வீட்டைக்கட்டினான்,
மரத்தைவளர்த்தான், } ஆக்கல்.

வீட்டையிடித்தான்,
மரத்தைவெட்டினான், } அழித்தல்

ஊரையடைந்தான்,
பொன்னையுடையான், } அடைதல்

வீட்டைக் கட்டினான் என்னுமிடத்துக் கல்லடுக்கல் முதலியன வினைமுதற் றொழில், வீடாகுகை அத்தொழிற்பயன், அப்பயனுறுவது வீடாதலால் வீடு செயப்படுபொருளாம்.

மரத்தை வளர்த்தான் என்னுமிடத்து நீர்பெய்தல் முதலியன வினைமுதற் றொழில், பருத்தல் தளிர்த்தல் முதலியன அத்தொழிற்பயன், அப்பயனுறுவது மரமாதலால் மரஞ் செயப்படுபொருளாம்.

வீட்டை யிடித்தான் என்னுமிடத்து வீட்டையிடித்தல் வினைமுதற் றொழில், அதனது உருவுகுலைதல் அத்தொழிற்பயன், அப்பயனுறுவது வீடாதலால் வீடு செயப்படுபொருளாம்.

மரத்தை வெட்டினான் என்றவிடத்து வாளைப்பற்றிவீசுதல வினைமுதற்றொழில், மரமறுகை அத்தொழிற்பயன், அப்பயனுறுவது மரமாதலால் மரஞ் செயப்படுபொருளாம்.

ஊரையடைந்தான் என்றவிடத்து நடந்து செல்லுதல் வினைமுதற்றொழில், ஊரைச்சேர்தல் அத்தொழிற்பயன், அப்பயனுறுவது ஊராதலால் ஊர் செயப்படுபொருளாம்.

பொன்னையுடையானென்றவிடத்துச் சம்பாதித்தல் வினைமுதற்றொழில், தனதாகுகை அத்தொழிற்பயன், அப்பயனுறுவது பொன்னாதலாற் பொன் செயப்படுபொருளாம்.

அன்றியும், விடயமும், இயற்றும்வினைமுதலும், செயப்படுபொருளாயும் வரும். (உ-ம்)

தருமத்தை விரும்பினான், கல்வியையறிந்தான், என்பவைகளில் விரும்புதலு மறிதலுமாகிய வினைமுதற் றொழிற்கு வி

டயமாகிய தருமமுங், கல்வியுஞ், செயப்படுபொருளாய்வந்தன.

அரசன்பகைவனைச்சிறைச்சாலையையடைவித்தான்-சாத்தன்கொற்றனைப்போக்கினான்-என்பவைகளில் அடைதல்வினைக்கு இயற்றும் வினைமுதலாகிய பகைவனென்பதூஉம், போதல்வினைக்கு இயற்றும் வினைமுதலாகியகொற்றனென்பதும், ஐயுருபேற்றுச் செயப்படுபொருளாய்வந்தன.

௧௧ மூன்றாம்வேற்றுமையினுடைய உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, என்பவைகளாம்.

இவை வினையைக்கொள்ளும்.

இவ்வுருபுகளில் ஆல், ஆன், என்னுமிரண்டுருபுகளும் தம்மையேற்ற பெயர்ப்பொருளை வினைமுதற்பொருளாகவும் கருவிப்பொருளாகவும், வேறுபடுத்தும். அவை வேறுபட்ட வினைமுதற் பொருளும், கருவிப்பொருளும், இவ்வுருபுகளின் பொருள்களாம்.

அப்பொருள்களிரண்டில் வினைமு

தற்பொருள் இயற்றும்வினைமுதல், ஏவும் வினைமுதல், என இருவகைப்படும்.

இயற்றும் வினைமுதலாவது கருவியைத் தொழிற்படுத்துவது (உ-ம்) தச்சனாற்கோயில்கட்டப்பட்டது எனவரும்.

ஏவும்வினைமுதலாவது அவ்வியற்றும் வினைமுதலினது தொழிலையுண்டாக்குந்தொழிலையுடையது. (உ-ம்) அரசனாற் கோயில கட்டுவிக்கப்பட்டது. எனவரும்.

எழுவாயில்வரும் வினைமுதல் தன்விகுதிவினையால்முடியும். இம்மூன்றும்வேற்றுமையில்வரும் வினைமுதல் செயப்படுபொருள் விகுதிவினையால் முடியும்.

(உ-ம்) சாத்தன்வந்தான் எ-ம், தச்சனாற்கோயில் கட்டப்பட்டது எ-ம்,வரும்.

கருவிப்பொருளாவது வினைமுதற்றொழிற்பயனைச் செயப்படு பொருளிற் சேர்ப்பது. (உ-ம்.)

வாளாலேமரத்தைவெட்டினான் என்னுமிடத்துவாளைப்பற்றிவீசுதல் வினைமுதற்றொழில், அத்தொழிலின்பயன் மரம

ழுவகை, அப்பயனை மசமாகிய செயப்படு
பொருளிற்சேர்க்கைபாலவானகருவியாம்.

அக்கருவி முதற்கருவி, துணைக்கரு
வி, என விருவகைப்படும்.

முதற்கருவியாவது செயப்படுபொ
ருளோடு ஒற்றுமைப்படுவது உ-ம்) மண்
ணாற்செய்தகுடம் எனவரும்.

துணைக்கருவியாவது அம்முதற்கரு
விகாரியப்படுமளவும் உடனிகழ்வது உ-ம்)
தண்டசக்கரங்களாற் குடத்தை வனைந்தா
ன். எனவரும்.

ஓடு, ஒடு, என்னுமுருபுகள் தம்மை
யேற்ற பெயர்ப்பொருளை உடனிகழ்ச்சி
ப்பொருளாக வேறுபடுத்தும் அவைவே
றுபட்ட உடனிகழ்ச்சிப்பொருளே அவ்
வுருபுகளின் பொருளாம்.

உடனிகழ்ச்சிப்பொருளாவது வினை
கொள்ளும்முடிபுப் பொருளினது தொழிற்
போன்ற தொழிலையுடைய பொருளாம்.

(உ-ம்)

தந்தையோடு மைந்தன் வந்தான் என்
னுமிடத்து மைந்தன் வினைகொண்டு மு

டியும்பொருளாம், வருதல் அப்பொருளி
ன்றொழிலாய், அத்தொழிற்போன்றதொ
ழிலைவருதலாம் அத்தொழிலைத் தன்னிடத்
தும் உடனிகழ்வதாகவுடைய பொருள் த
ந்தை யாதலால் தந்தை யுடனிகழ்ச்சிப்
பொருளாம்.

இந்தான் குருபுகளுள் ஆல், ஆன்,
உருபுகள் நிற்றற்குரியவிடத்துக் கொண்
டென்பதும், ஒடு ஓடு உருபுகள் நிற்றற்
குரியவிடத்து உடனென்பதும், சொல்லு
ருபுகளாகவரும். (உ-ம்) வாள்கொண்டுவெ
ட்டினான் எ-ம், தந்தையுடன் மைந்தன் வ
ந்தான் எ-ம், வரும். மற்றவைகளு மிப்ப
டியே.

௫. நான்காம்வேற்றுமையினது உரு
பு குவ்வொன்றுமேயாம்.

இது வினையையும், வினையொடுபொ
ருந்துப்பெயரையும், கொள்ளும்.

இக்குவ்வுருபு தன்னையேற்றபெயர்
ப்பொருளை ஏற்றுக்கொள்ளுதற் பொரு
ளாகவும், முதற்காரணகாரியப்பொருளா
கவும், நிமித்தகாரண காரியப் பொருளாக

வும், பகைதொடர்பொருளாகவும், நட்புத்தொடர்பொருளாகவும், தகுதிப்பொருளையுடையபொருளாகவும், முறைக்கிளைபொருளாகவும், உற்பாதத்தாற்குறிக்கப்பட்டபொருளாகவும், வேறுபடுத்தும். அப்பெயர்ப்பொருள் வேறுபட்ட ஏற்றுக்கொள்ளுதற்பொருள் முதலியன இவ்வுருபின்பொருள்களாம்.

(உ-ம்)

இரப்பவனுக்குப் பொன்னைக்கொடுத்தான் எ-ம், முடிக்குச்சேர்த்துவைத்தபொன் எ-ம், கூலிக்குச்செய்வது குற்றேவல் எ-ம், பாம்புக்குப்பகையாயுள்ளது கருடன் எ-ம், சாத்தனுக்கு நட்பாளனாயிருப்பவன் கொற்றன் எ-ம், அரசர்க்குரித்தருங்கலம் எ-ம், சாத்தனுக்கு மகனாயினானிவன் எ-ம், மழைக்குக் குறியாயுள்ளது மின்னல் எ-ம், வரும்.

இவைகளில் இரப்பவனுக்குப் பொன்னைக்கொடுத்தான் என்பதில் ஒருவனாற் கொடுக்கப்பட்ட பொன்னைத் தனக்குரியதாக்கிக்கொள்ளும்பொருள் இரப்பவனுக்கு-

லா) ரப்பவனேற்றுக்கொள்ளுதற்பொ
ருளாம்.

குண்டலத்திற்றுளைவைத்தபொன் என்பதிற் பொன்முதலிய முதற்காரணத்தாலாகிய காரியப்பொருள் குண்டலமாதலாற் குண்டல முதற்காரணகாரியப்பொருளாம்.

கூழிற்குச் செட்டவரற்றுமேறவல், என்பதிற் புறமேயவென்னு நிமித்தகாரணத்தாலாம்பகாரியங் கூழாதலாற் கூழ் நிமித்தகாரணகாரியப்பொருளாம்.

பாம்புக்குப் பகையாயுள்ளது கருடன் என்பதிற் கருடனிடத்துள்ள பகைமைதொடர்ந்த பொருள் பாம்பாதலாற் பாம்பு பகைதொடர்பொருளாம்.

சாத்தனுக்கு நட்பானு யிருப்பவன் கொற்றன் என்பதிற் கொற்றனிடத்துள்ள நட்பைத்தொடர்பொருள் சாத்தனாதலாற் சாத்தனட்புத்தொடர்பொருளாம்.

அரசர்க்குரித் தருங்கலம் என்பதில் அருங்கலமென்னுந் தற்கிழமைப்பொருட்குத் தகுதியான பொருளையுடைய

பொருள் அரசராதலால் அரசக்குறிப் பொருளையுடைய பொருளாம்.

சாத்தனுக்கு மகனாயினானிவன் என்பதில் மகனாதலாகிய முறைமைச்சொற்றனியையும் பொருளாதலாற் சாத்தன் முறைக் கிளையபொருளாம்.

மழைக்குக் குறியாயுள்ளதாமின்னல் என்பதின் மின்னலாகிய உற்பாதத்தாற் குறிக்கப்பட்டபொருள் மழையாதலான் மழை உற்பாதத்தாற் குறிக்கப்பட்டபொருளாம்.

அன்றியும், நல்லோர்க்குச் செல்வமுண்டாகுக எனவாழ்த்தலின் நன்மை தொடர்பொருளும், தீயோர்க்குக் கேடுண்டாகுக எனவைதலிற் தீமை தொடர்பொருளும், பிறவுமிவ்வுருபின்பொருளாய்வருமெனவுங்கொள்க.

இக்குவ்வுருபு சிற்சிற்சில இடங்களில் பொருட்டு, நிமித்தம், என்பனவும், குவ்வுருபின் மேல் ஆக என்பதும், சொல்லுருபுகளாகவரும். (உ-ம்.)

கூலியின்பொருட்டுவேலைசெய்தான் எ-ம், கூலியினிமித்தம் வேலைசெய்தான் எ-ம், கூலிக்காகவேலைசெய்தான் எ-ம், வரும்.

௯௧ ஐந்தாம் வேற்றுமையினுடைய உருபுகள் இன், இல், என்பனவாம்.

இவை வினையையும், வினையோடு பொருந்தும்பெயரையும், கொள்ளும்.

இவ்வுருபுகள் தம்மையேற்றபெயர்ப்பொருளை நீக்கப்பொருளாகவும், ஒப்புப்பொருளாகவும், எல்லைப்பொருளாகவும், ஏதுப்பொருளாகவும், வேறுபடுக்கும். அப்பெயர்ப்பொருள் வேறுபட்ட நீக்கப்பொருள்முதலியன இவ்வுருபுகளின்பொருள்களாம்.

நீக்கப்பொருளாவது பிரிவையுண்டாக்குந்தொழிலின்றிப் பிரிவைமாத்திரந் தன்னிடத்துடையபொருளாம். (உ-ம்.)

மலையின்வீழருவி என்பதில் அருவியின்வீழ்தலாகிய பிரிவையுண்டாக்குந்தொழில், அதுதன்னிடத்தில்லாமல் அவ்வீழ்தலாலுண்டாகிய பிரிவைமாத்திரந் தன்னி

ட்க்குடைய பொருள் மலையாதலால் மலை நீக்கப்பொருளாம்.

ஒப்புப் பொருளாவது உபமேயப் பொருளிலுந் தன்னிலுமிருக்கிற பொதுத்தன்மையால் உபமானமாகும் பொருளாம். (உ-ம்)

பாலின்வெளிது கொக்கு என்பதில் கொக்கு உபமேயப்பொருளாம், அவ்வுபமேயப் பொருளிலும் தன்னிலு முள்ள பொதுத்தன்மை வெண்மையாம், அப்பொதுத் தன்மையால் உபமான மாகிய பொருள் பாலாதலாற் பால ஒப்புப்பொருளாம்.

எல்லைப் பொருளாவது அறியப்படாதபொருளினது திசைமுதலிய வைகளை யறிவித்தற்கு எல்லையாய்நிற்கும் பொருளாம். (உ-ம்)

கச்சியின் வடக்குள்ளது திருத்தணிகை என்பதில அறியப்படாத திருத்தணிகையினது திசையையறிவித்தற்கு அறியப்பட்டபொருளாகிய கச்சி எல்லைப்பொருளாதலாற் கச்சி எல்லைப்பொருளாம்.

அன்றியும் இவ்வெல்லைப்பொருள்
கச்சியின் முக்காவதத்துள்ளது திருத்தணி
கை எனவழியளவிலும், அவனிலும் இரண்
டாண்டு மூத்தவனிவன் எனக்காலவளவிலு
ம், வருதல் காண்க.

ஏதுப்பொருளாவது தொடரும்
பொருளின் பெருமை முதலியவற்றிற்கு
ஏதுவாகும்பொருளாம். (உ-ம்)

கல்வியிற்பெரிய னகத்தியன் என்ப
தில் தொடரும்பொருளாகிய அகத்தியன
து பெருமைக்குக் கல்வி ஏதுவாதலாற் கல்
வி ஏதுப்பொருளாம்.

அல்லாமலும் கடவுளிற் றோன்றிய
துலகம் என முதற்காரணப் பொருளிலு
ம், மண்ணுலகின் வேறு விண்ணுலகம் என
வேற்றுமைக்கு எதிர்ப்பொருளிலும், வரு
தல் முதலியனவுங் கொள்க.

இன், இல், உருபுகளின்மேல் நின்று
இருந்து என்பவை உம்பெற்றும் பெறா
மலுஞ் சொல்லுருபுகளாய் வரும். உ-ம்.
ஊரினின்று போயினன், ஊரினின்றும்

போயினான், ஊரிலிருந்து போயினான், ஊரிலிருந்தும்போயினான், எனவரும்.

௭௨. ஆறாம் வேற்றுமையினுடைய உருபுகள் அது, ஆது, அ, என்பனவாம்.

இவைகளில் அது, ஆது, உருபுகள் அஃறிணை யொருமைப் பெயராயும், அ உருபு அஃறிணைப்பன்மைப் பெயராயும், (கொள்ளும். உ-ம்) சாத்தனதுகை, தனதுகை, தனகைகள், எனவரும்.

இவ்வுருபுகள் தம்மையேற்றபெயர்ப் பொருள்களைச் சம்பந்தப் பொருளாக வேறுபடுத்தும். அப்பெயர்ப்பொருள் வேறுபட்டசம்பந்தப்பொருளே இவ்வுருபுகளின்பொருளாம்.

சம்பந்தப் பொருளாவது வருமொழிப்பொருளாகிய தற்கிழமைப் பொருளொடும், பிறிதின்கிழமைப்பொருளோடும், சம்பந்தமுடையபொருளாம்.

அவைகளிலே தற்கிழமைப்பொருளாவது தன்னொடு ஒற்றுமையுடையது.

அது உறுப்பும், பண்பும், தொழி லும், ஒற்றுமைக்கூட்டமும், பலவினீட்டமு ம், ஒன்றுதிரிந்தொன்றானதும், என அறு வகைப்படும். (உ-ம)

சாத்தனதுகை எ-ம்,
சாத்தனதுகருமை எ-ம்,
சாத்தனதுவரவு எ-ம்,
நெல்லதுகுப்பை எ-ம்,
சேனைபதுதொகுதி எ-ம்,
நெல்லினதுபொரி எ-ம்,
} வரும்.

பிறிதின்கிழமைப் பொருளாவது த ன்னின்வேறாயது.

அது பொருள், இடம், காலம், என மூன்றுவகைப்படும். (உ-ம)

முருகனதுவேல் எ-ம்,
முருகனதுமலை எ-ம்,
மாரனதுவேனில் எ-ம்,
} வரும்.

இவ்வுருபுகள் நிற்றற்குரியவிடங்களி ல் உடையவென்பது சொல்லுருபாக வ ந்து இருதிணைப்பொருமைபன்மைப் பெ

ர்களையுங்கொள்ளும். (உ-ம்)

சாத்தனுடையபுதல்வன்,
சாத்தனுடையபுதல்வர்,
சாத்தனுடையவீடு,
சாத்தனுடையவீடுகள்;

அன்றியுஞ் சிறுபான்மை அது உருபு அரனது தோழன், நினதடியாரோடல்லால், என உயர்திணை யொருமைபன்மைப்பெயர்களையுங்கொள்ளுமெனவும் அறிக.

௫௯. ஏழாம் வேற்றுமையினுடைய உருபுகள் கண், இல், உள், இடம், முதலியனவாம்.

இவை வினையையும், வினையோடுபொருந்தும் பெயரையுங் கொள்ளும்.

இவ்வுருபுகள் தம்மையேற்றபொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னுமறுவகைப் பெயர்ப்பொருள்களையும் இடப்பொருளாக வேறுபடுத்தும். அப்பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இடப்பொருளே இவ்வுருபுகளின் பொருளாம்.

இடப்பொருளாவது வருமொழிப் பொருளாகிய தற்கிழமைப்பொருளுக்கா வது பிறிதின்கிழமைப் பொருளுக்காவது இடமாய்நிற்கும்பொருளாம். (உ-ம்)

மணியின்கணிருக்கின்றவொளி, த. } பொருளிடம்.
பனையின்கண்வாழ்கின்றதன்றில், பி. }

ஊரின்கணிருக்குமில்லம், த. } இடமிடம்.
ஆகாயத்தின்கட்பறக்கின்றதுபருந்து, பி. }

நாளின்கணுழிகாலுள்ளது, த. } காலவிடம்.
வேனிற்கட்பாதிரிபூக்கும், பி. }

கையின்கணுள்ளதுவிரல், த. } சினையிடம்.
கையின்கண்விளங்குகின்றதுகடகம் பி. }

கறுப்பின்கண்மிக்குள்ளதழகு, த. } குணவிடம்.
இளமையின்கண்வாய்த்ததுசெல்வம், பி. }

ஆடற்கணுள்ளதுசதி. த, } தொழிலிடம்.
ஆடற்கட்பாடப்பட்டதுபாட்டு. பி, }

எனவரும்மற்றவைகளுமிப்படியே

இவ்விடப்பொருள் வினைமுதல்வழி யாக வினைமுதற்றொழிற்காவது, செயப் படுபொருளின் வழியாகச் செயப்படு பொருளிலிருக்கின்ற பயனுக்காவது இடமு

[illegible]கும்பொருளெனவும்படும். (உ-ம்)

மணியின்கணிருக்கின்றதொளி என்னுமிடத்து ஒளியென்னும் வினைமுதலின்வழியாக அதனை இருத்தற்றொழிற்கு மணி இடமாயிற்று கழுவின்கட்கள்வனை யேற்றினான் என்னுமிடத்துக் கள்வனென்னுஞ் செயப்படுபொருளின்வழியாக அச்செயப்படுபொருளி லிருக்கின்ற உயிர்ப்பிரிவாகியபயனுக்குக் கழு இடமாயிற்று.

௬௪. எட்டாம்வேற்றுமையினுடைய உருபுகள் படர்க்கைப் பெயரீற்றில் ஏ, ஓ, முதலியவை மிகுதலும், அவ்வீறுதிரிதலும், கெடுதலும், இயல்பாதலும், ஈற்றயலெழுத்துத்திரிதலும் ஆம்.

இவை ஏவல் வினையைக் கொள்ளும்.

இவ்வுருபுகள் தம்மையேற்ற பெயர்ப்பொருளை விளிக்கப்படுபொருளாகவேறுபடுத்தும். அப்பெயர்ப்பொருள்வேறுபட்ட விளிக்கப்படுபொருளே இவ்வுருபுகளின்பொருளாம்.

விளிக்கப்படுபொருளாவது படர்

க்கைப்பெயர்ப்பொருள் அழைத்துஎவல் படுவதாகும்பொருளாம். (உ-ம்.)

சாத்தனே கேளாய்
அப்பனே யுலகாளாய் } எ-ம்,
வேனிலாய்கூறாய் எ-ம்,
தோழிசொலலாய் எ-ம்,
பிதாவாராய் எ-ம்,
மக்காள்கூறீர் எ-ம்,

௱௫. நுமன், நுமள், நுமர், முதலிய கிளைப்பெயர்களும், எவன் முதலிய வினாப்பெயர்களும், அவன் முதலிய சுட்டுப் பெயர்களும், தான் தாம் என்னும் பொதுப்பெயர்களும், மற்றையான் பிறன்முதலிய மற்றுப்பிற என்பன அடியாக வரும்பெயர்களும், விளிகொள்ளாப் பெயர்களாம் இவையொழிந்த பெயர்களெல்லாம் விளிகொள்ளும் பெயர்களாம்.

௱௬. இவ்வேற்றுமையுருபுகள் சிறுபான்மை மயங்கி ஒன்றுநின்ற விடத்தில் மற்றொன்றும் வரும். (உ-ம்)

ஆலத்தை யமிர்தாக்கியகோன் என்ப

று ஆல்திரு லபிர்தாக்கியகோன் எ-ம், காலத்திற் செய்தநன்றி என்பது காலத்தி னாற்செய்தநன்றி எ-ம், மயங்கிவந்தன. ம ற்றவைகளு மிப்படியே இவைஇப்படிம யங்கிவரினும் பொருளுக் கேற்றபடியுரு பைத் திரித்துக்கொள்க.

௱எ. ஒருவேற்றுமைப்பொருள் ம ற்றொரு வேற்றுமையுருபோடுஞ்சிறுபா ன்மைவரும்.

சாத்தனோடுசேர்ந்தான், எனச்செய ப்படுபொருள் மூன்றனுருபோடும், மதுரையை நீங்கினான் என நீகப்பொருள் இ ரண்டனுருபோடும், மதுரைக்கு வடக்கு ச்சிதப்பரம் என எல்லைப்பொருள் நான்க னுருபோடும், வழியைச் செய்ஞான் என இடப்பொருள் இரண்டனுருபோடும், வந் தன. மற்றும் இப்படிவருவனவற்றை யா ராய்ந்தறிந்துகொள்க.

௱அ. சிலவிடங்களில் ஐயுருபுஇரண் டிணைந்துவரவும் பெறும்.

(உ-ம்)

யானையைக்காலைவெட்டினான்,
பசுவினைப்பாலைக்கறந்தான்,
ஆசிரியனையையுற்றபொருளைவினாவினான் } என வரும்

யானையைக் காலைவெட்டினான், பசுவினைப்பாலைக்கறந்தான், என்றாற்போல்வன யானையது காலைவெட்டினான், யானையைக்காலின்கண்வெட்டினான், பசுவினின்றும்பாலைக்கறந்தான், என இரண்டையுருபினுள் ஒன்று நீங்கி வேற்றுருபுவரவும் பெறும்.

ஆசிரியனை யையுற்றபொருளைவினாவினான் என்றாற் போல்வன இரண்டையுருபினுள் ஒன்று நீங்கவும் வேற்றுருபுவரவும்பெறா.

௱௧. செயப்படுபொருள் குன்றாத முதனிலைகளின்மேல் வி, பி, முதலிய பிறவினைவிகுதிகளுள் ஒன்றுவரும் வினைச்சொற்களிலே சிலமுடிக்குஞ்சொற்களாக வரின் அம்முதனிலைத்தொழிற்குரிய செயப்படுபொருளோடு இயற்றுதல்வினைமுதலும் இரண்டனுருபேற்று வருதலால் இர

னடுசெயப்படுபொருள்வரும். (உ-ம்)

அரசன்பகைவனைச் சிறைச்சாலையு ளடைவித்தான். எனவரும்.

அவ்வினைச்சொற்களுட் சிலமுடிக்கு ஞ்சொற்களாகவரின் இயற்றும் வினைமுதல் மூன்றனுருபேற்று வினைமுதற்பொரு ளில வருதலால அப்படி இரண்டுசெயப்ப டுபொருள்வாரா. (உ-ம்)

சாத்தனையனாற்பசுவைப்புரப்பித்தான் | எனவரும்
அரசனதேவதத்தனாற்சோற்றையடுவித்தான் |

ஈரய செயப்படுபொருள் குன்றிய முதனிலைகளின்மேல் வி, பி, முதலியபிற வினைவிகுதிகளு ளொன்றுவரும் வினைச் சொற்கள் முடிக்குஞ் சொற்களாக வரின் இயற்றும்வினைமுதலொன்றே இரண்டனு ருபேற்றுச் செயப்படுபொருளாகவரும்.

(உ-ம்)

சாத்தன்கொற்றனை நடப்பித்தான் } எனவரும்.
தாய்மகவைத்தூங்குவித்தாள், }

ஈரிக யான், நான், என்னுந்தன்மை யொருமைப்பெயர்களும் யாம், நாம், எ

மகாமகோபாத்தியாய

ன்னுந் தன்மைப்பன்மைப் பெயர்களும் ஐ முதலிய உருபேற்கு மிடத்து என்னை, என்னால் எ-ம், எம்மை, எம்மால எ-ம், விகாரப்பட்டுவரும்.

௱௰௨. நீ என்கிற முன்னிலை யொருமைப்பெயரும், நீர் முதலிய முன்னிலைப் பன்மைப்பெயர்களும், ஐ முதலிய உருபேற்குமிடத்து நின்னை, நின்னால், உன்னை, உன்னால எ-ம், நும்மை, நும்மால், உம்மை, உம்மால் எ-ம், விகாரப்பட்டுவரும்.

உலகவழக்கில்வரும் யாங்கள், நாங்கள், என்னுந் தன்மைப்பன்மைப்பெயர்களும், நீங்கள் என்னு முன்னிலைப்பன்மைப்பெயரும், உருபேற்குமிடத்து எங்களை எங்களால் எ-ம், உங்களை, உங்களால் எ-ம், விகாரப்பட்டுவரும்.

௱௰௩. தான், தாம், என்கிற படர்க்கைப்பெயர்கள் தன்னை, தன்னால், தம்மை, தம்மால, என விகாரப்பட்டுவரும்.

௱௰௪ உயிரையும், மெய்யையும், குற்றியலுகரத்தையும் ஈறாகவுடைய பெயர்

ச்சொற்கள் இன்னுருபொழிந்த உருபுக ளையேற்குமிடத்துப் பெரும்பாலும் இன் சாரியைபெறும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| கிளியினை | பொன்னினை | நாகினை |
| கிளியினால் | பொன்னினால் | நாகினால் |
| கிளியிற்கு | பொன்னிற்கு | நாகிற்கு |
| கிளியினது | பொன்னினது | நாகினது |
| கிளியின்கண் | பொன்னின்கண் | நாகின்கண் |

என வரும்.

இப்பெயர்கள் குவ்வுருபேற்குமிட த்துக்கிளியினுக்கு, நாகினுக்கு, என இன் சாரியையோடு உகரச்சாரியையும், பொன்றுக்கு, மன்றுக்கு, என இன்சாரியை யின்றி உகரச்சாரியையும், பெறுமெனவு ங்கொள்க. மற்றவைகளு மிப்படியே.

௱௰௫. அது இது உது எவ்வுஞ் சுட்டுப்பெயர்களும் எது எவ்வியாது எவ்வும் வினாப்பெயர்களும், உருபேற்குமிடத்து அன்சாரியையை, சிறுபான்மை இன் சாரியையும் பெறும். (உ-ம்.)

அதனை, அதனால், அதினால், இதனை, இதனால், இதினால், எதனை, எதனால், எதினால், எனவரும். மற்றவைகளுமிப்படியே.

இவை சிறுபான்மை அனை, இனை, எனை, எனச்சாரியைபெறுதலும்வரும்.

௱௰௬. அவை இவை உவை எவை கரியவை நெடியவை முதலிய ஐகாரவீற்று அஃறிணைப் பன்மைப்பெயர்கள் உருபேற்குமிடத்து ஈற்றையகாரங்கெட்டு அற்றுச்சாரியைபெறும். (உ-ம்).

அவற்றை, இவற்றை, உவற்றை, எவற்றை, கரியவற்றை, நெடியவற்றை, எனவரும். மற்றவுருபுகளோடு மிப்படியே ஒட்டிக்கொள்க.

அவையற்றை, இவையற்றை, எவையற்றை, எனச் சிறுபான்மை ஐகாரங்கெடாமல் அற்றுச்சாரியை பெறுமெனவுங் கொள்க.

௱௰௭. பல சில சிறிய பெரிய அரிய முதலிய அகரவீற்று அஃறிணைப்பன்மைப்பெயர்கள் உருபேற்குமிடத்து அற்றுச்சாரியைபெறும். (உ-ம்)

பலவற்றை, சிலவற்றை, சிறியவற்றை, பெரியவற்றை, அரியவற்றை, என

வரும். மற்ற வுருபுகளோடு மிப்படியே யொட்டிக்கொள்க.

௱௰௮. ஆ மா கோ என்னு மிம்மூன்று பெயர்களும் உருபேற்கு மிடத்து இன்சாரியையாவது னகரச்சாரியையாவது பெற்றும் இச்சாரியைகளைப் பெறாமலும் வரும். (உ-ம்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஆவினை | மாவினை | கோவினை | எ-ம் | உருப். |
| ஆனை | மானை | கோனை | எ-ம் | |
| ஆவை | மாவை | கோவை | எ-ம் | |

௱௰௯. மகரவீற்றுப் பெயர்ச்சொற்கள் உருபேற்குமிடத்து அத்துச்சாரியை பெறும். பெறுமிடத்து ஈற்றுமகரமும், சாரியைமுதல் அகரமுங்கெடும். (உ-ம்)

மரத்தை மரத்தால் மரத்துக்கு என வரும். அன்றியும் மரத்தினை, மரத்தினுல், என அவ்வத்துச்சாரியையின்மேல இன்சாரியையும், மரத்தினுக்கு எனக் குவ்வுருபு புணருமிடத்து அவ்விருசாரியையின்மேல் உகரச்சாரியையும்வரும்.

௱௨௰. எல்லாமென்னுஞ்சொல் அஃறிணைப்பொருளில் உருபேற்கு மிடத்து

ஈற்றுமகரங்கெட்டு அற்றுச்சாரியையுமு யர்திணைப்பொருளி லுருபேற்குமிடத்து நம்முச்சாரியையும்பெறும். (உ-ம்)

எல்லாவற்றையும். எல்லாவற்றாலும். எ-ம் }
எல்லாநம்மையும். எல்லாநம்மாலும் எ-ம் } [illegible]

௱௨௧. எல்லாமொன்றுஞ்சொல் உருபேற்குமிடத்துத்தம்முச்சாரியையும், எல்லீமொன்றுஞ்சொல் உருபேற்குமிடத்து நும்முச்சாரியையும், பெறும். (உ-ம்)

எல்லார்தம்மையும் }
எல்லீர்நும்மையும் } எனவரும்.

௱௨௨. இவ்வாறு உருபுபுணர்ச்சிக்குக்கூறிய முடிபுகள் உருபு தொக்கபொருட்புணர்ச்சிக்கண்ணும்வரும். (வ-று என்கை, எங்கை, நின்கை, உன்கை, நுங்கை, உங்கை, தன்கை, தங்கை, எ-ம், கிளியின்கால், கொக்கின்கண், பலவற்றுக்கோடு, ஆவின்கொம்பு, மரத்துக்கிளை, எல்லாவற்றுக்கோடும், எ-ம், வரும்.

---

பெயர்ச்சொல்லியல்-முற்றிற்று.

# வினைச்சொல்லியல்.

௱௨௩. வினைச்சொற்களாவன வேற்றுமையேலாமற் காலத்தைக்காட்டுவனவாய்ப்பொருளது, புடை பெயர்ச்சியாகிய தொழிலையுணர்த்திவருஞ் சொற்களாம்.

அத்தொழில்களாவன வினைமுதல், கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள், என்னு மிவ்வாறுங்காரணமாகவும், இவற்றுட் சிலகாரணமாகவும்வருவனவாம்.

(உ-ம்)

வனைந்தான் என்கிற விடத்துக் குசவனாகிய வினைமுதலும், மண்ணாகிய முதற்கருவியும், தண்டசக்கரமுதலாகிய துணைக்கருவிகளும், வனைந்தவிடமும், வனைதற்குச்செயலும், இறந்தகாலமும், குடமுதலியசெயப்படுபொருளும், ஆகிய, ஆறுகாரணங்களையுங்கண்டுகொள்க.

கொடியாடிற்று என்பதில் ஆடுதல் வினைக்குச்செயப்படுபொருள்குறைந்து வருதல்காண்க.

௱௨௯. இவ்வினைச் சொற்கள் பகுதி விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம், என்னுமிவ்வாறனுட் பின்னுள்பகுதிவிகுதி என்னும் இரண்டுமுதலாகப் பொருளமைதிக்கேற்ப உறுப்புகளைப்பெற்றுவினைப்பகுபதமெனப்பட்டுவரும். பகுதியெனினு முதனிலையெனினு மொக்கும். விகுதியெனினுமிறுதிநிலையெனினுமொக்கும்.

(உ-ம்)

கேளாய் என்பது கேள், ஆய், எனப்பகுதிவிகுதி இரண்டு பெற்றது. உண்டான் என்பது - உண், ட், ஆன், என அவ்விரண்டுடன் இடைநிலையும் பெற்றது. உண்டனன் என்பது-உண், ட், அன், அன், என அம்மூன்றுடன் சாரியையும்பெற்றது பிடித்தனன் என்பது - பிடி, த், த், அன், அன், என அந்நான்குடனே சந்தியும்பெற்றது. நடந்தனன் என்பது- நட, த், த், அன், அன், என அவ்வைந்தும்பெற்றுச் சந்தியாலுற்ற தகர வல்லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்றது.

௱௨௫. பகுதிகளாவன எல்லா வினையும் பிறப்பதற்கு மூலமாய் வினைப்பகுபதங்களிலே முதனிலையாய்வரும் பகாப்பதங்களாம்.

இம்முதனிலையாகிய பகாப்பதங்கள் அவையுண்டாக்கப்பட்ட காலந்தொடங்கி யொருதன்மையவாய்நிற்குந் தனிவினைப் பெயர்களாம்.

(உ-ம்)

| | | |
|---|---|---|
| நட, | நடந்தான் | எனவரும். |
| வா, | வந்தான் | |
| நில், | நின்றான் | |
| காண், | கண்டான் | |
| சா, | செத்தான் | |
| பேசு, | பேசினான் | |

௱௨௬. விகுதிகளாவன முற்றுப்பகுபதங்களில் இருதிணையையும், ஐம்பாலையும், ஈரெண்ணையும், மூவிடத்தையுமுணர்த்தியும், எச்சப் பகுபதங்களில் இவைகளை யுணர்த்தாமலும், இறுதிநிலையாய் வரும

வைகளாம். (உ-ம்)

| | | |
|---|---|---|
| நடந்தனன் | நடந்தான் | எ-ம் |
| நடந்தனள் | நடந்தாள் | |
| நடந்தனர் | நடந்தார் | |
| நடந்தது | நடந்தன | |

நடந்தேன் நடந்தேம் எ-ம்,
நடந்தாய் நடந்தீர் எ-ம்,
நடந்த நடக்கின்ற நடக்கும் எ-ம்,
நடந்து நடக்க நடக்கின் எ-ம்,
வரும்.

௱௨௭. இடைநிலைகளாவன அப்பகுபதங்களிலே பகுதிக்கும், விகுதிக்கும், நடுவிலே முக்காலங்களுளொன்றையுணர்த்தி வருபவையாம்.

௱௨௮. முக்காலங்களாவன இறப்பு, நிகழ்வு, எதிர்வு, என்பனவாம்.

இறப்பாவது தொழிலதுகழிவு. நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முடிவுபெறாதநிலைமை. எதிர்வாவது தொழிலபிறவாமை

௱௨௯. இறந்தகால விடைநிலைகளாவன த், ட், ற், இன், என்பனவாம்.

(உ-ம்)

நடந்தான் அடித்தான் எ-ம், }
கண்டான் கேட்டான் எ-ம், } வ
நின்றான் கொன்றான் எ-ம், } ரு
கூவினான் பேசினான் எ-ம், } ம்.

அன்றியும் இன்னிடைநிலை எஞ்சிய ஆனக்கடைக்குறைந்து, போனது என முதல்குறைந்தும் வரும் அன்றிப் போயது என யகரமெய் இறந்தகாலங் காட்டவும் வரும்.

௱௯௰. நிகழ்காலவிடைநிலைகளாவன இன்று, கிறு, ஆநின்று, என்பனவாம்.

(உ-ம்.)

நடக்கின்றான் கொடுக்கின்றான் எ-ம், | வ
நடக்கிறான் கொடுக்கிறான் எ-ம், | ரு
நடவாநின்றான் கொடாநின்றான் எ-ம், | ம்.

௱௯௧. எதிர்கால விடைநிலைகளாவன ப், வ், என்பனவாம். (உ-ம்),

நடப்பான் படிப்பான் எ-ம், }
செய்வான் வருவான் எ-ம், } வரும்.

௱௯௨. சாரியைகளாவன இடைச் சொல்லியலிலே கூறப்படுவன வாகிய

அன், அ, உ, கு, து, முதலியனவாம். (உ-ம்)

| | | |
|---|---|---|
| அன், | நடந்தனன் | சாரியை. |
| அ, | நடந்தது | |
| உ, | உண்ணுவான் | |
| கு, | உய்குவாய் | |
| து, | அடித்துக்கொண்டான் | |

௱௩௩. சந்திகளாவன இனிப்புணர்ச்சியதிகாரத்திற் சொல்லப் படுவனவாகிய தோன்றல், திரிதல், கெடுதல், என்பனவாம்.

௱௩௪. விகாரங்களாவன மெல்லின மெய்யை வல்லினமெய்யாக்கலும், வல்லினமெய்யை மெல்லினமெய்யாக்கலும், குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், இல்லாதவெழுத்தை வருவித்தலும், உள்ளவெழுத்தை நீக்கலும் ஆம். இச்சந்திவிகாரங்கள் பதமுடிப்புழிக் காட்டப்படும்.

௱௩௫. மேற்கூறிய வினைப்பகுதிகள் விகுதிமுதலியவற்றோடு புணருமிடத்துத் தொழு உண் என்னுஞ்சிலதொழுதான் உண்டான், எனஇயல்பாய் வருதலன்றிச்செல் கொள் என்பன சேறல் கோடல் என

நீண்டும், தா வா என்பன தந்தான் வந்தான் எனமுதற்குறுகியும், தருகின்றான் வருகின்றான் எனமுதற் குறுகுதலுடனே ருகர வுயிர்மெய் விரியப்பெற்றும், சா என்பது செத்தான் என ஆகாரம் எகரமாகத் திரிந்தும், விரவு என்பது விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு என்பது முழுகினான் மூழ்கினான் என இயல்பும் விகாரமுமாக வுறழ்ந்தும், கல் கேள் என்பன கற்றான் கேட்டான் எனவீற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும், நில் கொள் என்பன நின்றான் கொண்டான் எனவீற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத்திரிந்தும், புகு விடு உறு என்பன புக்கான் விட்டான் உற்றான் என இறந்தகாலத்திலே ககர டகர றகரமெய்கள் இரட்டித்தும், இன்னும் பலவாறு சந்திவிகாரங்களைப்பெற்றும் வரும்.

௱௬௯. பகுதிவிகுதிமுதலிய வுறுப்புகளாலே வினைப்பகுபத முடிக்குமாறு

நடந்தனன் என்னும் இறந்தகாலவினைமுற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்து நட என்னும்பகுதியை முதலில்வைத்

று, அன் என்னும் விகுதியை அதன்பின் வருவித்து, நட அன் என வைத்து, இறந்தகாலங்காட்டுந் தகர விடைநிலையை அவ்விரண்டற்கு மிடையிலே வருவித்து, நடத் அன் எனவைத்து, அன்சாரியையை இடைநிலைக்கும் விகுதிக்கு நடுவிலேவருவித்து, நடத் அன் அன் எனவைத்து, மெய்ம்மேலுயிர்வந் தொன்று மென்பதனால் இடைநிலைத்தகர மெய்யின்மேல் சாரியை அகரத்தையேற்றி, நட தன் அன் எனவைத்து, சாரியையீற்று னகர மெய்யின்மேல் விகுதி அகரத்தையேற்றி, நட தனன் எனவைத்து, அகர வுயிரீற்றின்முன்வரும் வலிமிகு மென்பதனால் இடைநிலைத்தகரத்தை மிகுவித்து, நடத்தனன் எனவைத்து, வல்லினமெய்யை மெல்லினமெய்யாக்கலு மென்பதனாலே மிகுந்த தகர வல்லொற்றை நகர மெல்லொற்றாக்கி நடந்தனன் எனமுடிக்க.

வருகின்றனன் என்று நிகழ்கால வினைமுற்றுப் பகுபதத்தை முடிக்கு மிடத்து வா என்னும் பகுதியை முதலில் வை

த்து, அன் என்னும் விகுதியை அதன் பி
ன்வருவித்து வா அன் எனவைத்து, நிகழ்
காலங்காட்டுங் கின்று என்னு மிடைநிலை
யை அவ்விரண்டற்கு நடுவில்வருவித்து
வா கின்று அன் எனவைத்து, அன்சாரியை
யை இடைநிலைக்கும் விகுதிக்கு மிடை
யில்வருவித்து வா கின்று அன் அன் என
வைத்து, உயிர்வந்தாற் குற்றியலுகரங்கெ
டுமென்பதனால் இடைநிலையீற்று உகரத்
தைக்கெடுத்து உகரங்கெட்ட றகரமெய்யி
ன்மேல் சாரியை அகரத்தையுஞ் சாரியை
யீற்று னகரமெய்யின்மேல் விகுதி அகர
த்தையும் ஏற்றி, வா கின்றனன் என வைத்
து, நெட்டெழுத்தைக் குற்றெழுத் தாக்க
லு மென்பதனால் வா என்னும் பகுதியை
வ எனக்குறுக்கி வ கின்றனன் எனவைத்து
இல்லாதவெழுத்தை வருவித்தலு மென்ப
தனால் ருகரவுயிர்மெய்யைப் பகுதிக்கும்
இடைநிலைக்கு நடுவில் வருவித்து, வருகின்
றனன் எனமுடிக்க.

உன்னுவான் என்னு மெதிர்காலவி
னைமுற்றுப் பகுபதத்தை முடிக்குமிடத்

து உண் என்னும் பகுதியை முதலில் வைத்து ஆன் என்னும் விகுதியை அதன்பின் வருவித்து உண் ஆன் எனவைத்து, எதிர்காலங்காட்டும் வ் என்னு மிடைநிலையை அவ்விரண்டற்கு மிடையில் வருவித்து உண் வ் ஆன் எனவைத்து, இடைநிலை வகர மெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரையேற்றி உண் வான் எனவைத்து, உ என்னுஞ் சாரியையைப்பகுதிக்கு மிடைநிலைக்கு மிடையில்வருவித்து உண் உ வான் எனவைத்து, உயிர்வரின் தனிக்குற்றெழுத்தைச்சேர்ந்தமெய் இரட்டு மென்பதனால் உண் ண் எனப்பகுதியீற்றுணகரமெய்யை இரட்டுவித்து இரட்டித்த ணகர மெய்யின் மேலேசாரியை உகர வுயிரையேற்றி உண்ணு வான் எனமுடிக்க.

நடப்பித்தான் என்னும் பிறவினைப் பகுபதத்தை முடிக்கு மிடத்து நட என்னும்பகுதியை முதலில்வைத்து, பி என்னும்பிறவினை விகுதியை அதன்பின் வருவித்து விகுதிப் பகரத்தைமிகுவித்து அனைத்தும் ஓர்பகுதியாக்கி நடப்பி எனவை

த்து, அதன்பின் ஆன் விகுதியை வருவித்
து நடப்பி ஆன் எனவைத்து, இவ்விரண்
டற்கு மிடையே தகரவிடைநிலையை வரு
வித்து இடைநிலைத் தகரமெய்யின்மேல்
விகுதி ஆகாரத்தையேற்றி நடப்பி தான்
எனவைத்து, இடைநிலைத்தகரத்தைமிகுவி
த்து நடப்பித்தான் என முடிக்க.

அடிக்கப்பட்டான் என்னுஞ்செயப்
பாட்டுவினைமுற்றுப் பகுபதத்தை முடி
க்குமிடத்து அடி என்னும் பகுதியை மு
தலில்வைத்துச் செயப்படுபொருளையுண
ர்த்தும் படு என்னும் விகுதியை அதன்பி
ன்வருவித்து அடி படு எனவைத்து, அவ
ற்றிற்கிடையே குச்சாரியையையும் அகரச்
சாரியையையும் வருவித்து அடி கு அ ப
டு எனவைத்து, குச்சாரியையின் உகரத்
தைக்கெடுத்து உகரங்கெட்ட ககரமெய்யி
ன்மேலேசாரியை அகரத்தையேற்றி அ
டி க படு எனவைத்து, சாரியைக்ககரத்தை
யும் விகுதிப்பகரத்தையு மிகுவித்து அ
வைத்தும் ஒர் பகுதியாக்கி அடிக்கப்படு
எனவைத்து, ஆன் விகுதியை அதன்பின்வ

ருவித்து படு என்பதனுடைய ஊகரமூர்ந்து டகரமெய்யை யிரட்டுவித்து உகர வுயிரைக்கெடுத்து உகரங்கெட்ட டகரமெய்யின்மேல் விகுதி ஆகாரத்தையேற்றி அடிக்கப்பட்டான் எனமுடிக்க.

அடித்த என்னும் இறந்தகாலப்பெயரெச்சப் பகுபதத்தை முடிக்குமிடத்து அடி என்னும் பகுதியை முதலிலும் அ என்னும் விகுதியையிறுதியிலும் இறந்தகாலங்காட்டுந் தகர விடைநிலையை அவ்விரண்டற்கு மிடையிலும் வைத்து, இடைநிலைத்தகரமெய்யின்மேல் விகுதி அகரத்தையேற்றி இடைநிலைத்தகரத்தை மிகுவித்து அடித்த என முடிக்க.

அடிக்கின்ற என்னு நிகழ்காலப்பெயரெச்சப்பகுபதத்தை முடிக்கு மிடத்து அடியென்னும் பகுதியை முதலிலும் அ என்னும் விகுதியை யிறுதியிலும் கின்று என்னு நிகழ்கால விடைநிலையை அவ்விரண்டற்குமிடையிலும் வைத்து, இடைநிலையீற்று உகரத்தைக் கெடுத்து உகரங்கெட்

ட நகரமெய்யின்மேல் விகுதி அகர வுயி ரையேற்றி இடைநிலைக் ககரத்தை மிகுவித்து அடிக்கின்ற என முடிக்க.

அடிக்கும் என்னு மெதிர்காலப்பெயரெச்சப் பகுபதத்தை முடிக்குமிடத்து அடி என்னும் பகுதியை முதலிலும் உம் என்னும்விகுதியை யிறுதியிலும் கு என்னுஞ்சாரியையை அவ்விரண்டற்கு மிடையிலும் வைத்து, சாரியையீற்று உகரத்தைக்கெடுத்து உகரங்கெட்ட ககர மெய்யின்மேல் விகுதி உகரத்தையேற்றிச் சாரியைக்ககரத்தைமிகுவித்து அடிக்கும் என முடிக்க.

நின்று என்னுமிறந்தகாலவினையெச்சப் பகுபதத்தை முடிக்குமிடத்து நில் என்னும்பகுதியைமுதலிலும் உ என்னும் விகுதியை யிறுதியிலும் இறந்தகாலங்காட்டும் றகரமெய்யை அவ்விரண்டற்கு மிடையிலும் வைத்து, இடைநிலை றகரமெய்யின்மேல் விகுதி உகரத்தை யேற்றிப் பகுதியீற்று லகரமெய்யை இடைநிலை றகர

மெய்க்கு இனமாகிய னகரமெய்யாகத் திரித்து நின்று எனமுடிக்க.

நிற்க என்னுமுக்காலத்திற்கு முரிய வினையெச்சப்பகுபதத்தை முடிக்கு மிடத்து நில் என்னும் பகுதியை முதலிலும் அ என்னும்விகுதியை யிறுதியிலும் குச்சாரியையை அவ்விரண்டற்கு மிடையிலும்வைத்து, சாரியையீற்று உகரத்தைக் கெடுத்து உகரங்கெட்ட ககர மெய்யின்மேல் விகுதி அகரத்தையேற்றி வல்லினம்வரின் லகரம் றகரமாய்த்திரியுமென்பதனுலே பகுதியீற்று லகரமெய்யை றகரமெய்யாகத்திரித்து நிற்க என முடிக்க.

நிற்கின் என்னுமெதிர்காலவினையெச்சப்பகுபதத்தை முடிக்குமிடத்து, நில், என்னும் பகுதியை முதலிலும் இன் என்னும்விகுதியையிறுதியிலும் குச்சாரியையை அவ்விரண்டற்கு மிடையிலும் வைத்து, சாரியையீற்று உகரத்தைக்கெடுத்து உகரங்கெட்ட ககர மெய்யின்மேல் விகுதி இகரத்தையேற்றிப் பகுதியீற்று லகரமெ

ய்யை றகரமெய்யாகத் திரித்து நிற்கின் என முடிக்க.

மற்றைய பகுபதங்களையு மிவ்வாறே முடித்துக்கொள்க.

௱கஎ. இவ்வாறு பகுபதங்களாய்வரும் வினைச்சொற்கள் முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும், என மூன்றுவகைப்பட்டுத் திணை, பால், எண், இடம், இவைகளில் ஒன்றற்குரியவாயும் பலவற்றிற்குரியவாயும் வரும்.

இம்மூவகைவினைச்சொற்களும் உடன்பாட்டிலும், எதிர்மறையிலும், தெரிநிலையாயுங்குறிப்பாயும்வருமெனக்கொள்க.

உடன்பாட்டுவினைகளாவன தொழிலினது நிகழ்ச்சியைப் புணர்த்துவனவாம்.

தெரிநிலை வினைகளாவன காலத்தை வெளிப்படையாகவுணர்த்துவனவாம்.

௱கஅ. இம்மூன்றனுள் முற்றுவினைச்சொற்கள் பால்காட்டும் விகுதிகளோடு கூடிமுற்றிநின்று பெயரைக் கொண்டு முடிவனவாய்வருவனவாம்.

௱௩௯. இம்முற்று வினைச்சொற்கள் படர்க்கைவினைமுற்று, தன்மைவினைமுற்று, முன்னிலைவினைமுற்று, ஏவல்வினைமுற்று, வியங்கோள்வினைமுற்று, செய்யுமென்னும்வினைமுற்று, என வறுவகைப்படும்.

௱௪௰. படர்க்கைவினைமுற்று - ஆண்பால்வினைமுற்று, பெண்பால்வினைமுற்று, பலர்பால்வினைமுற்று, ஒன்றன்பால்வினைமுற்று, பலவின்பால்வினைமுற்று என வைந்துவகைப்படும்.

௱௪௧. அன் ஆன் என்னும் விகுதிகளை இறுதியிலே பெற்றுவரும் வினைச்சொற்கள் உயர்திணை யாண்பா லொருமைப் படர்க்கைவினை முற்றுகளாம்.

(உ-ம்.)

நடந்தனன் நடக்கின்றனன் நடப்பன் } அவன்
நடந்தான் நடக்கின்றான் நடப்பான் }
எனவரும்.

௱௪௨. அள் ஆள் என்னும் விகுதிகளை இறுதியிலேபெற்றுவரும்வினைச்சொற்கள் உயர்திணைப் பெண்பா லொருமை

படர்க்கைவினைமுற்றுகளாம்.

(உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| நடந்தனன் | நடக்கின்றனன் | நடப்பன் | அவன், |
| நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் | |

எனவரும்.

௱௪௫. அர் ஆர் என்னும் விகுதிகளை இறுதியிலேபெற்றுவரும் வினைச்சொற்கள் உயர்திணைப் பலர்பாற் படர்க்கைவினைமுற்றுகளாம். (உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| நடந்தனர் | நடக்கின்றனர் | நடப்பர் | அவர் |
| நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் | |

எனவரும்.

இவ்விகுதிகளன்றி நடப்ப நடமார் எனப் ப மார் விகுதிகள் செய்யுளிலே பலர்பாலையும் எதிர்காலத்தையும் ப விகுதி சிறுபான்மை இறந்தகாலத்தையும் உணர்த்திவருமெனவுங் கொள்க.

நடப்ப நடமார் என்பவைகளின் பொருள் நடப்பார் என்பதாம். நடப்ப என்பது நடந்தாரென்றுமாம்.

௱௪௬. து று என்னும் விகுதிகளையிறுதியிலேபெற்றுவரும் வினைச்சொற்கள்

அஃறிணையொன்றன்பாற்படர்க்கைவினை முற்றுகளாம் (உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| நடந்தது | நடக்கின்றது | நடப்பது | அது. |
| போயிற்று | ...... | ...... | |

எனவரும்.

துவ்விகுதி முக்காலவிடைநிலையோடும் றுவ்விகுதி இறந்தகாலவிடைநிலையோடும் வருமென்றறிக.

௱௨௫. அ என்னும்விகுதியை யிறுதியிலேபெற்றுவரும் வினைச்சொற்கள் அஃறிணைப்பலவின்பாற் படர்க்கைவினை முற்றுகளாம். (உ-ம்)

| | |
|---|---|
| நடந்தன<br>நடக்கின்றன<br>நடப்பன | அவை<br>எனவரும். |

௱௨௬. தன்மைவினைமுற்று தன்மையொருமைவினைமுற்று தன்மைப்பன்மைவினைமுற்று எனவிருவகைப்படும்.

௱௨௭. என் ஏன் அன் என்னும் விகுதிகளை யிறுதியிலே பெற்றுவரும்வினைச்சொற்கள் தன்மை யொருமைவினை முற்

றுகளாம். (உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| நடந்தனென் | நடக்கின்றனென் | நடப்பென | யான். |
| நடந்தேன் | நடக்கின்றேன் | நடப்பேன் | |
| நடந்தனன் | நடக்கின்றனன் | நடப்பன் | |

எனவரும்.

இவ்வினைமுற்றுகள் செய்யுளில் அல் கு டு து று என்னுமிவ்வைந்து விகுதிகளையும்பெற்றுவரும். (உ-ம்)

உண்பல் உண்கு உண்டு வந்து வருது சென்று சேறு எனவரும்.

இவைகளில் உண்பல் உண்கு என்பனவற்றிற்கு உண்பேன் என்பதும். உண்டு என்பதற்கு உண்டேன் என்பதும், வந்து என்பதற்கு வந்தேன் என்பதும், வருது என்பதற்கு வருவேன் என்பதும், சென்று என்பதற்குச் சென்றேன் என்பதும், பொருளாம் இப்பொருளின்படி அவை காட்டுங் காலங்களையுமறிக.

௱௪௮. அம் ஆம் எம் ஏம் ஓம் என்னும் விகுதிகளையிறுதியிலே பெற்றுவரும்வினைச்சொற்கள் தன்மைப் பன்மை வி

னைமுற்றுகளாம். (உ-ம்)

| | | |
|---|---|---|
| நடந்தனம் | நடக்கின்றனம் | நடப்பம் |
| நடந்தாம் | நடக்கின்றாம் | நடப்பாம் |
| நடந்தனெம் | நடக்கின்றனெம் | நடப்பெம் |
| நடந்தேம் | நடக்கின்றேம் | நடப்பேம் |
| நடந்தோம் | நடக்கின்றோம் | நடப்போம் |

எனவரும்.

இவை தனித்தன்மைப் பன்மையாய் வருதலல்லாமலும் நடந்தனம் யானும் நீயும் என முன்னிலையாரையும், நடந்தனம் யானுமவனும் எனப்படர்க்கையாரையும், நடந்தனம் யானு நீயு மவனும் என அவ்விரிடத்தாரையும், உளப்படுத்தி உளப்பாட்டுத்தன்மைப்பன்மையாயும் வரும்.

இவ்வினைச்சொற்கள் செய்யுளிலே கும் டும் தும் றும் என்னு மிந்நான்கு விகுதிகளையும்பெற்றுவரும். (உ-ம்)

உண்கும் உண்டும் வந்தும் வருதும் சென்றும் சேறும் எனவரும்.

இவற்றிற்கு முறையே உண்போம், உண்டோம், வந்தோம், வருவோம், சென்றோம், செல்வோம், என்பனபொருளாம்

இப்பொருளின்படி அவ்விகுதிகள் காட்டுங்காலங்களை யுணர்க.

௱௪௯. முன்னிலைவினைமுற்று முன்னிலையொருமைவினைமுற்று, முன்னிலைப் பன்மைவினைமுற்று, என இருவகைப்படும்.

௱௫௰. ஐ ஆய் இ என்னும் விகுதிகளை இறுதியிலேபெற்றுவரும்வினைச்சொற்கள் முன்னிலையொருமைவினை முற்றுகளாம். (உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| உண்டனை | உண்கின்றனை | உண்பை | நீ |
| உண்டாய் | உண்கின்றாய் | உண்பாய் | |
| உண்டி | உண்கின்றி | சேறி | |

எனவரும்.

௱௫௧. இர் ஈர் என்னும் விகுதிகளை இறுதியிலேபெற்றுவரும் வினைச்சொற்கள் முன்னிலைப்பன்மைவினை முற்றுகளாம்.

(உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| உண்டனிர் | உண்கின்றனிர் | உண்பிர் | நீர் |
| உண்டீர் | உண்கின்றீர் | உண்பீர் | |

எனவரும்.

இவை தனியே வருதலுமல்லாமல் உண்டீர் நீயுமவனும் எனப்படர்க்கையாரை உளப்படுத்திக்கொண்டும் வரும்.

௭௨. ஏவல்வினைமுற்று ஏவலொருமைவினைமுற்று, ஏவற்பன்மைவினைமுற்று என இருவகைப்படும்.

ஏவலாவது முன்னிலையிடத்தாரையிது செய்கவென்று ஏவுதலாம்.

௭௩. ஏவலொருமைவினைமுற்றுகள் ஆய் இ இரு உ முதலியவிகுதிகளையிறுதியிலே பெற்றாவது இவ்விகுதிகள்புணர்ந்துகெட்டுப் பகுதிமாத்திரையாய் நின்றாவதுவரும் வினைச்சொற்களாம்.

(உ-ம்)

| | | |
|---|---|---|
| நடவாய் | செய்யாய் | சாத்தா எ-ம். |
| நடந்திடு | வந்திடு | |
| எழுந்திரு | படித்திரு | |
| வாரு | அருளு | |
| நடப்பியாய் | செய்வியாய் | |

நட செய் வா எழு படி வாழ் அருள் நடப்பி - சாத்தா. எ-ம், வரும்.

௱௫௪. ஏவற் பன்மைவினைமுற்றுகள் உம் மின் என்னும் விகுதிகளை இறுதியிலேபெற்றுவரும் வினைச்சொற்களாம்.

(உ-ம்)

செய்யும் உண்ணும் } சாத்தரே.
செய்மின் உண்மின் } எனவரும்.

இவை செய்யுங்கள் உண்ணுங்கள் என உலகவழக்கில் உம் விகுதிமேல் கள்விகுதி பெற்றுவருதலுமறிக.

௱௫௫. வியங்கோள்வினைமுற்றுகள் க இய இயர் அல என்னும் விகுதிகளை இறுதியிலேபெற்றுவரும் வினைச்சொற்களாம்.

வியங்கோளானது ஐம்பால் மூவிடங்களிலுஞ் செல்லும் ஏவலாம்.

(உ-ம்)

வாழ்க உண்க } யான், யாம், நீ, நீர்
வாழிய உண்ணிய } அவன், அவள், அ
வாழியர் உண்ணியர் } வர், அது, அவை
சொல்லல் எனல் } எனவரும்.

கொளல் என்பதற்குக்கொள்க என்பதும், எனல் என்பதற்கு என்கஎன்பதும் பொருளாம்.

அன்றியஞ் சிறுபான்மை இவை வாழ்வானாக வாழ்வாளாக வாழ்வாராக எ-ம், வாழக்கடவன் வாழக்கடவள் வாழக்கடவர் எ-ம், இக்காலத் துலகவழக்கிலேபாலிடங்களில் ஒன்றற் குரியவாய் வருமெனவுங் கொள்க.

இவை அவனுண்க நீவருக எனஉயர்ந்தோன் இழிந்தோனை விதித்தற்பொருளிலும், எம்மைக் காத்தருள்க ஒருசொற் கேட்க எனவேண்டிக்கொள்ளுதற்பொருளிலும், அந்தணர்வாழ்க அரசர்வாழ்க என வாழ்த்துதற்பொருளிலும் அத்தீயோன்கெடுக எனவைதற்பொருளிலும்வரும்.

மேற்கூறிய ஏவல் விகுதிகளும், இவ்வியங்கோள் விகுதிகளுந் தாமே எதிர்காலங்காட்டிவருமென்றறிக.

சஙு. செய்யு மென்னும் வினைமுற

ற்றுச்சொற்கள் உம் என்னும் விகுதியை யிறுதியிலே பெற்று உயர்திணை ஆண்பால் பெண்பால அஃறிணை ஒன்றன்பால பலவின்பால் என்று நான்குபாலகளுக்கும், உரியனவாய்வரும்வினைசசொற்களாம்.

(உ-ம்)

அவனுண்ணும் அவளுண்ணும் } என
அதுவுண்ணும் அவையுண்ணும் } வரும்

இம்முற்று வினைச்சொற்களின் உம் விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையுங் காட்டுமெனவறிக.

ஈறுள பெயரெச்ச வினைச்சொற்கள் பால்காட்டு முற்றுவிகுதிகளைப்பெறுதகுறைச் சொற்களாய் அ உம் என்னும் விகுதிகளை யிறுதியிலே பெற்றுப் பெயரை முடிக்குஞ்சொற்களாக வற்கவரும் வினைச்சொற்களாம்.

இவை கொள்ளுப்பெயர்கள் செய்யவன், கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் அறுவகைப்பொருட்பெயர்களாம்.

அன்றியும் இவை செய்யுளிலே உண்ணூபு உண்ணு உண்ணூ உண்டென எனப் பு, ஆ ஊ, என, என்னு மிந்நான்கு விகுதிகளைப் பெற்றும்வருமெனக்கொள்க.

௱௬௰. செய என்னும் வாய்பாட்டு முக்காலத்திற்கு முரிய வினையெச்சங்கள் அகர விகுதியை இறுதியிலே பெற்றுத் தன்கருத்தாவின் வினையையும், பிறகருத்தாவின் வினையையும் முடிக்குஞ்சொல்லாகக் கொள்ளவருவனவாம்.

இவ்வகரவிகுதி இடைநிலையோடு கூடாது தானே காலங்காட்டிவரும்.

இவ்வெச்சங்கள் காரணப் பொருளில் வருமிடத்து இறந்த காலத்தையும், காரியப்பொருளில் வருமிடத்து எதிர்காலத்தையும், இவ்விருபொருளு மின்றிவருமிடத்து நிகழ்காலத்தையும் காட்டும்.

(உ-ம்)

மழைபெய்யநெல்விளைந்தது. பிற. இற.
மழைபெய்யமுழங்கும் தன். எதி.
சூரியனுதிக்கவந்தான். பிற. நிக.

எனவரும்.

அன்றியும் இவ்வினையெச்சம் சிறுபான்மை உண்ணுதற்குவந்தான், உண்ணும்படிவந்தான், என ஈறு திரிந்தும்வரும்.

௩௬௧. செயின் என்னும் வாய்பாட்டெதிர்கால வினையெச்சங்கள் இன் ஆல கால் முதலியவிகுதிகளை இறுதியிலேபெற்றுத் தன்கருத்தாவின் வினையையும், பிறகருத்தாவின் வினையையும்முடிக்குஞ்சொல்லாகக்கொள்ளவரும்வினைச்சொற்களாம்.

(உ-ம்.)

| | |
|---|---|
| தானுண்ணினுவப்பான். | தன் |
| பிறனுண்ணிற்கொடுப்பான். | பிற |
| தானுண்டாலுவப்பான். | தன். |
| பிறனுண்டாற்கொடுப்பான். | பிற |
| தானுண்டக்காலுவப்பான். | தன் |
| பிறனுண்டக்காற்கொடுப்பான் | பிற |

இக்காலத்து வழக்கில் உண்டானேல், உண்டானெனின், உண்டானாயின், உண்டானேனும்- என-ஏல், எனின், ஆயின், எனும், இந்நான்கும்முற்றுவினைகளோடு இயைந்து ஒருசொல் நீர்மைப்பட்டுச் செயி

னென்னும்வாய்பாட்டுவினையெச்சங்களா
ய்வருதல்காண்க.

அன்றியுஞ் செய்யுளிலே இவ்வெச்சங்கள் உண்ணிய, உண்ணியர், உண்ணுவான், உண்பான், உண்பாக்கு, என-இய, இயர், வான், பான், பாக்கு, என்னும் விகுதிகளைப் பெற்றும் வருமெனவறிக.

௱௬௨. மேற்கூறிய பெயரெச்சவினையெச்சங்கள் இருதிணையைம்பால்மூவிடங்களுக்கும்பொதுவாகவரும். (உ-ம்)

உண்ட-யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை, எ-ம்,

நடந்து-வந்தேன், வந்தோம், வந்தாய், வந்தீர், வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, எ-ம், வரும்.

௱௬௩. எதிர்மறைவினைச்சொற்கள் தொழிலின்மையையுணர்த்தும்வினைச்சொற்களாம். இவையும் முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமுமாகிவரும்.

இவ்வெதிர்மறை வினைச்சொற்கள் ஆ இல் அல் என்னு மிம்மூன்றுவிகுதிகளுள் ஒன்றனைப்பெற்றுவரும்.

௩௯௪. இம்மூன்றுவிகுதிகளுள் ஆவிகுதி இடையிலேபுணர்ந்து பெரும்பாலுங் கெட்டுநிற்கக்காலங்காட்டு மிடைநிலைகளைப்பெறுமற் பால்காட்டும் விகுதிகளையிறுதியிற் பெற்றுவரும் வினைச்சொற்கள் முக்காலத்திற்கும் பொதுவாகிய எதிர்மறைவினைமுற்றுச்சொற்களாம்.

இவ்வெதிர்மறை யாகாரம் உயிர்நெடின்முதல் விகுதியோடு புணருமிடத்துக்கெட்டுநிற்குமெனவும், மெய்ம்முதல்விகுதியோடுபுணருமிடத்துக் கெடாமனிற்குமெனவும் அறிக. (உ-ம்)

| | | |
|---|---|---|
| நடவான் | நடவாள் | என வரும். |
| நடவார் | நடவாது | |
| நடவா | —— | |
| நடவேன் | நடவேம் | |
| நடவாய் | நடவீர் | |

காலங்காட்டு மிடைநிலையோடு இவ் அல் என்னும் எதிர்மறை விகுதிகளுமொன்று இடையிற்புணர்ந்து நிற்கப்பால்காட்டும் விகுதிகளையிறுதியிற் பெற்றுவருவன

ஒவ்வொரு காலத்திற்குரிய எதிர்மறை வினைமுற்றுச்சொற்களாம். (உ-ம்)

நடந்திலன்
நடக்கின்றிலன் } எனவரும்.
நடக்கின்றலன்

இவ்வெதிர்மறை வினைமுற்றுகள் இக்காலத்துவழக்கிலே நடக்கலன் நடவாதிருந்தான், நடவாதிருக்கின்றான், நடவாதிருப்பான், எனவருமெனவுங்கொள்க.

௱௬௫. அல் எல் என்னும்விகுதிகளை யிறுதியிற்பெற்றுவருவன எதிர்மறையேவலொருமைவினைமுற்றுச்சொற்களாம்.

(உ-ம்.)

உண்ணல் உண்ணேல் எனவரும்.

இவை இக்காலத்துலக வழக்கில் உண்ணாதே, உண்ணாமலிரு, உண்ணாதிரு எனவருமெனவுங்கொள்க.

௱௬௬. எதிர்மறைவிகுதியோடுமின் விகுதியைப் பெற்றுவருவன எதிர்மறை

பெயர்பன்மைவினைமுற்றுகளாம். (உ-ம்) நடவன்மின், உண்ணன்மின், எனவரும்.

இவை இக்காலத்துலகவழக்கில் நடவாதிருங்கள், நடவாமலிருங்கள், என்றுவருமெனவுங்கொள்க.

௩௯௭. எதிர்மறைவிகுதியோடுவியங்கோள் விகுதிகளுள் ககர விகுதியைப் பெற்றுவருவன எதிர்மறைவியங்கோள் வினைமுற்றுகளாம். (உ-ம்)

வாழற்க உண்ணற்க எனவரும்.

அன்றியும் மகனெனல் என்னுமிடத்து மகனென்று சொல்லற்க எ-ம், மரீஇய தொரால் என்னுமிடத்து மரீஇய தொருவற்க எ-ம், பொருள்பட வருதலால் அல், ஆல், இரண்டும் எதிர்மறைவியங்கோள்விகுதிகளாய்வருமெனவுமறிக.

இவை யிக்காலத்துலகவழக்கில் வாழாளாக, வாழாதிருப்பாளாக, வாழாமலிருப்பாளாக, வாழாதிருக்கக்கடவன், வாழாமலிருக்கக்கடவன் என்று வருமெனவுமறிக.

௱௬௮. எதிர்மறைவிகுதியோடுசே ர்கூடிய பெயரெச்சவிகுதிகளுள் அ என் னும்விகுதியைப்பெற்றுவருவன எதிர்ம றைப்பெயரெச்சவினைச்சொற்களாம்.

(உ-ம்.)

நடவாத உண்ணாத } என
செய்யாத தின்னாத } வரும்.

இவை நடவா செய்யா எனவீறு கெட்டுவருமெனவும், முக்காலத் துலகவழ க்கில் நடவாதிருந்த நடவாதிருக்கின்ற நட வாதிருக்குமென்றுவருமெனவுங்கொள்க.

௱௬௯ எதிர்மறைவிகுதியோடு மல் று மை மே முதலிய விகுதிகளைப்பெற் றுவருவன எதிர்மறை வினையெச்ச வினை ச்சொற்களாம். (உ-ம்)

நடவாமல் நடவாது } எனவரும்.
நடவாமை நடவாமே }

௱௭௰ ஒன்றனைப்பகுதியோடு இ

## வே பல்வினைச்சொற்களாம்.

( வ - று. )

| இறப்பு, | நிகழ்வு, | எதிர்வு. |
|---|---|---|
| நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் |
| நடந்தாள் | நடக்கின்றாள் | நடப்பாள் |
| நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் |
| நடந்தது | நடக்கின்றது | நடப்பது |
| நடந்தன | நடக்கின்றன | நடப்பன |
| நடந்தேன் | நடக்கின்றேன் | நடப்பேன் |
| நடந்தோம் | நடக்கின்றோம் | நடப்போம் |
| நடந்தாய் | நடக்கின்றாய் | நடப்பாய் |
| நடந்தீர் | நடக்கின்றீர் | நடப்பீர் |
| ...... | .......... | நடவாயீ |
| .......... | .......... | நடமின் |
| .......... | .......... | நடக்க |
| நடந்த | நடக்கின்ற | நடக்கும் |
| நடந்து | நடக்க | நடக்கின் |
| நடந்திலன் | நடக்கின்றிலன் | நடவான் |
| நடந்திலாத | நடக்கின்றிலாத | நடவாத |
| நடவாமல் | நடவாமை | நடவாமே |

எனவரும். மற்றவைகளுமிப்படியே.

௱௭௧. இப்படி உடன்பாட்டிலும் எதிர்மறையிலும்வருகிற வினைச்சொற்கள் செயப்படுபொருள் குன்றியவினை செயப்படுபொருள் குன்றாதவினை தன்வினை பிறவினை செயப்பாட்டுவினை எனை ஐந்துவ

௩௭௨. செயப்படுபொருளை வேண்டாமனிற்கு முதனிலைக ளடியாகத்தோன்றியவினைச்சொற்கள் செயப்படுபொருள் குன்றியவினைச்சொற்களாம் (உ-ம்)

நடந்தான் வந்தான் } எனவரும்.
போயினான் தூங்கினான் }

இவை இதைநடந்தான் இதைவந்தான் என இரண்டாம் வேற்றுமைக்குமுடிக்குஞ்சொற்களாக வாராவெனவறிக.

௩௭௩. செயப்படுபொருளை வேண்டிநிற்குமுதனிலைக ளடியாகத் தோன்றிய வினைச் சொற்கள் செயப்படுபொருள் குன்றாதவினைச்சொற்களாம் (உ-ம்.)

உண்டான் கொடுத்தான் } என
கண்டான் படித்தான் } வரும்.

இவை சோற்றையுண்டான் பணத்தைக்கொடுத்தான் என இரண்டாம்வேற்றுமைக்குமுடிக்குஞ் சொற்களாகவருமெனவறிக.

௩௭௪. எழுவாய்க் கருத்தாவின்றொழிலாகி வேறுபடாமனிற்குமுதனிலைகளு

டியாகத்தோன்றிய வினைச்சொற்கள் தன்வினைச்சொற்களாம்.

இம்முதனிலைகள் செயப்படுபொருள்குன்றியனவும், குன்றாதனவும் ஆம்.

(உ-ம்)

தச்சன்வந்தான்
தச்சன்கட்டினான் } எனவரும்.

இவைகளில் வாவென்னுஞ் செயப்படுபொருள்குன்றியமுதனிலைத்தொழிலும், கட்டு என்னுஞ் செயப்படுபொருள்குன்றாதமுதனிலைத்தொழிலும், தச்சனென்னும் எழுவாய்க்கருத்தாவின் றொழிலாய் நின்றமைகாண்க.

௱௭௫ எழுவாய்க்கருத்தாவொழிந்த பிறகருத்தாவின்றொழிலாகிநின்ற முதனிலைகளடியாகத்தோன்றிய வினைச்சொற்கள் பிறவினைச்சொற்களாம். இம்முதனிலைகள் வி, பி, கு, சு, டு, து, பு, று, என்னு மிவ்வெட்டுவிகுதிகளுள் ஒன்றைப்பெற்றாவது விகாரப்பட்டாவது வேறுபட்டுவரும்.

வி, பி, முதலியன முதனிலைத்தொழிலையுண்டாக்குந் தொழிற்பொருளில் வரும்.

(உ-ம்)

வி. அரசன் றச்சனாற் கோயிலைக் கட்டுவித்தான்.
பி. அரசன் சேவகனாற் கள்ளனையடிப்பித்தான்.
கு. தாய் மகனைப் போக்கினாள்.
சு. நம்பி நீரைப் பாய்ச்சினான்.
டு. சோற்றாற் கலையுருட்டினான்.
து. அரசன் சேனையை நடத்தினான்.
பு. தாய் மகனையெழுப்பினாள்.
று. தாய் குழந்தையைத் துயிற்றினாள்.

இவை விகுதி பெற்று வந்தன.

சாத்தன் கொம்பனைத் திருத்தினான்.
கொற்றன் பம்பரத்தையாட்டினான்.

இவை விகாரப்பட்டு வந்தன.

இவைகளில், கட்டு, அடி, என்னு முதனிலைகள் அரசன் என்னும் எழுவாய்க் கருத்தாவின் றொழிலாகாமற் றச்சன் சேவகன் என்னும் பிறகருத்தாவின் றொழிலாகி வருதல்காண்க. மற்றவைகளுமிப்படியே.

வி, பி, முதலிய விகுதிகள் சாத்தன் கொற்றனை நடப்பித்தான், வருவித்தான், என செயப்படுபொருள் குன்றிய முதனிலைகளின் மேல் வரின் அவை செயப்படுபொ

ருளுடையவா மெனவும், அரசன் பகைவ
னைக்கொற்சாலையடைவித்தானென ச
ெயப்படுபொருளொன்றுமுதனிலைமுதனி
களில் மேல் வரின் அவை இரண்டு செயப்
படுபொருளுடையவாமெனவுங்கொள்க.

இவ்விகுதிகள் நடப்பிப்பித்தான், செ
ய்விப்பித்தான், நடத்துவிப்பித்தான், என
இரண்டாமுதலியன இணைந்துவருமெனவு
ங் கொள்க.

அரசன்செய்த தேர், அரசன்கட்டிய
கோயில், எனவிவை வினைவிகுதி புணர்ந்து
கெட்டுநிற்கவாறுத்தன்மையால் இவைபமுமாறி
லவேறுபட்டுவந்தன வெனமேவகொளக.

அன்றியும், ஏவல்வினைக்கும்பிறவினைக்
கும் பொதுவாய்நிற்கின்ற விகுதிகளி
ன் சிறுபான்மை இவ்விகுதி வேண்டாமற்
பிறவினைப்பொருளில்வருமிடத்துக்களை
ந்தான் தேய்த்தான் களைக்கின்றான் தேய்க்
கின்றான் களைப்பான் தேய்ப்பான் எனவ
ல்லொற்று மிகப்பெற்றும், தன்வினைப்
பொருளில் வருமிடத்துக்களைந்தான் தே

ய்ந்தான் காணாநின்றான் தேய்கின்றான் கா ணாவான் தேய்வான் என மெல்லொற்று இறந்தகாலத்திலேமிகப்பெற்றும், ஏனைய காலங்களிலஇயல்பாகியும்வருமெனவறிக.

௱௭௬. செயப்படுபொருளை யுணர்த்தும் படு விகுதிபுணர்ந்துநிற்கு முதனிலைகளடியாகத் தோன்றிய வினைச்சொற்கள் செயப்பாட்டுவினைகளாம்.

செயப்படுபொருள்குன்றாததன்வினைமுதனிலைகளோடும் வி,பி,முதலியவைகளைப்பெற்றுவரும் பிறவினை முதனிலைகளோடும், படு விகுதி புணர்ந்து வருமெனவறிக.

இம்முதனிலைகளோடு,படு விகுதி புணருமிடத்து அகரச்சாரியையை யாவது குச்சாரியையையும் அகரச்சாரியையையுமாவதுபெறும்.

(உ-ம்.)

தச்சனாற்கோயில்கட்டப்பட்டது.
அரசனாலேதச்சனைக்கொண்டுகோயில்கட்
[டுவிக்கப்பட்டது.
சேவகனாற்கள்ளனடிக்கப்பட்டான்.

அரசனாலே சேவகனைக்கொண்டு கள்ளனடிப்பிக்கப்பட்டான்.
சாத்தனாற்கொற்றனடப்பிக்கப்பட்டான்.
அரசனாலே பகைவர் சிறைச்சாலையை யடைவிக்கப்பட்டார்.

எனவரும். மற்றவைகளுமிப்படியே.

இச்செயப்பாட்டுவினை-தச்சனாற்கோயில்கட்டப்பட்டது என வினைமுதன்மூன்றாம்வேற்றுமையிலும் செயப்படுபொருள் எழுவாயினும் வரப்பெற்று-வினைமுதலை முதனிலைத் தொழிலாலும் செயப்படுபொருளை விகுதியாலும் முடிக்குமென்றும், அரசனாலே பகைவர்சிறைச்சாலையையடைவிக்கப்பட்டார் என இரண்டுசெயப்படுபொருள்வருமிடத்து விகுதியாலேமுடிக்கப்பட்ட செயப்படுபொருள் எழுவாயினும் விகுதியாலே முடிக்கப்படாத செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையிலும் வரப்பெறுமென்றும் அறிக.

அன்றியும் இக்காலத்துலகவழக்கிலே மேற்கூறிய சாரியைகளின்றி அடிபட்டா

ண், அடியுண்டான், பிடிபட்டான், பிடிபு ண்டான் எனப் படு உண் விகுதிகள் புணர்ந்துவருமெனவுமறிக.

௱௭௭. இவையன்றித்தற்பொருட்டு வினை, தேற்றவினை, வலிமைவினை, துணிபு வினை, கூட்டுவினை, என ஐவகைப் பட்ட வினைச்சொற்களுமுள.

௱௭௮. வினைமுதற்றொழிற்பயன்வினைமுதலையடைதற்பொருளைத் தருங்கொள் என்னும் விகுதியைப் பெற்று நிற்கு முதனிலைகளடியாகத் தோன்றிய வினைச் சொற்கள் தற்பொருட்டு வினைகளாம்.

முதனிலைகளோடு கொள்விகுதிபுணருமிடத்துத் துச்சாரியையேனும் இகரவுயிரேனும்பெறும். உ-ம்)

செய்துகொண்டான்
அடித்துக்கொண்டான்
கடித்துக்கொண்டான்
வெட்டிக்கொண்டான்
} என வரும்.

௱௭௯. வேண்டும் படும் தகும் என்பவை தேற்றவினைகளெனப்படும்.

இம்மூன்றும் ஒருபொருட்சொற்க ளாய்த் தேற்றப்பொருளை யுணர்த்தி இரு திணை யைம்பால் மூவிடங்கட்கும் உரிய னவாய்வரும்.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| அவன்வரல்வேண்டும் | நாம்வரல்வேண்டும் | எனவரும். |
| அவள்வரல்வேண்டும் | நீவரல்வேண்டும் | |
| அவர்வரல் வேண்டும் | நீர்வரல்வேண்டும் | |
| அதுவரல் வேண்டும் | அவன்செய்யத்தகும் | |
| அவைவரல்வேண்டும் | அவனுரைப்படும் | |
| நான் வரல் வேண்டும் | | |

தேற்றப்பொருளாவது வரல்வேண்டுமென்னு மிடத்து வரலே தக்கதெனப் பொருள்கொள்ளப்படுவதாம்.

௱௮௰. வலிமையுணர்த்தற்பொருளைத் தரும் மாட்டு என்னும் விகுதியைப்பெற் றுநிற்கு முதனிலைகளாடியாகத் தோன்றிய வினைச்சொற்கள் வலிமை வினைகளாம்.

மாட்டென்பது முதனிலைகளோடு புணருமிடத்து அ என்னுஞ் சாரியையை யாவது கு அ என்னு மிருசாரியைகளை யாவது பெறும்.

இது பெரும்பான்மையும் வ் என்

னு மெதிர்கால விடைநிலையோடுவரும்.

(உ-ம்.)

அடிக்கமாட்டுவான்
செய்யமாட்டுவான்
நடக்கமாட்டுவான் } எனவரும்.

௱௮௧. துணிவுப்பொருளைத்தரும் விடு ஒழி என்னும் விகுதிகளைப்பெற்றுநிற்குமுதனிலைகளடியாகத்தோன்றிய வினைச்சொற்கள் துணிபுவினைச்சொற்களாம்.

இவ்விருவிகுதியு முதனிலைகளோடு புணருமிடத்துத் துச்சாரியையாயாவது இகரவுயிராயாவது பெறும்.

(உ-ம்.)

செய்துவிட்டான்
செய்தொழிந்தான்
தூங்கிவிட்டான்
ஆடியொழிந்தான் } எனவரும்.

௱௮௨. சிலவினைப் பகுதிகளோடு வேறுவினைப் பகுதிகள் புணர்ந்து ஒரு சொன்னீர்மைப்பட்டுநிற்கு முதனிலைகளாடியாகத்தோன்றியவினைச்சொற்கள் கூட்டு

வினைச்சொற்களாம். (உ-ம்)

உண்டாக்கினான், } எனவரும்.
காப்பாற்றினான், }

௱௮௩. இவ்வினைச்சொற்கள் வினையடியிற் றோன்றுவதன்றிச் சிறுபான்மை பெயரடியிலும், இடையடியிலும், உரியடியிலுந், தோன்றும். (உ-ம்)

கடைக்கணித்தான், சித்திரித்தான், என்பன கடைக்கண், சித்திரம், என்னும் பெயரடியாகத் தோன்றின.

பொன்போன்றான், புலிநிகர்த்தான் என்பன போல், நிகர், என்னும் இடையடியாகத் தோன்றின.

சான்றான், சிறுத்தான், என்பன, சால், சிறு, என்னும் உரியடியாகத் தோன்றின

௱௮௪. இவையன்றிப் படு என்பது சிலபெயர்ச் சொற்களோடு புணர்ந்து ஒருமுதனிலைத்தன்மைப்பட்டு வினையடியாகவருதலுமுண்டு. (உ-ம்)

ஆசைப்பட்டான் } எனவரும்.
துன்பப்பட்டான் }

௱௮௫. குறிப்புவினைகளாவன காலத்தைக்குறிப்பாகவுணர்த்தும்வினைச்சொற்களாம்.

இவை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னுமிவ்வாறு மடியாகத் தோன்றி முற்றும், பெயரொச்சமும், வினையெச்சமுமாகிவரும்.

௱௮௬. குறிப்புவினைமுற்றுச்சொற்கள் காலத்தைக் குறிப்பாகவுணர்த்திப்பால்காட்டும் விகுதிகளை யிறுதியிற்பெற்று முற்றிநின்றபெயரைக்கொண்டுமுடிவனவாய்வருவனவாம்.

(உ-ம்)

| | | |
|---|---|---|
| பொன்னன் | கண்ணன் | அவன். |
| அகத்தன் | கரியன் | என |
| வேனிலான் | நடையன் | வரும். |

இவைகளுள் பொன்னன் என்பது பொன்னையுடையனாயினான் என இறந்தகாலங் கருதியாவது, பொன்னை யுடையனாகின்றான் எனநிகழ்காலங்கருதியாவது, பொன்னையுடையனாவான், என எதிர்கால

கருதியாவது, சொல்லுவோன்குறிப்பா ற்கேட்போனுக்குத்தோன்ற வுணர்க்கப்ப டுவது. மற்றவைகளு மிப்படியே

இக்குறிப்புவினைமுற்றுச்சொற்கள் அன் ஆன் அள் ஆள் அர் ஆர் து று டு அ என் ஏன் அம் ஆம் எம் ஏம் ஓம் ஐ ஆய் இ இர் ஈர் முதலிய பால்காட்டும்விகுதிக ளை யிறுதியிற்பெற்றுவரும். (உ-ம்)

| | |
|---|---|
| குழையன் | குழையான் |
| குழையள் | குழையாள் |
| குழையர் | குழையார் |
| குழையது | குழையிற்று |
| குறுந்தாட்டு | குழையின |
| குழையினென் | குழையினேன் |
| குழையம் | குழையாம் |
| குழையினெம் | குழையினேம் |
| குழையினேம் | குழையினை |
| குழையாய் | வில்லி |
| குழையினிர் | குழையீர் |

கல்வியாற் பெரியன் - கற்றுவல்லன் என்றாற்போலக் காரணம்பற்றிவருபவை களை ஆக்கவினைக்குறிப்பென்றும், நீர்தண்

ணிது-தீவெய்து-என்றாற்போலக் காரண
ம்பற்றாமல் இயற்கையை யுணர்த்திவருப
வைகளை இயற்கைவினைக்குறிப்பென்றும்
அறிக.

௱௮௭. பெயரெச்சவினைக்குறிப்புச்
சொற்கள்பால்காட்டுமுற்று விகுதிகளைப்
பெறாத குறைச்சொற்களாய் அகரவிகுதி
யை யிறுதியிற்பெற்றுக்காலத்தைக் குறிப்
பாக வுணர்த்திப்பெயரைமுடிக்குஞ்சொ
ற்களாக வருவனவாம். (உ-ம்)

| | |
|---|---|
| பெரியசேனை கரியகுதிரை<br>முகத்தகளிறு உள்ளகாரியம் | என வரும். |

௱௮௮ வினையெச்சவினைக்குறிப்பு
ச்சொற்கள் பால்காட்டு முற்றுவிகுதிகளை
ப்பெறாத குறைச்சொற்களாய் அ றி து
மல் முதலிய விகுதிகளை இறுதியிற்பெற்
றுக்காலத்தைக் குறிப்பாகவுணர்த்திவினை
யை முடிக்குஞ்சொற்களாக வருவன
வாம். (உ-ம்)

| | |
|---|---|
| மெல்லப்பேசினான்<br>அருளின்றிச்சொன்னான்<br>அதுவல்லதில்லை<br>அதுவல்லாமலில்லை | என வரும். |

௱௮௯. வேறு இல்லை உண்டு என்னும் மூன்று குறிப்புவினைமுற்றுச்சொற்களும் இருதிணையைம்பான் மூவிடங்கட்கும் பொதுவாகிவரும். (உ-ம்)

| | | | | |
|---|---|---|---|---|
| அவன், | அவள், | அவர், | வேறு | எனவரும். |
| அது, | அவை, | யான, | இல்லை | |
| யாம், | நீ, | நீர், | உண்டு | |

௱௯௰ யார் என்னும் வினாவினைக்குறிப்புமுற்றுச்சொல் ஐம்பான் மூவிடத்திற்கும் பொதுவாகிவரும். (உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| அவன் | அவள் | அவர் | யார். எனவரும். |
| அது | அவை | யான் | |
| யாம் | நீ | நீர் | |

யாரென்பது - ஆரெனவுந் திரிந்துவரும்.

௱௯௧ எவன் என்னும் வினாவினைக்குறிப்புமுற்றுச்சொல் அஃறிணையிருபாற்கும் பொதுவாகிவரும். (உ-ம்)

அஃதெவன் அவையெவன் எனவரும்.

எவனென்பது என் என்னை எனத்திரிந்தும்வரும் இங்கேசொன்ன எவனென்பது உயர்திணை ஆண்பாலைப்புணர்த்தும்பெயரன்று.

௱௯௨. தெரிநிலை வினைமுற்றுகளுஞ்

குறிப்புவினைமுற்றுகளுந் தம்மைமுடித்தற்கேலாதவினையையும் பெயரையுங்கொண்டுவரின் முற்றுப்பொருள்கொள்ளப்படாமல் எச்சப்பொருள் கொள்ளப்படும்.

(உ-ம்.)

உண்டான்வந்தான் எனவரின் உண்டுவந்தான் எனவினையெச்சமாகவும், உண்டான் சாத்தனூர்க்குப் போயினான் எனவரின் உண்டசாத்தனூர்க்குப்போயினான் எனப் பெயரெச்சமாகவும், உச்சிக்கூப்பியகையினன் தற்புகழ்ந்து எனவரின் உச்சிக்கூப்பியகையினனாகித் தற்புகழ்ந்து. என வினையெச்சமாகவும், வெந்திறலினன் விறல்வழுதி எனவரின் வெந்திறலினனாகிய விறல்வழுதி எனப் பெயரெச்சமாகவும் பொருள்கொள்ளப்படும்.

௱௧௧ தன்வினைமுதல்வினையைக் கொள்ளும் வினையெச்சங்கள் பிறவினைமுதல்வினையைக் கொண்டுவருமிடத்துப் பிறவினைமுதல்வினையைக்கொள்ளும் வினையெச்சமாகவும், வினைமுதனிலைகள் முற்றுப்பொருடருமிடத்து முற்றாகவும், வினை

யெச்சப்பொருடருமிடத்து வினையெச்சமாகவும் பொருள்கொள்ளப்படும்.

(உ-ம்)

சூரியன் பட்டுவந்தான் என்னுமிடத்துத் தன்வினைமுதல் வினையைக் கொள்ளும் பட்டு என்னுஞ் செய்தெனெச்சம் வந்தானென்னும் பிறவினைமுதல்வினையைக் கொண்டுவருதலின் அதனைப்படவென்னுஞ் செயவெனெச்சமாகத் திரித்துக் கொள்க.

பெறுவது கொள்வாருங் கள்வருநேர் என்னுமிடத்து நேர் என்பது நேர்வர் எனவினைமுற்றுப் பொருளைத் தருதலின் வினை முற்றாகவும், வரிப்புனைபந்து என்னுமிடத்து வரி என்பதுவரிந்து என வினையெச்சப்பொருடருதலின் வினையெச்சமாகவும் பொருள்கொள்ளப்படும்.

---

வினைச்சொல்லியல்

முற்றிற்று.

# இடைச்சொல்லியல்.

---

௱௯௪. இடைச்சொற்களாவன தனித்து நடக்குமாற்றலில்லனவாய்ப் பெயர் வினைகளோடு சேர்ந்து பொருளோடுணர்த்திவருஞ்சொற்களாம்

௱௯௫. அவை வேற்றுமை யுருபுகளும், விகுதியுருபுகளும், இடைநிலையுருபுகளும், சாரியையுருபுகளும், ஒப்புருபுகளும், சுட்டுப்பொருளை யுணர்த்திவருபவைகளும், வினாப்பொருளை யுணர்த்திவருபவைகளும், தத்தமக்குரிய பொருள்களையுணர்த்திவரும் ஏ, ஓ, உம், என, என்று, கொல், மற்று, மன், அம்ம, தொறும், தோறும், இனி, ஆவது, என்பவைகளும், ஒலி அச்சம் விரைவு இவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருபவைகளும், இரக்கப் பொருளையுணர்த்திவருபவைகளும், இகழ்ச்சிப்பொருளையுணர்த்திவருபவைகளும், அதிசயப்பொருளை யுணர்த்திவருபவைகளும், இசைநிறைத்தலே பொருளாய்வருபவைகளும், அசைத்தலே பொருளாய் நிற்பவைகளும் ஆம்.

௩௬௬. வேற்றுமையுருபிடைச்சொற்களாவன முன்பெயரியலிலே சொல்லப்பட்ட ஐ, ஆல், கு, முதலியனவாம்.

௩௬௭. விகுதி யுருபிடைச் சொற்களாவன முன் பெயரியலிலும் வினை யியலிலுஞ் சொல்லப்பட்ட அன், ஆன், அள், ஆள் முதலியனவாம்.

௩௬௮. இடைநிலை யுருபிடைச் சொற்களாவன மேலியலிற் கூறப்பட்ட த், ட், ற், இன், கின்று, கிறு முதலியனவாம்.

௩௬௯. சாரியையுருபிடைச் சொற்களாவன அன், ஆன், அம், ஆம், அல், அத்து, அற்று, இன், இற்று, தம், நம், நும், அ, ஆ, உ, எ, ஐ, கு, து, ன் முதலியனவாம்.

(உ-ம்.)

அதன்கால், ஒருபாற்கு, புளியங்காய், புற்றுஞ்சோறு, தொடையல், மரத்துக்கோடு, பலவற்றை, வண்டின்கால், பதிற்றுப்பத்து, எல்லார்தம்மையும், எல்லாநம்மையும், எல்லீர்நும்மையும், தமிழப்பிள்ளை

இல்லாப்பொருள், உண்ணுவான், ஒன்றேகால், இரட்டைப்பிள்ளை, உண்குவான், செய்துகொண்டான், ஆன் எனவரும்.

௨௱. ஒப்புருபிடைச்சொற்களாவன போல, ஒப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன முதலியனவாம்.

(உ-ம்)

புலிபோலப்பாய்ந்தான், குருவியொப்பக்கூப்பிட்டான், புலியன்னகொற்றன், எனவரும். மற்றவையுமிப்படியே.

போல, ஒப்ப, நேர, நிகர, என்பன இடைச்சொல்லடியாகப்பிறந்த வினையெச்சவினை எனவும், அவைகளிலே போல், ஒப்பு, நேர், நிகர், என்னு முதனிலைகளே இடைச்சொல்லெனவும், அன்ன, இன்ன, என்பன இடைச்சொல்லடியாகப்பிறந்த பெயரெச்சவினைக்குறிப்பெனவும், அவைகளிலே அ, இ, என்னு முதனிலைகளே இடைச்சொல்லெனவுங்கொள்க.

௨௱௧. சுட்டுப்பொருளைத்தருமிடை

ச்சொற்களாவன அ,இ,உ,என்பனவாம்.

(உ-ம்)

அக்கொற்றன்,இக்கொற்றன்,உக்கொற்றன்,என்வரும். அ என்பது அந்த எ-ம், இ என்பது இந்த எ-ம்,மருவியும்வரும்.

௨௱௨. வினாப்பொருளைத்தருமிடைச்சொற்களாவன எ,யா,ஆ,முதலியனவாம்.

(உ-ம்.)

எக்கொற்றன்,யாங்ஙனம்,கொற்றனா எனவரும்.

௨௱௩. ஏகாரவிடைச்சொல் தேற்றமும்,வினாவும்,எண்ணும், பிரிநிலையும்,எதிர்மறையும், இசைநிறையும், ஈற்றசையும் என்னும் ஏழுபொருளில்வரும்.

(உ-ம்.)

உண்டே மறுமை என்பதில் ஏ தெளிவுப்பொருளைத் தருதலாலே தேற்றத்தில் வந்தது.

நீயே கொண்டாய் என்பதில் நீயா கொண்டாயென வினவிநிற்கையால் வினாப்பொருளில்வந்தது.

நிலமே நீரே தீயே என்பதில் நில
மும், நீரும், தீயும், என எண்ணிநிற்றலால்
ஏ எண்ணுப்பொருளில்வந்தது.

அவருளிவனேகொண்டான் என்பதி
ல் ஒருகூட்டத்திலிருந்து ஒருவனைப் பிரி
த்துநிற்றலால ஏ பிரிநிலையில்வந்தது.

நானே கொண்டேன் என்பதில் நா
ன் கொள்கிலேனென்னும் பொருளைத்த
ருதலால் ஏ எதிர்மறையில்வந்தது.

ஏயே யிவளொருத்திபேடி என்பதி
ல் வேறுபொருளின்றி யிசைநிறைத்து நி
ற்றலால் ஏ இசைநிறையில்வந்தது.

இயம்புவனெழுதே என்பதில் வே
றுபொருளின்றி யிறுதியில் அசைத்துநிற்
கையால் ஏ ஈற்றசையில்வந்தது.

௨௱௪. ஓகாரவிடைச்சொல் ஒழியி
சையும், வினவும், சிறப்பும், எதிர்மறையும்,
தெரிநிலையும், கழிவும், பிரிநிலையும், அசை
நிலையும் ஆகிய எட்டுப்பொருளில்வரும்.

(உ-ம்)

உன்னை நற்கோ வந்தாய் என்பதில்

நீலகஞ்செய்பவந்தாய் என ஒழிந்தசொற்களைத்தருதலால் ஓ ஒழியிசையில்வந்தது.

குற்றியோமகனோ என்பதிலே குற்றியா மகனா என வினாவிநிற்கையால் ஓ வினாவில்வந்தது.

சிறப்பு உயர்வுசிறப்பு இழிவு சிறப்பு என இருவகைப்படும்.

ஓஒபெரியன் என்பதில் ஒருவனது பெருமை மிகுதியைக் காட்டுதலால் ஓ உயர்வுசிறப்பிலவந்தது.

ஓஒகொடியன் என்பதில் ஒருவனது கொடுமை மிகுதியையுணர்த்தலால் ஓ இழிவுசிறப்பில்வந்தது.

அவனோகொண்டான் என்பதில் கொண்டிலனென்னும் பொருளைத்தரின் ஓ எதிர்மறை.

அலியைநோக்கி ஆணோ அதுவுமன்று பெண்ணோ அதுவுமன்று என்னுமிடத்து அத்தன்மையிலாமையைத் தெரியவுணர்த்தலால் ஓ தெரிநிலையில்வந்தது.

உற்றறியுணராது கேட்டானோ ஓஒ மக்கோ ருற்றறியுணராரோ என்னுமிடத்துக் கழிவிரக்கப்பொருளைத் தருதலால் ஓ கழிவுப்பொருளில்வந்தது.

* இவனோகொண்டான் என்பதிலேப லரிலிருந்து ஒருவனைப்பிரித்தலாலே ஓ பிரிநிலையிலவந்தது.

காணியவம்மினோ கங்குலது நிலையே என்பதில் ஓ வேறுபொருளின்றி அசைநிலையாய்வந்தது.

உ௭௫. உம்மென்னுமிடைச்சொல் எதிர்மறையும், சிறப்பும், ஐயமும், எச்சமும், முற்றும், எண்ணும், தெரிநிலையும், ஆக்கமும் ஆகிய எட்டுப்பொருளில்வரும்.

(உ-ம்.)

சாத்தன்வருவதற்குமுரியன் என்பதில் வாராமைக்குமுரியனெனப் பொருடருதலின் உம் எதிர்மறையில்வந்தது.

சிறப்பு உயர்வுசிறப்பு, இழிவுசிறப்பு என இருவகைப்படும்.

குறவருமருளுங்குன்று என்பதில்

குன்றினுயர்வைச் சிறப்பித்தலால் உம் - உயர்வு சிறப்பில்வந்தது.

புலையனும்விரும்பாப் புன்புலால்யாக்கை என்பதில் உடம்பினிழிவைச் சிறப்பித்தலால் உம் இழிவு சிறப்பில் வந்தது.

பத்தாயினுமெட்டாயினுங்கொடு என்றவிடத்து ஒன்றைத் துணியாமையைப் புணர்த்தலால் உம் ஐயத்தில்வந்தது.

எச்சவும்மை இறந்தது தழீஇயதும், எதிரது தழீஇயதும் என இருவகைப்படும்

சாத்தனும் வந்தான் என்பதில் கொற்றன்வந்ததுமன்றி எனப்பொருள்படின் இறந்தது தழீஇயவெச்சவும்மையாம்.

இனிக்கொற்றனும் வருவான் எனப் பொருள்படின் எதிரது தழீஇய வெச்சவும்மையாம்.

தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் என்பதில் குறைவில்பொருளைத் தருதலால் உம் முற்றுப்பொருளில்வந்தது.

சாத்தனுங் கொற்றனும் பூதனும் வ

ந்தார் என்பதில் எண்ணிநிற்றலின் உம்
மெண்ணுப்பொருளில்வந்தது.

அலியைநோக்கி ஆணுமன்றுபெண்
ணுமன்று என்பதில் இன்னதெனத் தெரி
யுமிடத்து வருதலால் உம் தெரிநிலையில்வ
ந்தது.

பாலுமாயிற்று என்பதில் அதுவே
மருந்துமாயிற்று எனப் பொருள்படின்
ஆக்கவும்மையாம்.

அன்றியும் எல்லாரும் வந்திலர் என
முற்றும்மை எதிர்மறை வினையையடுத்து
வருங்கால் எச்சவும்மையுமாமெனக் கொ
ள்க.

௨௱௪௬. என என்று என்னு மிரண்டி
டைச்சொற்களும் வினை, பெயர், எண், ப
ண்பு, குறிப்பு, இசை, உவமை, என்னும்
ஏழுபொருளில்வரும். (உ-ம்)

மைந்தன் பிறந்தானெனத் தந்தையு
வந்தான் என்பதில் என என்பது வினை
யோடியைந்தது.

உளனெனப்படுவ துறையூர் என்பதி
ல் என என்பது பெயரோடியைந்தது.

நிலமென நீரென நெருப்பென காற்றென ஆகாயமெனப் பூதங்களைந்து என்பதில் என என்பது எண்ணுப் பொருளில் வந்தது.

வெள்ளென விளர்த்தது என்பதில் என என்பது பண்போடியைந்தது.

பொள்ளென வாங்கேபுறம்வேரார் என்பதில் என என்பது விரைவுக் குறிப்போடியைந்தது.

ஒல்லெனவொலித்தது என்பதில் என, என்பது இசை என்னு மொலிக்குறிப்போடியைந்தது.

புலிபாய்ந்தெனப்பாய்ந்தான் என்பதில் என என்பது உவமையோடியைந்தது. என்று என்பதையு மிப்படியே யொட்டிக்கொள்க.

மேற்கூறிய எ, உம், என, என்று, என்னு நான்கிடைச்சொற்களன்றியும் என்றா, எனா, ஒடு, என்னுமிம்மூன்றிடைச்சொற்களும் எண்ணுப் பொருளில் வரும். (உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| நிலமென்றா | நீரென்றா | எ-ம், | வரும். |
| நிலமெனா | நீரெனா | எ-ம், | |
| நிலனொடு | நீரொடு | எ-ம். | |

யின

இவ்வெண்ணிடைச்சொல் சாத்தனும் கொற்றனும் தேவனும் பூதனும் நால்வரும்வந்தார் எனத்தொகைபெற்றும், பகைபாவமச்சம்பழியெனநான்கும் என அது எண்ணுப்பொருடோறும் பொருந்த ஒரிடத்தும், நின்று சாத்தன் கொற்றன் தேவன் பூதன் நால்வரும்வந்தாரென அதுதொக்கும் கற்றுங்கேட்டுங்கற்பனைகடந்தார் என அதுசிறுபான்மைவினையோடும், பொருந்தியும், வருதலுமுளவெனக்கொள்க.

௨௱௭. கொல்லென்னு மிடைச்சொல் ஐயப்பொருளிலும், அசைநிலையிலும் வரும். (உ-ம்)

அவன்கொல் இவன்கொல் என்பதில் கொல் அவனோ விவனோ வென ஐயப்ருளில்வந்தது.

கற்றதனாலாயபயனென்கொல் என்பதில் கொல் வேறுபொருளின்றி வருதலால் அசைநிலையில்வந்தது.

௨௱௮. மற்றென்னுமிடைச்சொல்வினைமாற்றுப் பொருளிலும், பிறிதென்னும் பொருளிலும் அசைநிலையிலும் வரும்.

(உ-ம்.)

மற்றறிவாநல்வினையாமிளைய மென்றூஉ என்னுமிடத்து நல்வினையை விரைந்தறிவாமென்னும் வினையை யொழித்து விளையாதறிவாமென்னும் வினையைத்தருதலால் மற்று வினைமாற்றில்வந்தது.

ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று-சூழினுந்தான்முந் துறும்என்பதில்ஊழல்லதொன்று என்னும்பொருளைத்தருதலால் மற்று பிறிதென்னும்பொருளில்வந்தது.

மற்றடிகள்கண்டருள்செய்யமலரடிக்கீழ் என்பதில் வேறுபொருளுணர்த்தாமையால் மற்று அசைநிலையில்வந்தது.

௨௱௧௩. மன்னென்னுமிடைச்சொல் ஒழியிசைப்பொருளிலும், ஆக்கப்பொருளிலும், கழிவுப்பொருளிலும், மிகுதிப்பொருளிலும், அசைநிலையிலும் வரும்.

(உ-ம்)

கூரியதோர்வாண்மன் என்னுமிடத்து இரும்பை யறத்துணித்தது என்னும் ஒழிந்தசொற்களைத் தருதலால் மன் ஒழி

யிசைப் பொருளில்வந்தது.

நெடியன்மன் என்னுமிடத்து அவ
னேவலியனுமாயினான் எனப்பொருள்ப
டுதலால் மன் ஆக்கப்பொருளில்வந்தது.

சிறியகட் பெறினே யெமக்கீயுமன்
னே என்னுமிடத்து அவனிறத்தலின் எம
க்குக்கொடுத்தலகழிந்தது எனப்பொருள்
படுதலால மன் கழிவுப்பொருளில் வந்த
து.

எந்தையெமக்கருளுமன் என்னுமி
டத்துமிகுதியுங்கொடுப்பான் எனப்பொ
ருள்படுதலால மன் மிகுதிப்பொருளில்வ
ந்தது.

அதுமற்கொண்கன்றேரே என்னுமி
டத்து வேறுபொருளின்றிவருதலால்மன்
அசைநிலையில்வந்தது

உாய அம்மவென்னுமிடைச்சொல்
ஒன்றுசொல்லுவேன்கேளென்னும் ஏவற்
பொருளிலும் அசைநிலையிலும் வரும்.

(உ-ம்)

அம்மவாழி தோழி என்னுமிடத்து
அம்ம என்பது ஒன்றுசொல்லுவேன் கே

ளென்னும் பொருளில் வந்தது.

அதுமற்றம்ம என்னுமிடத்து வே றுபொருளின்றிவருதலால் அம்ம என்பது அசைநிலையில்வந்தது.

உ௱௰க. தொறும் தோறும் என்னுமிவ்விரண்டிடைச் சொற்களும் இடப்பன்மைப்பொருளிலும், தொழிற்பயில்வுப் பொருளிலும்வரும். (உ-ம்)

சோழநாட்டி லூர்தொறுஞ் சிவாலயங்களுண்டு எ-ம், படிக்குந்தோறும்.பயனுண்டு எ-ம், வரும்.

உ௱௰உ. இனியென்பது எல்லைப்பொ பொருளிலும், காலப் பொருளிலும்வரும்.

(உ-ம்)

இனியெம்மோர் எ-ம், இனிவருவேன் எ-ம் வரும்.

உ௱௰ங ஆவது என்னு மிடைச்சொல் விகற்பப்பொருளில்வரும். (உ-ம்)

வல்லெழுத்தாவது மெய்யெழுத்தாவது மிகும் எனவரும்.

உ௱௰ச. கோவென சோவென வ

ழெமன ஒல்லென கஃறென சுஃறென எ-ம் கடகடென கரகரென திடுதிடென நெறு நெறென படபடென எ-ம், வருவன ஒலிக் குறிப்புப் பொருளைத்தரு மிடைச் சொற்களாம்.

௨௱௰௫. ஆங்ஙனன ஆஞ்ஞக்கென திட்கென திடுக்கென என்றாற்போல்வன அச்சக்குறிப்புப்பொருளைத்தரு மிடைச் சொற்களாம்.

௨௱௰௬. பொள்ளென பொருக்கெ ன ஞெரேலென என்றாற்போல்வன வி ரைவுக்குறிப்புப்பொருளைத்தரும் இடை ச்சொற்களாம்.

௨௱௰௭. அந்தோ அன்னோ ஐயோ ஆஅ ஓஒ என்றாற்போல்வனஇரக்கப்பொ ருளைத்தரும் இடைச்சொற்களாம்.

௨௱௰௮. சீ சீ சீ சீச்சீ சை முதலிய ன இகழ்ச்சிப் பொருளைத்தரும் இடைச் சொற்களாம்.

௨௱௰௯ ஆஅ ஆகா ஓஒ ஓகோ அ ம்மா என்றாற்போல்வன அதிசயப் பொ ருளைத்தரும் இடைச்சொற்களாம்.

௨௨௰ மியா, இக, மோ, மதி, அத்தை இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ, என்பன முன்னிலையிடத்துவேறுபொருளின்றிஅசைத்தலைபொருளாய்வரும் இடைச்சொற்களாம். (உ-ம்)

கேண்மியா என்பதில் மியாவென்பது முன்னிலையிடத்து அசையாய் வந்தது. மற்றவைகளுமிப்படியே.

௨௨௧. யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஓரும், போலும், அன்று, ஆம், முதலியன மூவிடத்தும்வேறுபொருளின்றி அசைத்தலை பொருளாய்வரும் இடைச்சொற்களாம். (உ-ம்)

யா பன்னிருவர் மாணாக்க ரகத்திய னார்க்கு என்பதில் யா என்பது அசையாய்வந்தது. மற்றவைகளுமிப்படியே.

---

இடைச்சொல்லியல்

முற்றுப்பெற்றது.

௬. வது

# உரிச்சொல்லியல்

---

௨௨௨. உரிச்சொற்களாவன பொருள்களின் பண்புகளை யுணர்த்துஞ் சொற்களாம்.

அவை குணப்பண்புச்சொற்களும், தொழிற்பண்புச்சொற்களும் என விருவகைப்படும்.

௨௨௩. குணப்பண்புச்சொற்கள் நிறத்தையும், வடிவையும், சுவையையும், பரிசத்தையும், நாற்றத்தையும், சாதியையும், அளவையும், அறிவு முதலியவற்றையும் உணர்த்துஞ்சொற்களாம்.

௨௨௪. நிறத்தையுணர்த்தும் பண்புச்சொற்கள் செம்மை, கருமை, வெண்மை பொன்மை, பசுமை முதலியனவாம்.

௨௨௫. வடிவையுணர்த்தும் பண்புச்சொற்கள் வட்டம், சதுரம், இருகோணம், முக்கோணம், கூன், குறள் முதலியனவாம்

௨௨௬. சுவையையுணர்த்தும்பண்புச்சொற்கள் கைப்பு, புளிப்பு, துவர்ப்பு

வர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்னும் அறு
சுவைகளை யுணர்த்திவருஞ் சொற்களாம்.

௨௨௭. பரிசத்தை யுணர்த்தும் பண்
புச்சொற்கள் வெம்மை, தண்மை, மென்
மை, வன்மை, நொய்ம்மை, சீர்மை, இழு
மெனல், சருச்சரை என்னும் எண்வகைப்
பரிசங்களையுணர்த்திவருஞ் சொற்களாம்.

௨௨௮. நாற்றத்தை யுணர்த்தும் பண்
புச்சொற்கள் நற்கந்தம், துர்க்கந்தம், என்
னும் இருவகை நாற்றங்களை யுணர்த்திவரு
ஞ் சொற்களாம்.

௨௨௯. சாதியையுணர்த்தும் பண்பு
ச்சொற்கள் அந்தணர், அரசர் முதலியசா
தியையுணர்த்திவருஞ் சொற்களாம். பசு, எ
ருமை, ஆடு, மர முதலியவைகளுஞ் சாதியையு
ணர்த்துவனவென்றறிக.

௨௩௰. அளவையுணர்த்தும் பண்புச்
சொற்கள் குறுமை, நெடுமை முதலிய அ
ளவையுணர்த்திவருஞ் சொற்களாம்.

௨௩௧. அறிவு முதலியனவற்றை யுணர்
த்தும் பண்புச்சொற்கள் அறிவு, அச்சம்,

மானம், பொறுமை, மயக்கம், விருப்பு, வெறுப்பு, இரக்கம், நன்மை, தீமை முதலியனவாம்.

மேற்கூறிய நிறமுதலியவற்றை யுணர்த்துஞ்சொற்கள் பொருள்களின் குணப்பண்பை யுணர்த்துமிடத்து உரிச்சொற்களென்றும், அப்பண்புகளுக்குப் பெயர்களாய் வருமிடத்துப் பெயர்ச்சொற்களென்றுங்கொள்ளப்படும்.

௨௯௨. தொழிற் பண்புச்சொற்கள் பொருள்களின் றொழிற்பண்புகளை யுணர்த்தும் நட, வா, முதலியனவாம்.

இவை பொருள்களின் றொழிற்பண்பையுணர்த்து மிடத்து உரிச்சொற்களென்றும், வினைமுதல்முதலிய காரணங்களாற்புடைபெயர்ந்து தொழிற்பண்பின் காரியமாய்ப் பொருட்புடை பெயர்ச்சியை யுணர்த்துமிடத்து வினைச்சொற்களென்றும், தொழிற்குத் தொன்றுதொட்டுவழங்கும்பெயர்களாக வருமிடத்துத்தனிவினைப்பெயர்களென்றுங்கொள்ளப்படும்.

உ௩௩. இவ்வுரிச்சொற்கள் ஒருகுணத்தையும், பலகுணத்தையுமுணர்த்திவரும்.

உ௩௪. சால், உறு, தவ, நனி, கூர், கழி, என்பன மிகுதியென்னும் ஒருகுணத்தை யுணர்த்துமுரிச்சொற்களாம். (உ-ம்)

சீர்சாலகத்தியன், உறுபுகழ், தவப்பல, நனிபேதை, துயர்கூர்ந்தான், கழிநலம், எனவரும்.

உ௩௫. செழுமை என்பது வளனும் கொழுப்பும் என்னு மிருகுணத்தை யுணர்த்துமுரிச்சொல்லாம். (உ-ம்)

செழுஞ்சாலி எ-ம்,
செழும்புலியேறு எ-ம், வரும்.

இவ்வாறு ஒருகுணத்தையும் பலகுணத்தையும் உணர்த்திவரும் ஏனைய உரிச்சொற்க ளெல்லாவற்றையு மறிந்து கொள்க.

பெயரியன் முதலிய நான்கியல்களிலுஞ் சொல்லியவாறுமுறையே முதாயவற்றானும் உருபாற்றலானுமொம்

ருளைப் புணர்த்தி நிற்குஞ் சொற்களைப் பெயர்ச்சொற்களென்றும், வினைமுதன் முதலிய காரணங்களாமேல புடைபெயரும் பொருட்புடைபெயர்ச்சியைப் புணர்த்தி நிற்குஞ் சொற்களை வினைச்சொற்களென்றும், பொருளையும் பொருட்புடைபெயர்ச்சியையுந் தப்பாமலொற்றித் தத்தங் குறிப்பானுணர்த்திப் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களுமாகாமல் அவற்றின்வேறுமாகாமல் இடைநிகரனவாய் நிற்குஞ் சொற்களை இடைச்சொற்களென்றும், பொருட்கு உரிமைபூண்டு நிற்பனவாகிய குணப்பண்பைத் தொழிற்பண்பையும் உணர்த்தி நிற்குஞ் சொற்களை உரிச்சொற்களென்றுங் கொள்க.

---

உரிச்சொல்லியல்

முற்றிற்று.

சொல்லதிகாரம் - முற்றுப்பெற்றது.

# மூன்றாவது.

# புணர்ச்சியதிகாரம்.

## ௧. வது.

## உயிரீற்றுப்புணரியல்.

௨௬௬. புணர்ச்சியதிகாரம் உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப்புணரியல், பொதுப்புணரியல், வடவெழுத்துப்புணரியல் என நான்கியல்களாக வகுக்கப்படும்.

௨௬௭. புணர்ச்சியாவது நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வதாம்.

௨௬௮. அவை புணருமிடத்து வேற்றுமைவழியாலும் அல்வழியாலும் புணரும்.

௨௬௯. வேற்றுமைப் புணர்ச்சியாவது ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறுருபும் இடையிலே மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரச்சொற்றொடர்ப

ணர்வதாம். (உ-ம்)

| | | |
|---|---|---|
| மரம்வெட்டினான் | மரத்தைவெட்டினான் | தொகை. |
| கல்லெறிந்தான் | கல்லாலெறிந்தான் | |
| கொற்றன்மகன் | கொற்றனுக்குமகன் | |
| மலைவீழருவி | மலையின்வீழருவி | |
| சாத்தன்கை | சாத்தனதுகை | |
| மலைநெல் | மலையின்கணெல் | |

௨௪௰. அல்வழிப் புணர்ச்சியாவது வேற்றுமையல்லாத வழியிற்புணர்வதாம்.

௨௪௧. அது வினைத்தொகையும், பண்புத்தொகையும், உவமைத்தொகையும், உம்மைத்தொகையும், அன்மொழித்தொகையும் என்னும் ஐந்துதொகைநிலைத்தொடரும், எழுவாய்த்தொடரும், விளித்தொடரும், வினைமுற்றுத்தொடரும், பெயரெச்சத்தொடரும், வினையெச்சத்தொடரும், இடைச்சொற்றொடரும், உரிச்சொற்றொடரும் என்னும் எழுதொகாநிலைத்தொடருமாகப் பன்னிரண்டுவகைப்படும்.

| | |
|---|---|
| கொல்யானை, ஓடுபாம்பு | வினைத்தொகை |
| கருங்குதிரை, செந்தாமரை | பண்புத்தொகை. |

| | |
|---|---|
| சாரைப்பாம்பு<br>ஆயன்சாத்தன் | இருபெயரொட்டுப்பண்புத்தொகை |
| பவளவாய்<br>மதிமுகம் | உவமைத்தொகை |
| இராப்பகல்<br>உடலுயிர் | உம்மைத்தொகை |
| பொற்றொடி<br>தாழ்குழல் | அன்மொழித்தொகை. |
| சாத்தன்வந்தான்<br>மரம்வளர்ந்தது | எழுவாய்த்தொடர் |
| சாத்தாவா<br>கொற்றாகொள் | விளித்தொடர். |
| வந்தான்சாத்தன்<br>வளர்ந்ததுமரம் | வினைமுற்றுத்தொடர் |
| வந்தசாத்தன்<br>வருகின்றபுலி | பெயரெச்சத்தொடர் |
| வந்துபோனான்<br>வரச்சொன்னான் | வினையெச்சத்தொடர் |
| மற்றொன்று<br>இனிச்செய்வேன் | இடைச்சொற்றொடர். |

நலிபேதை } உரிச்சொற்றொடர்
கடிக்கமலம் } எனவரும்.

பொன்னனவன் எனவரும் குறிப்பு வினைமுற்று வினைமுற்றுத்தொடரிலும், கரியகுதிரை எனவருங் குறிப்புப்பெயரெச்சம் பெயரெச்சத்தொடரிலும், நாளன்றிப் போமுன் எனவருங் குறிப்புவினையெச்சம் வினையெச்சத் தொடரிலும் அடங்குமெனக்கொள்க.

அன்றியும் பாம்பு பாம்பு என வெருச்சொல்லடுக்கி வருதன் முதலாக வேற்றுமைவழிபிற வாராதனவெல்லாம் அல்வழிபாற்படுமெனவுணர்க.

௨௪௨. இப்படி மொழிகள் வேற்றுமைவழியாலும் அல்வழியாலும் புணருமிடத்து இயல்பாகவாவது விகாரமாகவாவது புணரும்.

௨௪௩. இயல்புப் புணர்ச்சியாவது நிலைமொழியும் வருமொழியும் விகாரமின்றிப் புணர்வதாம். (உ-ம்)

பொன்மணி சாத்தன்கை எனவரும்.

௨௪௪. சொற்புணர்ச்சியாவது நிலைமொழியேனும், வருமொழியேனும், இவ்விருமொழியுமேனும், தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் இம்மூன்று விகாரங்களுள் ஒன்றையாவது பலவற்றையாவது பெற்றுப்புணர்வதாம். (உ-ம்),

| | | |
|---|---|---|
| வாழைப்பழம் | தோன்றல். | எனவரும் |
| மட்குடம், | திரிதல். | |
| மரவேர். | கெடுதல். | |
| நிலப்பனை. | கெடுதல், தோன்றல். | |
| பனங்காய். | கெடுதல், தோன்றல், திரிதல், | |

௨௪௫. இ, ஈ, ஐ, இம்மூன்றுயிரீற்றின்முன்னும் உயிர்முதன்மொழிவரின் இடையில யகரவுடம்படுமெய்வரும் (உ-ம்),

கிளி- அழகு, கிளியழகு
தீ- அழகு, தீயழகு
கை- அழகு, கையழகு
} எனவரும்.

௨௪௬. அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ இவ்வேழுயிரீற்றின்முன்னும் உயிர்முதன்மொழிவரின் இடையில் வகரவுடம்படுமெய்வரும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| பல- | அணி, | பலவணி. |
| பலா- | இலை, | பலாவிலை. |
| திரு- | அடி, | திருவடி. |
| பூ- | அரும்பு, | பூவரும்பு. |
| நொ- | அழகா, | நொவ்வழகா. |
| கோ- | அழகு, | கோவழகு. |
| கௌ- | அழகு, | கௌவழகு. |

என வரும்.

உ௬௭. ஏகார வுயிரீற்றின்முன் உயிர்முதன் மொழிவரின் இடையில் யகரமாவது வகரமாவது உடம்படுமெய்யாகவரும்.

(உ-ம்)

அவனே-அடித்தான், அவனேயடித்தான், } என
சே- உழுதது, சேவுழுதது. } வரும்.

உ௬௮. குற்றியலுகர வீற்றின்முன் உயிர்முதன் மொழிவந்தால் அவ்வுகரங் கெடும். உகரங்கெடநின்ற மெய்யின்மேல் வந்தவுயிரேறும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| ஆடு- | அரிது, | ஆடரிது. |
| அஃது- | இல்லை, | அஃதில்லை. |
| வரகு- | அரிது, | வரகரிது. |
| கொக்கு- | ஓடிற்று, | கொக்கோடிற்று. |
| குரங்கு- | ஏறிற்று, | குரங்கேறிற்று. |
| தெங்கு- | அழகிது, | தெங்கழகிது, |

என வரும்.

௨௪௧. வேற்றுமைப்பொருளில் உயிரீற்றுமரப்பெயர்முன் வல்லெழுத்துவந்தாற் சிலவற்றின்முன் வந்தவல்லெழுத்தும், சிலவற்றின்முன் அவ்வல்லெழுத்திற்கினமாகிய மெல்லெழுத்தும், சிலவற்றின்முன் அம்முச்சாரியையுந் தோன்றும்.

(உ-ம்.)

பலாக்காய்
ஆத்திச்செதிள்
இலந்தைத்துளிர்
கொன்றைப்பூ
} வல்லெழுத்துத் தோன்றின.

விளங்காய்
காயாஞ்செதிள்
மாந்துளிர்
களம்பழம்
} மெல்லெழுத்துத் தோன்றின.

புளியங்காய்
அரையஞ்செதிள்
கடப்பந்துளிர்
வேப்பம்பழம்
} அம்முச்சாரியை தோன்றிற்று.

ஆத்தியும் ஐகாரவீற்றுமரப்பெய

ர்களுட்சில பனங்காய், மாதளம்பழம் என ஐகாரங்கெட்டு அம்முச்சாரியைபெற்றும் வரும்.

இம்மரப்பெயர்களின்முன் அல்வழியில்வரும் வல்லினமும், இருவழியிலும் வருமெல்லினமும், இடையினமும், அவ்வவ்வீறு கூறுமிடத்துக் கூறப்படும்விதிகளைப்பெறும்.

௨௱௰ மூன்று சுட்டிடைச்சொன் முன்னும், எ என்னும் வினாவிடைச்சொன் முன்னும், யகரமொழிந்த மெய்கள்வரின் வந்தவெழுத்துமிகும்.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| அக்கொற்றன் | இக்கொற்றன் | அல்வழி. |
| உக்கொற்றன் | எக்கொற்றன் | |
| அந்நாள் | இந்நாள் | |
| உந்நாள் | எந்நாள் | |
| அவ்வாழ்வு | இவ்வாழ்வு | |
| உவ்வாழ்வு | எவ்வாழ்வு | |

௨௱௰௧. இவைகளின்முன் யகரம்

உயிரும் வந்தால் இடையில் வகரந்தோன்றும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| அவ்யானை | இவ்யானை | எனவரும். |
| உவ்யானை | எவ்யானை | |
| அவ்வுயிர் | இவ்வுயிர் | |
| உவ்வுயிர் | எவ்வுயிர் | |

௨௫௨. அந்த, இந்த, எந்த என மரூஉ மொழிகளாய் வருஞ் சுட்டுவினாக்களின் முன் வரு வல்லினமிரட்டித்து வரு மெல்லினமும் இடையினமும் இயல்பாம். (உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| அந்தக்கல் | இந்தக்கல் | எந்தக்கல் | எனவரும். |
| அந்தமலை | இந்தமலை | எந்தமலை | |
| அந்தயானை | இந்தயானை | எந்தயானை | |

[அகரவீறு]

௨௫௩. அகரவீற்றுப் பெயர்ச்சொன் முன்வரும் வல்லெழுத்து இருவழியிலு மிகும். (உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| விளக்குறிது | விளக்குறுமை | என |
| அதச்சிறிது | அதச்சிறுமை | வரும் |

உ௫௪. அகரவீற்றுச் செயவென்னும் வினையெச்சத்தின் முன்னும், இடைச்சொன்முன்னும், உரிச்சொன் முன்னும், வரும் வல்லினமிகும். (உ-ம்)

உண்ணக்கொண்டான் }
புலிபோலப்பாய்ந்தான் } வினையெச்சம்.
பொள்ளெனப்புறம்வேரார் - இடைச்சொல்.
தவப்பெரியன் - உரிச்சொல்.

எனவரும்.

உ௫௫. அகரவீற்றுப் பெயரெச்சத்தின் முன்னும், வியங்கோள் வினைமுற்றின் முன்னும், அஃறிணைப் பன்மை வினைமுற்றின் முன்னும், ஏவல்வினைமுற்றின் முன்னும், ஆறாம்வேற்றுமையின் அகரவுருபின் முன்னும், அம்மவென்னும் இடைச்சொன்முன்னும் வரும் வல்லினம் இயல்பாம். (உ-ம்)

உண்டகுதிரை }
உண்கின்றசெந்நாய் } பெயரெச்சம்.
உண்ணுதகர் }

வாழ்ககொற்றா }
வாழியசாத்தா } வியங்கோள் வினைமுற்று.

| | | |
|---|---|---|
| உண்டனகுதிரைகள்<br>உண்கின்றனசெந்நாய்கள்<br>உண்பனதகர்கள்<br>உண்ணாதனபன்றிகள் | } | அஃறிணைப் பன்மை வினைமுற்று |
| நடகொற்றா<br>கடசாத்தா | } | ஏவல்வினைமுற்று. |
| தனகைகள் | | அகரவுருபு. |
| அம்மகொற்றா,<br>அம்மசாத்தா | } | அம்மவென்னும் இடைச்சொல். |

எனவரும்.

அன்றியும் - உண்ணியகொண்டான் உண்ணியசென்றான் எனச்செய்யுளிமேல வருஞ்செய்யியவென்னும் வாய்பாட்டுவினையெச்சத்தின்முன் வரும்வல்லினம் இயல்பாமெனவும், வாழியசாத்தா என்பது வாழிசாத்தா என வீறுகெடுமெனவும், கெட்ட விடத்துவரும் வல்லினம் இயல்பா மெனவும் அறிக.

௨௩௯. மேற்கூறிய அகரவீற்றுச் சொற்களின் முன் வருமெல்லினமும் இடையினமும் இருவழியிலும் இயல்பாம்.

(உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| விளாநீண்டது | விளாநீட்சி | எ-ம், |
| அதவவிது | அதவவிலை | |

உண்ணடாணடது
உண்டமான்
உண்டனவானரங்கள் } எ-ம், வரும்.

மற்றவைகளுமிப்படியே.

௨௫௭. பல சில என்னும் அகரவீற்றுச் சொற்கள் தம்முன்னர்த் தாம்வரின் வருமொழி முதல்வல்லெழுத்து இயல்பாகியும் மிக்கும், நிலைமொழி யீறுகெட்டும், நிலைமொழியீற்று அகரங்கெட லகரம் றகரமாய்த் திரிந்தும் பிரியாதும் வரும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| பலபல | சிலசில | எனவரும். |
| பலப்பல | சிலச்சில | |
| பல்லபல | சில்லசில | |
| பற்பல | சிற்சில | |
| பல்பல | சில்சில | |

அன்றியும் இவ்விருமொழிகளின் முன் பிறசொற்கள்வரின் பலகலை பஃகலை சிலசேனை சில்சேனை பலமலை பன்மலை சிலமலை சின்மலை பலயானை பல்யானை சிலயா

௯௯ சில்பாலன என நிலைமொழியீற்று அகரங் கெடாமலுங் கெட்டும்வருமெனவறிக.

[ஆகாரவீறு]

௨௫௮ ஆகாரவீற்றுப்பெயர்ச்சொற்கள் முன்வரும்வல்லினம் இருவழியிலுமி (கு-ம்)

| அல்வழி | வேற்றுமை | |
|---|---|---|
| தாராக்கடிது - | தாராக்கடுமை. | [illegible] |
| மூங்காச்சிறிது - | மூங்காச்சிறுமை | |
| உசாத்தீது - | உசாத்தீமை | |
| வயாப்பெரிது - | வயாப்பெருமை | |

௨௫௯ அல்வழியில் ஆ - மா - ஆமா என்கிற மூன்று பெயர்களின்முன்னும், யாவென்னும் வினைப்பெயர் முன்னும், ஆ என்னும் ஈற்று வினாவிடைச்சொன் முன்னும், ஆகாரவீற்றஃறிணைப் பன்மைவினைமுற்றின் முன்னும், ஆகாரவீற் றேவல்வினைமுற்றின் முன்னும், மியாவென்னுமிடைச்சொன் முன்னும்வரும்வல்லினம் இயல்பா

(கு-ம்)

குறிது மாசிறிது ஆமாபெரிது எ-ம்,
குறியன யாசிறியன யாதீயன. எ-ம்

சாத்தனைக்கொண்டான்
கொற்றனைச்சென்றான் } எ-ம்,

உண்ணாக்குதிரைகள்
ஓடாப்பசுந்தாய்கள்
நடவாதகரிகள்
செப்பாப்பரிதிகள் } எ-ம்,

தா கொற்றா
வா சாத்தா } எ-ம்,

கேண்மியா கொற்றா
சென்மியா சாத்தா } எ-ம், வரும்.

அன்றியும் உண்ணாக்கொற்றன் என ஈறுகெட்ட பெயரெச்சத்தின்முன்னும், உண்ணாப்போயினான் என ஈறுகெட்ட வினையெச்சத்தின்முன்னும் வரும் வல்லினம் மிகுமெனக்கொள்க.

௨௧௰. மேற்கூறிய ஆகாரவீற்றுச் சொற்களின்முன் மென்மெய்யினமும், இடையினமும் இருவழியினுமியல்பாம்.

(உ-ம்)

தாராஞான்றது - தாராஞாற்சி } அ
மூங்காவலிது - மூங்காவன்மை } ரு.

ஆ நீண்டது - ஆ நீட்சி } எ-ம்,
ஆயாது - ஆயாப்பு }
யா நீண்டன } எ-ம்,
யாவலிந்ன }
கொற்றநடந்தான் } எ-ம்,
கொற்றவந்தான் }
உண்ணநாகங்கள் } எ-ம்,
நடவாயானைகள் }
தாநாகா } எ-ம்,
வாவளவா }
வேண்டியாநாகா எ-ம், வரும்.

சுறவுக்கோடு - புறவுச்சிறை எனச்சு றெழுத்தின் மேனின்ற ஆகாரங்குறுகி உ கரச்சாரியை பெறுமெனவும் உகரச்சாரி யைபெற்றவிடத்துவரும்வல்லினமிகுமெ னவுங்கொள்க.

[இகரவீறு.]

௨௩௪. இகர வீற்று மொழிகளின் முன்வரும் வல்லினம் அல்வழியில் எழு வாய்த்தொடரிலும், வினைமுற்றுத் தொட ரிலும், உம்மைத் தொகையிலும், இயல்பா ம். இருபெயரொட்டுப் பண்புத் தொகை யிலும், உவமைத்தொகையிலும், செய்தெ

ன்னும் வாய்பாட்டு வினையெச்சத்தொடரிலும், குறிப்புவினையெச்சத் தொடரிலும், இடைச்சொற் றொடரிலும், உரிச்சொற் றொடரிலும், சிறுபான்மை பிறதொடரிலு மிகும்.

| | |
|---|---|
| பருத்திகுறிது<br>கொடிசிறிது | எழுவாய்த்தொடர் |
| உண்டிசாத்தா<br>உண்ணுதிகொற்றா | முன்னிலைவினைமுற்று. |
| எறிசாத்தா<br>படிகொற்றா | ஏவல்வினைமுற்று. |
| பரணிகார்த்திகை<br>வெள்ளிசனி | உம்மைத்தொகை. |

வருவல்லின மியல்பாயின.

| | |
|---|---|
| மாசித்திங்கள்<br>அலிக்கொற்றன் | பண்புத்தொகை. |
| காவிக்கண் | உவமைத்தொகை |
| தேடிக்கொண்டான்<br>ஓடிப்போவான் | செய்தென்னும் வினையெச்சம். |
| நாளன்றிச்செய்தான்<br>நாளின்றிப்போவான் | குறிப்பு வினையெச்சம். |

இனிச்செய்வேன், இடைச்சொல்.
கடிக்கமலம் உரிச்சொல்.

வரும்வல்லினமிக்கல.

௨௬௨. இகரவீற்றுமொழிகளின்முன் வேற்றுமையில்வரும் வல்லினம் மிகும்.

(உ-ம்)

கரிக்கோடு கிளிச்சிறகு
நரித்தலை பருத்திப்பூ
மாசித்திருவிழா காவித்தடம் } எனவரும்.

வரும்வல்லினம் வரிகட்டினான் என இரண்டனுருபுதொக வருமிடத்து இயல்பாமெனவும், வரிகலா குழலிசை எனச் சிறுபான்மை அஃறிணைப்பெயரிடத்துவேற்றுமையில் இயல்பாமெனவுங்கொள்க.

சுவையை புணர்த்தும் புளி என்பதன்முன் புளிக்கறி புளிங்கறி எனவரும் வல்லெழுத்தாயது அதற்கினமாகிய மெல்லெழுத்தாவது மிக்குவருமென்றறிக.

௨௬௩ மேற்கூறிய இகரவீற்றுமொழிகளின்முன் மெல்லினமும் இடையினமும்வரின் அவை இருவழியிலுமியல்பாம்.

(உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| பருத்திநீண்டது | பருத்திநீட்சி | இயல்பு. |
| கொடிவலிது | கொடிவன்மை | |
| தேடிநின்றான் | ——————— | |
| ஓடிவந்தான் | ——————— | |

மற்றவைகளு மிப்படியே.

[ஈகாரவீறு.]

௨௬௪. ஈகாரவீற்றுப் பெயர்ச்சொன்முன் இருவழியிலும் வரும் வல்லினம் மிகும். (உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| ஈக்குறிது | ஈக்குறுமை | மிகும். |
| தீச்சிறிது | தீச்சிறுமை | |
| வீப்பெரிது | வீப்பெருமை | |

வரும்வல்லினம் அல்வழியில் மிகுதி
று நீ குறிதை எனப் பி நீ என்னும்பெயர்
களின்முன் இயல்பாகவும், ஈ கொற்றா, நீ சா
த்தா என ஈகாரவீற்று வல்வினை முற்றின்
முன் இயல்பாகவும், பீ என்பதன்முன் மீ

கண் என இயல்பாதலன்றி மீக்கூற்று, மீக்கோள், என வல்லெழுத்தும் மீந்தோல் என மெல்லெழுத்து மிகவும்பெறுமெனவறிக.

௨௬௫. மேற்கூறிய ஈகார வீற்று மொழிகளின்முன் இருவழியிலு மெல்லினமும் இடையினமும்வரின் அவை இயல்பாம். (உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| ஈநீண்டது | ஈநீட்சி | எனவரும். |
| தீவலிது | தீவலிமை | |

[முற்றியலுகர வீறு]

௨௬௬. உகர முற்றியலுகர வீற்றுப்பெயர், களின்முன் இருவழியிலும் வரும் வல்லினம் மிகும்.

(உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| வடுக்குறிது | வடுக்குறுமை | எனவரும். |
| மழுச்சிறிது | மழுச்சிறுமை | |
| பசுத்தீது, | பசுத்தீமை | |
| திருப்பெரிது | திருப்பெருமை | |

உ-ரை: அது இது உது என்னுஞ் சுட்டுப்பெயர் மூன்றும் எது என்னும் வினாப்பெயர் மூன்றும், ஒரு இரு அறு எழு என்னும், விகாரப்பட்டுவரும் எண்ணுப்பெயர் மூன்றும், ஏவல்வினை முற்றின் மூன்றும், ஒடு என்னு மொன்றனுருபின் மூன்றும், அது என்னும் ஆறனுருபின் மூன்றும் வரும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்)

| அல்வழி: | வேற்றுமை. |
| --- | --- |
| அதுகுறிது | அதுகண்டான் |
| இதுசிறிது | இதுசெகுத்தான் |
| உதுபெரிது | உதுதந்தான் |
| எதுசிறிது, | எதுபெற்றான், |
| ஒருகை | அவனொடுசென்றான் |
| இருசேனை. | அவனதுகை. |
| அறுகானை, | —————— |
| எழுபுலி | —————— |
| வியசாத்தா, | —————— |
| எய்கொற்று | —————— |

உ-ரை. மேற்கூறிய முற்றியலுகர வீற்றுமொழிகளின்முன் உயிர்வரின் அக்-

உயிர்பொதுவிதியால் இருவழியிலும் வந்த வகரவுடம்படுமெய்யோடியைவதன்றிச் சிறுபான்மை நிலைமொழியீற்று உகரங்கெட. அவ்வுகரங்கெட்டுநின்றமெய்யோ டியையும். மெல்லினமும் இடையினமும்வரின் அவை இருவழியிலு மியல்பாம்.

(உ-ம்.)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| பசுவழகிது | பசுவழகு | எ-ம், |
| கதவழகிது | கதவழகு | எ-ம், |
| வரவரிது | வரவருமை | |
| வடுநீண்டது | வடுநீட்சி | எ-ம், வரும். |
| பசுவலிது | பசுவன்மை | |

மற்றவைகளுமிப்படியே.

[குற்றியலுகரவீறு.]

[illegible]. வன்றொடர் குற்றியலுகரவீற்று மொழிகளின்முன் வரும் வல்லினம் இருவழியிலுமிகும். (உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| கொக்குக்கடிது | கொக்குக்கடுமை | எ-ம் |
| கச்சுச்சிறிது | கச்சுச்சிறுமை | வரும். |

பட்டுச் சென்றான், கற்றுப்பேசி

றன் என வினைச்சொன்முன் அல்வழியி லேமிகவன.

௨௭௰. மென்றொடர் குற்றிய லுகர வீற்று மொழிகளின்முன் வரும் வல்லினம் அல்வழியியல்பாம், வேற்றுமையிலே மிகும் (உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை | |
| --- | --- | --- |
| குரங்குகடித்து | குரங்குக்கால் | எனவரும். |
| அம்புதைத்து | அம்புத்தலை | |

அறிந்துகொண்டான், நடந்துசென்றான் என வினைச்சொன்முன் அல்வழியியல்பாயின.

௨௭௧ நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், இடைத்தொடர் என்னும் இந்நான்குதொடர் குற்றியலுகரவீற்று மொழிகளின்முன் வரும் வல்லினம் இருவழியினு மியல்பாம். (உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
| --- | --- | --- |
| நாகுகடிது | நாகுகடுமை | எனவரும். |
| எஃகுதீது | எஃகுதீமை | |
| வரகுசிறிது | வரகுசிறுமை | |
| தெள்குபெரிது | தெள்குபெருமை | |

கருகாலு அஃகுபிணி, யொருதுழெ

ன்றான், எய்துகொன்றான் எனவினைச்சொ
ன்முன் அல்வழியி லியல்பாயின.

௨௭௨. மேற்கூறிய அறுவகைக்குற்றிய லுகரவீற்றுமொழிகளின்முன் வருமெல்லினமும் இடையினமும் இருவழியிலுமியல்பாம். (உ-ம்)

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| கொக்குநெடிது | கொக்குநெடுமை |
| குரங்குவந்தது | குரங்குவருகை |
| நாகுஞான்றது | நாகுஞாற்சி |
| எஃகுநீண்டது | எஃகுநீட்சி |
| வரகுமாண்டது | வரகுமாட்சி |
| தெள்குவலிது | தெள்குவன்மை |

சூ. ௨௫.

இக்குற்றியலுகரமொழிகள் வேற்றுமைப்பொருளிலே-கொக்கின்கண், வண்டின்கால், நாகின்புறம், எஃகின்சிறுமை, வரகின்மாட்சி, தெள்கின்வன்மை என்பபெரும்பாலும் இன்சாரியைபெற்றேவருமெனவறிக.

௨௭௩. டவ்வையும் றவ்வையும் இறுதியிலுடைய நெடிற்றொடர் உயிர்த்தொடர் குற்றியலுகரவீற்று மொழிகளின்முன்னர், நாற்கணமும்வரின் வேற்றுமையிற்

பெரும்பாலும் உகரமேறிய டகர றகர மெய்களிரட்டும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| ஆட்டதர் | ஆற்றறல் | எ-டு |
| ஆட்டுக்கால் | ஆற்றுக்கால் | |
| ஆட்டுமயிர் | ஆற்றுமணல் | |
| ஆட்டுவால் | ஆற்றுவழி | |
| பகட்டடி | வயிற்றணி | [illegible] |
| பகட்டுக்கால் | வயிற்றுக்குடல் | |
| பகட்டுமார்பு | வயிற்றுமயிர் | |
| பகட்டுவால் | வயிற்றுவலி | |

சிறுபான்மை மலட்டுப்பசு, வரட்டாடு என அல்வழியில் இரட்டலும், வெருக்குக்கண் எருத்துமாடு என இருவழியிலும் பிறவாற்றிரட்டலும் உளவெனக் கொள்க.

உளசு மென்றொடர் குற்றியலுகரவீற்று மொழிகளின்மேல சில நாற்கணமும் வரின் இருவழியிலும் வன்றொடர் குற்றியலுகரமாகவும்பெறும் (உ-ம்)

| | | |
|---|---|---|
| கன்று - ஆ | கற்றா | எ-டு |
| மருந்து - பை | மருத்துப்பை | |
| கரும்பு - நாண் | கருப்புநாண் | |
| கரும்பு - வில் | கருப்புவில் | |

| | | |
|---|---|---|
| என்பு - உடம்பு | எற்புடம்பு | எ-ம் வரும். |
| அன்பு - தளை | அற்புத்தளை | |
| குரங்கு - மனம் | குரக்குமனம் | |

அன்றியும் பண்டு காலம் - பண்டைக் காலம், இன்று நாள் - இற்றைநாள் எனமென்றொடர்க்குற்றியலுகர மொழிகள் சிறுபான்மை ஐகாரச்சாரியை இறுதியிற்பெற்று வருதலுமுளவெனக்கொள்க.

௨௬. திசைப்பெயர்களோடும் பிறபெயர்களும் வந்து புணருமிடத்துக் குற்றியலுகரவீற்றுத் திசைப்பெயர்களுட் சில வீற்றுயிர்மெய்யுங் ககரமெய்யுங் கெடவும், சில வீற்றுயிர்மெய்கெட்டுநின்ற றகர மெய் னகர மெய்யாகவும், லகரமெய்யாகவுந் திரியவும்பெறும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| வடக்கு - கிழக்கு | வடகிழக்கு | எ-ம் வரும். |
| குணக்கு - கடல் | குணகடல் | |
| தெற்கு - மேற்கு | தென்மேற்கு | |
| மேற்கு - கடல் | மேல்கடல் | |

கிழக்கு என்பது கீழ்திசை கீழ்த்திசை கீழைத்திசை எ-ம், மேற்கு என்பது மேலைத்திசை எ-ம், விகாரப்பட்டு வருமெனவுங்கொள்க.

இத்திசைப்பெயர்கள் உம்மைத்தொகையிலே கிழக்குமேற்கு, தெற்குவடக்கு என இவ்விகாரங்களின்றியும் வருமெனவறிக.

௨௭௩. ஒன்றுமுதற் பத்தீறாகிய குற்றியலுகரவீற்றெண்ணுப்பெயர்கள் தம்முன் எண்ணுப்பெயரும் பிறபெயரும் வரின் இரண்டுபணம், மூன்றுபொருள், நான்குநாடு, ஐந்துகாசு, ஆறுசாத்திரம், ஏழாயிரம், எட்டுத்திசை, ஒன்பதுவாயில், பத்துக்காதம் என இயல்பாய் வருதலன்றி ஓராயிரம் ஒருபது எ-ம், ஈராயிரம் இருபது எ-ம், மூவாயிரம் முப்பது எ-ம், நாலாயிரம் நாற்பது எ-ம், ஐயாயிரம் ஐம்பது எ-ம், ஆறாயிரம் அறுபது எ-ம், எழாயிரம் எழுபது எ-ம், எண்ணாயிரம் எண்பது எ-ம், தொள்ளாயிரம் தொண்ணூறு எ-ம், பன்னிரண்டு பதினாயிரம் பதிற்றுக்கோடி எ-ம், பெரும்பாலும் விகாரப்பட்டுவரும். இவற்றுள் எழு என்பது முற்றியலுகரவீற்றெண்ணெனவறிக.

இவற்றுள் ஒன்றென்னுமெண்ணுப் பெயர் இயல்பாக வாரமென்றெனவும், ஒன்பதின்முன் பத்தும் நூறும்வரின் நிலைமொழியின் இறுதி பகரங்கெட்டு முதற்பே ஒன்

தொண்ணெனவும், தொள்ளெனவுந் திரிய வருமொழியாகியபத்து நூறெனவும், நூறு ஆயிரமெனவுந் திரியுமெனவும், இவ்வெண்ணுப் பெயர்களின் முன்வரும் பத்தென்னும் எண்ணுப்பெயரினது இடையொற்றுக்கெடுமெனவும், கெட்டவிடத்து ஒருபஃதுஎனஆய்தம்வருமெனவும்அறிக.

உஎஎ. ஒன்பதொழிந்த ஒன்றுமுதற் பத்தீறாகிய எண்ணுப்பெயர்களை இரட்டித்துச சொல்லுமிடத்து நிலைமொழியின்முதலெழுத்தொழிய அல்லனவெல்லாங் கெட்டுமுதனெடில குறுகவும், வந்தன உயிராயின் வகரவொற்றும், மெய்யாயின்வந்தவெழுத்தும், மிகவும்பெறும் (உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| ஒன்று- | ஒன்று | ஒவ்வொன்று | எனவருங். |
| இரண்டு- | இரண்டு | இவ்விரண்டு | |
| மூன்று- | மூன்று | மும்மூன்று | |
| நான்கு- | நான்கு | நந்நான்கு | |
| ஐந்து- | ஐந்து | ஐவ்வைந்து | |
| ஆறு- | ஆறு | அவ்வாறு | |
| ஏழு- | ஏழு | எவ்வேழு | |
| எட்டு- | எட்டு | எவ்வெட்டு | |
| பத்து- | பத்து | பப்பத்து | |

[ஊகாரவீறு]

௨௭௮ ஊகாரவீற்றுப்பெயர்ச்சொற்களின்முன் இருவழியிலும் வரும் வல்லினமிகும். (உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| கொண்மூக்குறிது | கொண்மூக்குறுமை | எ-ம் |
| ஊச்சிறிது | ஊச்சிறுமை | |
| கூப்பெரிது | கூப்பெருமை | |
| ஆடூக்குறியன் | ஆடூக்கை | எ-ம், வரும் |
| மகடூச்சிறியள் | மகடூச்செவி | |

பூவென்பதன்முன் பூக்கொடி என வரும்வல்லெழுத்து மிகுதலன்றிப் பூங்கொடி என அவற்றிற்கினமெல்லெழுத்து மிகுமெனவுங்கொள்க.

௨௭௯ மேற்சொல்லப்பட்ட ஊகாரவீற்றுமொழிகளின்முன் மெல்லினமும் இடையினமும் இருவழியிலு மியல்பாம். (உ-ம்)

| அல்வழி | வேற்றுமை. | |
|---|---|---|
| கொண்மூஞான்றது | கொண்மூஞாற்சி | எ-ம் |
| ஊநீண்டது | ஊநீட்சி | |
| பூவலிது | பூவலிமை | |
| ஆடூநின்றான் | ஆடூநிலை | |
| மகடூவலியள் | மகடூவன்மை | |

௨௮௰. எகரம் ஒரெழுத்தொருமொழியாய் வினவிடைச்சொலலாகவருவதன்றி வேறுமொழிகளின் இறுதியில வாராமையாலும், அவ்விடைச்சொற்கு முன்னரேவிதிகூறப்பட்டமையாலும் இங்கே அவ்வீற்றிற்கு விதிகூறவில்லை.

[எகாரவீறு]

௨௮௧. எகாரவீற்றுப்பெயர்ச்சொற்களின்முன் இருவழியிலும் வரும்வல்லினமிகும் வருமெல்லினமு மிடையினமுமியல்பாம். (உ-ம்.)

| அல்வழி | வேற்றுமை | |
|---|---|---|
| எக்கடிது | எக்கடுமை | |
| சேச்சிறிது | சேச்சிறுமை | |
| தேப்பெரிது | தேப்பெருமை | எ-ம். |
| பேத்தீது | பேத்தீமை | |
| நேச்சிறிது | நேச்சிறுமை | |
| எஞான்றது | எஞாற்சி | |
| சேநீண்டது | சேநீட்சி | |
| தேவலிது | தேவன்மை | எ-ம். |
| பேமாண்டது | பேமாட்சி | |
| நேயாது | நேயாப்பு | |

௨௮௨. ஏகாரவீற்றிடைச்சொன்முன் வருமூவினமெய்களும் இயல்பாம்.

(உ-ம்)

அவனேகொண்டான் } எனவரும்.
அவனேநின்றான்
அவனேவந்தான்

[ஐகாரவீறு]

௨௮௩. ஐகாரவீற்றுச் சொற்களின் முன் வரும்வல்லினம் அல்வழியில் எழுவாய்த்தொடரிலும், வினைமுற்றுத்தொடரிலும், உம்மைத்தொகையிலும் இயல்பாம். பண்புத்தொகையிலும், உவமைத்தொகையிலும், இடைச்சொற்றொடரிலும், சிறுபான்மை பிறதொடரிலுமிகும். (உ-ம்)

யானைகுறிது } எழுவாய்.
குதிரைசிறிது
மடலைபெரியன்

உண்டனைகொற்றா } முன்னிலை வினைமுற்று.
தின்கின்றனைசாத்தா

களைகொற்றா } ஏவல்வினை முற்று.
அடைசாத்தா

நன்மைதீமை
பெருமைசிறுமை } உம்மைத்தொகை.
உரிமைத்தொழில்　　பண்புத்தொகை
சாரைப்பாம்பு
சித்திரைத்திங்கள் } இருபெயரொட்டுப் பண்புத்தொகை.
தாமரைக்கண்
குவளைக்கண் } உவமைத்தொகை
மற்றைச்சாதி - இடைச்சொற்றொடர்
எனவரும்.

௨௬௭. வேற்றுமையில் ஐகாரவீற்றுச்சொற்களின்முன்வரும்வல்லினமிகும்.

உ-ம்.

யானைக்கோடு　　பூனைச்செவி
சித்திரைத்திருவிழா　　குவளைத்தடம் } எனவரும்.

யானைகொண்டான் எனவிரண்டனுருபுதொக வருமிடத்து வரும்வல்லினமியல்பாதலு முளவெனக்கொள்க.

௨௬௮. மேற்சொல்லிய ஐகாரவீற்றுமொழிகளின்முன் வரு மெல்லினமும் இடையினமும் இருவழியினு மியல்பாம்.

உ-ம்.

யானைநின்றது　　யானைநரம்
குதிரைவந்தது　　குதிரைவால்
உண்டனைநாகா　　. . . . . .
தின்றனைவளவா　　. . . . . . } எனவரும்.

மற்றவைகளு மிப்படியே.

ஓரெழுத்தொருமொழியாகிய ஐம்முன் கைஞ்ஞான்றது, கைஞ்ஞாற்சி, கைந்நீண்டது, கைந்நீட்சி, கைம்மாண்டது, கைம்மாட்சி என வருமெல்லினம் இருவழியினு மிகுமெனவறிக.

[ஒகரவீறு]

உ௮௬ ஒகரவீற்று ஏவல்வினைமுற்றின்முன் வருமெல்லினமெய்களு மிகும்.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| நொ கொற்றா | நொக்கொற்றா | [illegible] |
| நொ-நாகா | நொந்நாகா | |
| நொ-வளவா | நொவ்வளவா | |

வினையாதலின் அல்வழியிலேமிக்கன

[ஓகாரவீறு]

உ௮௭. ஓகாரவீற்றுப்பெயர்களின்முன் இருவழியிலும் வரும்வல்லின மிகும். மெல்லினமு மிடையினமு மியல்பாம்.

(உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| ஓக்குறிது | ஓக்குறுமை | எ-ம். |
| சோச்சிறிது | சோச்சிறுமை | |
| கோப்பெரிது | கோப்பெருமை | |

ஓஞான்றது ஓஞாற்சி
சோநீண்டது சோநீட்சி
கோவலிது கோவன்மை } எ-ம், வரும்.

௨௬௮ ஒகார விடைச்சொன்முன் வருமெல்லின மெய்களுமியல்பாம். (உ-ம்)

அவனொகொண்டான்
அவனொநின்றான்
அவனொவந்தான் } எனவரும்.

[ஔகாரவீறு]

௨௬௯ ஔகார வீற்று முதனிலைத் தொழிற்பெயரும் ஏவல்வினைமுற்றுந் தம்முன் வலியு மெலியும் வகரமும் வரின் உகரச்சாரியை பெறும் தொழிற் பெயரின் சாரியையுகரத்தின்முன் வருவல்லெழுத்து மிகும். (உ-ம்)

கௌவுக்கடிது கௌவுக்கடுமை
கௌவுநீண்டது கௌவுநீட்சி எ-ம்,
வௌவுவலிது வௌவுவன்மை

கௌவுகொற்றா
கௌவுநாகா
கௌவுவளவா } எ-ம், வரும்.

உயிரீற்றுப்புணரியல் முற்றிற்று.

# மெய்யீற்றுப்புணரியல்.

௨௯௰ மெய்யீற்றின்முன் உயிர்வரின் வந்தவுயிர் இருவழியிலும் அம்மெய்யோடுகூடியொன்றும். (உ-ம்)

| அல்வழி | வேற்றுமை | |
| --- | --- | --- |
| ஆணழகிது | ஆணழகு | எனவரும். |
| வேலழகிது | வேலழகு | |
| புகழரிது | புகழருமை | |

௨௯௧ தனிக்குற் றெழுத்தைச்சேர்ந்தமெய்கள் தம்முன்உயிர்வந்தால் இருவழியிலும் இரட்டிக்கும் இரட்டித்தமெய்ய்மேல் வந்தவுயிரேறும்.

(உ-ம்)

| அல்வழி | வேற்றுமை | |
| --- | --- | --- |
| மண்ணரிது | மண்ணருமை | எனவரும். |
| பொன்னழகிது | பொன்னொளி | |
| கல்லரிது | கல்லழகு | |

௨௯௨ யகரமல்லாதமெய்கள் தம்முன் யகரம்வந்தால் இருவழியிலும் இகரச்சாரியை பெறுதலுமுண்டு. (உ-ம்)

அல்வழி வேற்றுமை:
வேளியாவன், வேளியானை,
மாலியாவன், மாலியானை,
ஆணியாறு, ஆணியாப்பு, } என வரும்.

வேள்யாவன் என இன்சாரியை பெறாமல் வருதலே பெரும்பான்மையாம்.

௨௯௯ ஞ், ண், ந், ம், ல், வ், ள், ன், என்னும் இவ்வெட்டீற்று மெய்யீற்று முதனிலைத் தொழிற்பெயரும் ஏவல்வினைமுற்றுந் தம்முன் யகரமெல்லாத மெய்கள்வரின் உகரச் சாரியைபெறும் தொழிற்பெயரின்சாரியை உகரத்தின்முன் வரும்வல்லினமிகும் இவ்விருமொழிகளின் சாரியையுகரத்தின்முன் வருமெல்லினமு மிடையினமு மியல்பாம். (உ-ம்)

அல்வழி. வேற்றுமை:
உரிஞுக்கடிது உரிஞுக்கடுமை
உண்ணுஞான்றது உண்ணுஞாற்சி } எ-ம்.
பொருநுவலிது பொருநுவன்மை

உரிஞுகொற்றா,
உண்ணுநாகா எ-ம், வரும்.
பொருநுவளவா

திருந், செல், வவ். துள், தின் முதலியவற்றிற்கும் இவ்வாறே யொட்டிக்கொள்க.

பொருநக்கடிது என நகரவீற்றுச் சாதிப்பெயருஞ், வெரிநக்கடிது என நகரவீற்றுச் சினைப்பெயரும், உகரச்சாரியை பெறுமெனவுங் கொள்க.

இவ்வெட்டீற்று ஏவல்வினைகளிலே உண்கொற்றா, தின்சாத்தா, வெல்பூதா, துள்வளவா என ணனலள என்னும் இந்நான்கீறும் உகரச்சாரியை பெறாமலு நிற்கும்.

௨௩௪ மொழிக்கிறுதியில் வரும், ஞ், ந், ண், ன், ம், ய், ர், ழ், ல், ள், வ், என்னும் பதினொரு மெய்களிலே ஞகரவீற்றுமொழி உரிஞ் என்பதொன்றும், நகரவீற்றுமொழி பொருந் வெரிந் என்பன இரண்டுமேயன்றி வேறுமொழிகளின்மையாலும், அவைகட்கு மேற்கூறிய பொதுவிதியேயன்றி வேறுவிதியின்மையாலும் அவ்விரண்டீறு மொழித்து மற்றையவொன்பதீற்று மொழிகளுக்குஞ் சிறப்புவிதி கூறப்படும்.

[ணகரனகரவீறு.]

௨௯௫. ணகர னகரவீற்று மொழிகளின்முன் வல்லினம்வரின் அல்வழியில் அவ்விருமெய்களும் இயல்பாம். வேற்றுமையில் ணகரம் டகரமாகவும், னகரம் றகரமாகவுந்திரியும் அவ்விருவழியிலும் வருந் தகரம் ணகரத்தின்முன் டகரமாயும், னகரத்தின்முன் றகரமாயுந்திரியும்.

(உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| மண்குறிது | மட்குடம் | ண-ம் |
| மண்சிறிது | மட்சாடி | |
| மண்டீது, | மட்டூண் | |
| மண்பெரிது | மட்பானை | |
| பொன்குறிது | பொற்குடம் | ன-ம், வரும். |
| பொன்சிறிது | பொற்சாடி | |
| பொன்றீது | பொற்றூண் | |
| பொன்பெரிது | பொற்பானை | |

அல்வழியில் வரிற்கொள்ளும் எனச் செயினென்னும் வாய்பாட்டு வினையெச்ச

த்தினிறுதி ணகரந் திரிதலும், மண்கொணர்ந்தான் பொன்கொணர்ந்தான் என இரண்டனுருபு தொகவருமிடத்தும், மண்புகுந்தும் வான்பறந்துமாலுமயனுங் காணுவொருபொருள் என ஏழனுருபு தொகவருமிடத்தும், திரியாதியல்பாதலு. முளவெனக்கொள்க.

௨௯௬. ணகர னகரவீற்று மொழிகளின்முன் மெல்லினமும் இடையினமும் வரின் இறுதி ணனக்கள் இருவழியிலும் இயல்பாம். அவ்விருவழியிலும் வருநகரம் ணகரத்தின்முன் ணகரமாயும், னகரத்தின்முன் னகரமாயுந் திரியும்.

(உ-ம்.)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| மண்ஞான்றது | மண்ஞாற்சி | |
| மண்ணீண்டது | மண்ணீட்சி | |
| மண்மாண்டது | மண்மாட்சி | எ-ம். |
| மண்யாது | மண்யாப்பு | |
| மண்வலிது | மண்வன்மை | |

| | | |
|---|---|---|
| பொன்ஞான்றது | பொன்ஞாற்சி | அ-ந். உ-ந். |
| பொன்னீண்டது | பொன்னீட்சி | |
| பொன்மாண்டது | பொன்மாட்சி | |
| பொன்யாது | பொன்யாப்பு | |
| பொன்வலிது | பொன்வன்மை | |

௨௯௭. தனிக்குற்றெழுத்தைச் சாராத ணகரனகரங்கள் வருநகரந்திரிந்த விடத்து இருவழியிலுங்கெடும். (உ-ம்)

| அல்வழி | வேற்றுமை. | |
|---|---|---|
| தூணன்று | தூணன்மை | எ-ம், |
| அரணன்று | அரணன்மை | |
| வானன்று | வானன்மை | எ-ம், |
| அரசனல்லன் | அரசனன்மை | வரும். |

பசுமணன்று பசுமணன்மை செம்பொனன்று செம்பொனன்மை எனத்தொடர்மொழியிலே குறிலின்பின்னின்ற ணனக்களும் இருவழியிலும் வருநகரந் திரிந்தவிடத்துக்கெடுமெனவுமறிக.

௨௯௮. பாண், அமண், பரண், கவண் என்னுமொழிகளின் இறுதி ணகரம் வேற்றுமையில் வல்லினம் வரின் இயல்பாம்.

(உ-ம்)

பாண்குடி அமண்குடி
பரண்கால் கவண்கால் } எனவரும்

௨௯௯. தன் என் நின் என்னும் விகாரமொழிகளின் இறுதிநகரம் வேற்றுமையிற் பெரும்பாலுந் திரியாதியல்பாம்.

(உ-ம்)

தன்கை என்செவி
நின்பகை ——— } எனவரும்.

௩௦௦. குயின், ஊன், எயின், எகின், தேன், மீன், மின், பின், பன், கன் என்னுமொழிகளின் இறுதிநகரம் வேற்றுமையில் வல்லினம்வரின் இயல்பாம்.

(உ-ம்)

| | | |
|---|---|---|
| குயின்கடுமை | மின்கடுமை | எனவரும். |
| ஊன்சிறுமை | பின்சிறுமை | |
| எயின்குடி | பன்றீமை | |
| எகின்கால் | கன்கடுமை | |
| தேன்கடுமை | ——— | |
| மீன்கண் | ——— | |

இவைகளிலே எயின், எகினென்பன எயினக்குடி எகினவாழ்வு என அகரச்சாரியைபெறுதலும், தேனென்பது தேக்கு

டம் தேங்குடம் என இறுதி னகரங்கெட
ஒருகால்வரும்வல்லெழுத்தும் ஒருகால் அ
தற்கினமெல்லெழுத்து மிகப்பெறுதலும்
தேமொழி என மெல்லெழுத்துவருமிடத்
து ஈறுகெடுதலும், மின், பின், பன், கன்
னென்னு மிந்நான்குசொற்களும், மின்னு
க்கடிது பின்னுச்சிறிது பன்னுநன்று க
ன்னுவலிது என யகரமல்லாத மெய்கள்வ
ருமிடத்து உகரச்சாரியை பெறுதலும்
உளவெனவுமறிக.

[மகரவீறு]

௫௱௧. மகரவீற்று மொழிகளின்மு
ன் வல்லினம்வரின் அல்வழியில எழுவாய்
த்தொடரிலும், உம்மைத்தொகையிலும்,
செய்யுமென்னும்பெயரெச்சத்தொடரிலு
ம், வினைமுற்றுத்தொடரிலும், இடைச்சொ
ற்றொடரிலும், சிறுபான்மைபிறதொடரி
லு நிலைமொழியீற்றுமகரம் வரும்வல்லெ
ழுத்திற்கினமாய்த் திரியும். பண்புத்தொ
கையிலும், உவமைத்தொகையிலும், இறு
தி மகரங்கெடும், கெட்டவிடத்து வரும்வ
ல்லினம் மிகும்.

(உ-ம்)

| | |
|---|---|
| மரங்குறிது<br>யாங்கொடியேம் | எழுவாய். |
| நலந்தீது<br>பணங்காசு | உம்மைத்தொகை |
| செய்டங்காரியம்<br>தின்னுஞ்சோறு | பெயரெச்சம். |
| உண்டனஞ்சிறியேம்<br>தின்றனங்குறியேம் | வினைமுற்று. |
| சாத்தனுங்கொற்றனும்<br>பூதனுந்தேவனும் | உம்மையிடைச்சொல். |
| வட்டக்கடல்<br>சதுரப்பலகை | பண்புத்தொகை. |
| கமலக்கண் | உவமைத்தொகை. |

எனவரும் மற்றவைகளுமிப்படியே.

மரம்பெரிது, எனப் பகரம்வருமிடத்து இறுதிமகரம்இயல்பாமெனக்கொள்க

௱௭௨. மகரவீற்று மொழிகளின்முன்வேற்றுமையிலே வல்லினம்வரின் நிலைமொழியிறுதி மகரங்கெடும். கெட்டவிடத்து வருவல்லின மிகும்.

(உ-ம்)

மரக்கோடு மரச்செதிள்
பழத்தோல் நிலப்பரப்பு } எனவரும்.

செயங்கொண்டான், மணங்கண்டார் என இரண்டாம்வேற்றுமைத்தொகையி லிறுதிமகரங்கெடாது வரும் வல்லெழுத்தி ற்கினமாய்த்திரியுமெனவுங் கொள்க

௫௱௩ தனிக்குற்றெழுத்தின் கீழ்நி ன்ற மகரம் இருவழியிலும் வரும்வல்லின த்திற்கு இன மாகத்திரியும் (உ-ம்)

| அல்வழி | வேற்றுமை. | |
|---|---|---|
| கங்குறிது | கங்குறுமை | எனவரும். |
| அஞ்சிறிது | அஞ்சிறுமை | |
| செங்கோழி | நங்கை | |
| ———— | தஞ்செவி | |
| ———— | எந்தலை | |

௫௱௪. மகரவீற்றுமொழிகளின்முன் மெல்லினம் வரின் இறுதிமகரம் இருவழி யிலுங்கெடும். (உ-ம்)

| அல்வழி | வேற்றுமை. | |
|---|---|---|
| மரஞான்றது | மரஞாற்சி | எனவரும். |
| மரநீண்டது | மரநீட்சி | |
| மரமாண்டது | மரமாட்சி | |

௩௱௫ தனிக்குறிலின்கீழ்நின்ற மகரம் ஞநக்கள்வந்தால் அவ்வெழுத்தாகத் திரியும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| அஞ்ஞானம் நஞ்ஞானம் | } | என |
| எந்நூல் தந்நூல் நந்நூல் | } | வரும். |

௩௱௬. மகரவீற்றுமொழிகளின்முன் உயிரும் இடையினமும் வரின் அவ்வழியில் எழுவாய்த் தொடரிலும், உம்மைத் தொகையிலும், செய்யுமென்னும் பெயரெச்சத்தொடரிலும், வினைமுற்றுத்தொடரிலும், இடைச்சொற்றொடரிலும், சிறுபான்மை பிறதொடரிலு நிலைமொழியிறுதி மகரங்கெடாமனிற்கும் பண்புத்தொகையிலும், உவமைத்தொகையிலும், இறுதிமகரங்கெடும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| மரமரிது<br>மரம்வலிது | } | எழுவாய். |
| வலமிடம்<br>நிலம்வானம் | } | உம்மைத்தொகை |
| உண்ணுமுணவு<br>தின்னும்வளவன் | } | பெயரெச்சம். |

| | |
|---|---|
| உண்டனமடிபேம்<br>உண்டனம்யாம் | வினைமுற்று. |
| அரசனுமமைச்சனும்<br>புலியும்யானையும் | உம்மைபிணச்சொல |
| வட்டவாழி<br>வட்டயாழ் | பண்புத்தொகை. |
| பவளவிதழ்<br>பவளவாய் | உவமைத்தொகை. எனவரும். |

கூாள மகரவீற்றுமொழிகளின்முன்வேற்றுமையில் உயிரும் இடையினமும் வரின் இறுதிமகரங்கெடும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| மரவடி<br>மரயாழ் | மரவிலை<br>மரவேர் | எனவரும். |

செயமடைந்தான் மரம்வெட்டினன் எனஇரண்டனுருபுதொகவருமிடத்திறுதிமகரம் இயல்பாதலுமுளவெனக்கொள்க.

மகரவீற்றுமொழிகளின்முன் உயிர்வரின் ஒரோவிடத்து - குளம் - ஆம்பல், குளாம்பல், மரம் - அடி மராஅடி எனவேற்றுமையிலும், இணம் - அவிட்டம் இணவிட்

டம், கோணம் - அக்கோணம் கோணக்கோண
ம் என அல்வழியிலும், நிலைமொழியீறும்
வருமொழிமுதலும் விகாரப்பட்டு வருத
லும், ஈம் - கம் - உரும் என்னு மிம்மூன்று
சொற்களும், ஈமுக்கடிது, கம்முநீண்டது,
உருமுவலிது என யகரமல்லாத மெய்கள்
வருமிடத்து உகரச்சாரியை பெறுதலும்
உளவெனவுமறிக.

௩௱௮. ய் ர் ழ் என்னு மிம்மூன்று
மெய்யீற்று மொழிகளின்முன் வரும் வல்
லினம் அல்வழியில் எழுவாய்த்தொடரிலு
ம், உம்மைத்தொகையிலும், வினைமுற்றுத்
தொடரிலும், சிறுபான்மைபிற தொடரிலு
ம் இயல்பாம். பண்புத்தொகையிலும் உவ
மைத்தொகையிலும், வினையெச்சத்தொட
ரிலுஞ்சிறுபான்மைபிறதொடரிலுமிகும்.

உ-ம்

| | |
|---|---|
| வேய்குறிது<br>வேர்சிறிது<br>வீழ்பெரிது | எழுவாய். |
| பேய்பூதம்<br>நார்பூ<br>இகழ்புகழ் | உம்மைத்தொகை |

உண்டாய்கொற்றா
உண்டனிர்சாத்தரே
உண்டீர்பூதரே } முன்னிலை வினைமுற்று.

செய்கொற்றா
சேர்சாத்தா
வாழ்பூதா } ஏவல்வினைமுற்று.

மெய்க்கீர்த்தி
கார்ப்பருவம்
பூழ்ப்பறவை } பண்புத்தொகை

வேய்த்தோள்
கார்க்குழல்
காழ்ப்படிவம் } உவமைத்தொகை.

போய்க்கொண்டான், வினையெச்சம்.

எனவரும்.

உண்ணியர்போவான் என ரகரவீற்று வினையெச்சத்தின்முன் இயல்பாமெனவும், மகரவீறு முன்னிலைவினைமுற்றிற்கும் வினையெச்சத்திற்கும் இன்றெனவு முணர்க.

௱௮௧. ய் ர் ழ் என்னு மிம்மூன்றீற்றுமொழிகளின்முன் வரும்வல்லினம் வேற்றுமையிலேமிகும்.

(உ-ம்)

நாய்க்கால் தேர்த்தலை } எனவரும்.
பூழ்ச்செவி ——— }

வரும்வல்லினம் மெய்பிறந்தான், தேர்செய்தான், தமிழ்கற்றான் என இரண்டனுருபு தொகவருமிடத்தும், வாய்புகுவது எனச் சிறுபான்மை ஏழனுருபு தொகவருமிடத்தும், இயல்பாதலும், பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான், சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான் எனச் செயப்பாட்டுவினை முடிக்குஞ்சொல்லாகவருமிடத்தும், கீழ்குளம், கீழ்க்குளம், னக்கெழன்பதன்முன்னும் ஒருகாலியல்பாதலும் ஒருகான்மிக்கும் வருதலுமுளவெனக்கொள்க.

காய மேற்கூறிய ய் ர் ழ் என்னுமிம் மூன்றீற்று மொழிகளின்முன் வருமெல்லினமும், இடையினமும் இருவழியிலுமியல்பாம். (உ-ம்)

| அல்வழி | வேற்றுமை | |
|---|---|---|
| வேய்ஞான்றது | வேய்ஞாற்சி | இயல்பு. |
| வேர்நீண்டது | வேர்நீட்சி | |
| வீழ்யாது | வீழ்யாப்பு | |
| உண்டாய்நாகா | ——— | |
| உண்டீர்வளவரோ | ——— | |

மற்றவைகளுமிப்படியே.

மெஞ்ஞான்றது, மெய்ந்நீண்டது, மெம்மாண்டது எ-ம், மெஞ்ஞாற்சி, மெந்நீட்சி, மெய்ம்மாட்சி எ-ம், தனிக் குறிற்கீழ்நின்ற யகரமெய்ம்முன் வருமெல்லின மிருவழியினு மிருமெனவும், வேயாது, வேயாப்பு என நெடிற்கீழ்நின்ற யகரமெய் யகரம்வரின் இருவழியிலுங்கெடுமெனவும், தமிழக்கோமான், தாழக்கோல் என இவ்விருமொழியும் ஓரொவிடத்து அகரச்சாரியைபெறுமெனவுங் கொள்க.

[லகரளகரவீறு]

௩௱௰௯. லகரளகரவீற்றுமொழிகளின்முன் வல்லினம்வரின் வேற்றுமையினிலைமொழியீற்று லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவுந் திரியும். அல்வழியி லிறுதி லளக்கள் ஒருகா லியல்பாகவும், ஒருகாற் றிரியவும் பெறும். வருந்தகரம் லகரத்தின்முன் றகரமாகியும் ளகரத்தின்முன் டகரமாகியுந் திரியும்.

(உ-ம்.)

வேற்றுமை.

கற்குடம் பாற்குடம்
கற்சாடி பாற்சாடி
கற்றூண் விரற்றீமை
கற்பானை விரற்பெருமை
கட்குடம் வாட்குறுமை
கட்சாடி வாட்சிறுமை
கட்டாழி பொருட்டீமை
கட்டானை அருட்பெருமை } எ-ம்,

அல்வழி

கல்குறிது கற்குறிது
கல்சிறிது கற்சிறிது
கல்பெரிது கற்பெரிது
முள்குறிது முட்குறிது
முள்சிறிது முட்சிறிது
முள்பெரிது முட்பெரிது } எ-ம், வரும்.

௩௱௰௨. குற்றெழுத்தின் பின்னின்ற லளக்கள் அல்வழியில் வருந் தகரந் திரிந்த விடத்து றகர டகரங்களாகத் திரிதலன்றி, ஆய்தமாகவுந்திரியும் (உ-ம்)

கற்றீது கஃறீது
முட்டீது முஃடீது } எனவரும்.

நெற்கடிது, செற்சிறிது, கொற்றீது, சொற்பெரிது என இந்நான்குசொற்களினிறுதி லகரம் அவ்வழியில் வரும்வல்லினத்தின்முன் உறழாது திரிபொன்றையேபெறுமென்றறிக.

௩௱௰௬. குற்றெழுத்தைச்சாராத லகரங்கள் அல்வழியில்வருந் தகரந்திரிந்தவிடத்துக்கெடும். (உ-ம)

வேறீது தோன்றறீயன் } என
வாடது வேடயன் } வரும்.

மேற்கூறிய லகரங்கள் சிறுபான்மை தோன்றறீமை வேடமை என வேற்றுமையிற்கெடுதலும், காற்றுணை, தாட்டுணை என அவ்வழியிற் கெடாதுதிரிதலுமுளவெனவுமறிக.

குற்றெழுத்தைச்சாராத லகரங்கள் தகரமொழிந்த வல்லினம்வரின் கால்கடிது, மரங்கள்கடிய என எழுவாய்த் தொடரில், உறழாதியல்பாதலும், வேற்படை, வாட்படை எனப் பண்புத்தொகையிலும், வந்தகாற்செய்வோன் எனச் செயினென்னும்வாய்பாட்டுவினையெச்சத் தொடரிலும், உறழா

திரிதலும், ஊக்குறித்தோடி, வாள்போழ்ந்தட்ட என மூன்றனுருபு தொகவருமிடத்தும், எனக்காப்பவள், திரள்காப்பவன் என இரண்டனுருபு தொகவருமிடத்துந் திரியாதியல்பாதலுமுளவெனக்கொள்க.

௫௱௰௪ லகர ளகரவீற்று மொழிகளின்முன் மெல்லினமவரின் இருவழியிலும் லகரம் னகரமாயும், ளகரம் ணகரமாயுந் திரியும் வருநகரம் லகரத்தின்முன் னகரமாயும், ளகரத்தின்முன் ணகரமாயுந்திரியும். (உ-ம்)

| அல்வழி | வேற்றுமை | |
|---|---|---|
| கல்-கன்ஞெரிந்தது | கன்ஞெரி | என வரும். |
| வில்-வின்னீண்டது | வின்னீட்சி | |
| புல்-புன்மாண்டது | புன்மாட்சி | |
| முள்-முண்ஞெரிந்தது | முண்ஞெரி | |
| புள்-புண்ணீண்டது | புண்ணீட்சி | |
| கள்-கண்மாண்டது | கண்மாட்சி | |

௫௱௰௫ குற்றெழுத்தைச்சாராத லளக்கள் இருவழியிலும் வருநகரந்திரிந்தவிடத்துக்கெடும். (உ-ம்)

| அல்வழி | வேற்றுமை | |
|---|---|---|
| வேனன்று | வேனன்மை | என வரும். |
| பொருணன்று | பொருணன்மை | |

கருஞ்சனன்று, கருந்தொணன்று எனத் தொடர்மொழி யிறுதியிற்றனிக்குறிற்கீழ் நின்ற லரக்களுந் திரிதலைவுங் கொள்க.

ஙாயன லகர ளகரவீற்று மொழிக ளின்முன் இடையினம் வரின் இருவழியி லும் இறுதி லளக்கள் இயல்பாம். (உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| கல்யாது | கல்யாப்பு | என |
| விரல்வலிது | விரல்வன்மை | வரும். |
| முள்யாது | முள்யாப்பு | |
| வாள்வலிது | வாள்வன்மை | |

இல்லென்கிற இன்மைப்பொருளையுணர்த்துஞ்சொல் ஐகார வாகாரச்சாரியைகளுளொன்றைப் பெற்றேனும், இவ்விரு சாரியைகளுளொன்றையும் பெறாமலேனும்நிற்கும் ஐகாரச்சாரியை பெற்றவிடத்து இல்லைபொருள், இல்லைப்பொருள் எனவரும் வல்லினம் ஒருகாலியல்பாயும் ஒருகால் மிக்கும் வருமெனவும் ஆகாரச்சாரியைபெற்றவிடத்து இல்லாப்பொருள் என வரும் வல்லின மிகுமெனவும், இவ்விருசாரியையும்பெறாதவிடத்து இல்பொருள் என இயல்பாமெனவுங்கொள்க.

[வகரவீறு]

௩௱௰௭. அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பலவின்பாலை யுணர்த்திவருஞ் சுட்டுப்பெயர்களினிறுதி வகரம் அவ்வழியில் வலினம்வரின் ஆய்தமாகத் திரியவும் மெல்லினம்வரின் வந்தவெழுத்தாகத் திரியவும், இடையினம்வரின் இயல்பாய்நிற்கவும் பெறும் (உ-ம்)

அஃகடியன இஃசிறியன } எ-ம்,
உஃபெரியன ———

அஞ்ஞான்றன இந்நீண்டன } எ-ம்,
உம்மாண்டன ———

அவ்யாத்தன இவ்வளர்ந்தன } எ-ம் வரும்.
உவ்யாழ்ந்தன ———

அன்றியுந் தெவ்வென்னுமொழியிறுதி வகரம் யகரமல்லாத மெய்கள் வருமிடத்துத் தெவ்வுக்கடிது, தெவ்வுக்கடுமை என வுகரச்சாரியைபெறுமெனவும், மகரம்வருமிடத்து ஒரோவழித் தெம்மன்னரென மகரமாய்த் திரியப்பெறுமெனவும் அறிக.

மெய்யீற்றுப்புணரியல்
முற்றிற்று.

# பொதுப்புணரியல்.

---

௯௱௰௮ உயிரீறு மெய்யீறு மீரு கவடைய வினைத்தொகைமுன் வரும் வல்லினம் இயல்பாம். (உ-ம்)

| | | |
|---|---|---|
| விரிகதிர் | எறிபடை | |
| விரிதிரை | ஓடுபாம்பு | |
| சுட்டுக்கனம் | அறைகடல் | வேறுடு |
| உய்கலம் | கொல்களிறு | |
| செய்கடன் | சேர்புகழ் | |
| கொள்கலம் | தின்பண்டம் | |

இவற்றின்முன் விரிமலர், கொல்யானை என வருமெல்லினமும் இடையினமு மியல்பாமெனவும், ண ன ல ள இந்நான்கிற்றின்முன்வருந் தகரமு நகரமுந் திரியுமெனவுங்கொள்க

௯௱௰௯ உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்களி னீற்றுமெய்கள் வல்லினம் வரின் இருவழியிலும் இயல்பாம் அப்பெயர்களினீற்று உயிர்முன்னும் ய ழ ர கர மெய்களின் முன்னும் வரும்வல்லினம் இருவழியிலு மிகாவாம்.

(உ-ம்)

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| அவன்குறியன் | அவன்கை | |
| ஆண்சிறியன் | ஆண்செவி | எ-ம், |
| ஆண்பெரிது | ஆண்புறம் | |
| விடலைதீயன் | விடலைதலை | |
| அவர்தீயர் | அவர்தலை | |
| சாத்திகுறியள் | சாத்திகை | எ-ம், |
| சாத்திபெரிது | சாத்திபுறம் | வரும் |
| தாய்தீயள் | தாய்தலை | |
| தாய்பெரிது | தாய்புறம் | |

௧௬௨ உயிரீற்று மெய்யீற்று விளிப் பெயர்முன் வரும்வல்லினம் பெரும்பாலு மியல்பாம். (உ-ம்)

| | | |
|---|---|---|
| வேந்துகேள் | சாத்தாசெல் | |
| தங்காய்பார் | தாய்கா | ௨௩௪௫௬. |
| புலியேகொல் | கிள்ளாய்போ | |

இவற்றின்முன் ஆடூக்கூறாய், கோக்கூறாய் என ஓரோவிடத்து வருமவல்லினமி குமெனவும், வேந்துதீஇ, தாய்வா என வருமெல்லினமும் இடையினமும் இயல்பா மெனவுங்கொள்க.

கஉக உயிரையுமெய்யையும் ஈறாகவுடைய எண்ணுப்பெயர்மூன்றும் நிறைப்பெயர்மூன்றும் அளவுப்பெயர்மூன்றும் அவ்வவற்றிற் குறைந்த அவ்வப்பெயர்கள் வரின்பெரும்பாலும் ஏ என்னுஞ்சாரியை இடையில்வரும். (உ-ம்)

ஒன்றேகால் காலேகாணி எ-ம்,
தொடியேகஃசு கழஞ்சேகுன்றி எ-ம்,
கலனேபதக்கு உழக்கேயாழாக்கு எ-ம் } வரும்,

ஒன்றரை, தொடியரை, குறுணிநானாழி எனச்சிறுபான்மை ஏகாரச்சாரியை வாராதொழிதலும் அறிக.

நாழி என்னும் அளவுப்பெயர்முன் உரி என்னும் அளவுப்பெயர்வரின் நாடுரி, என நிலைமொழியீற்றுயிர்மெய் கெட்டு டகரமெய் தோன்றுமென்றும், உரி என்னும் அளவுப் பெயர்முன் ஏற்றமொழிகள்வரின் உரியவுப்பு, உரியபயறு என யகரவுயிர்மெய்வருமென்றுங்கொள்க.

கஉஉ. உயிரையு மெய்யையு முதலுமீறுமாகவுடைய வேற்றுமையுருபுகள், போனவிரண்டியலுங் கூறும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சியெனக்கூறிய மெய்ப்புயிர்முதலீ

ற்றுப்பெயர்களின்புணர்ச்சியைப்பெரும்பாலும் ஒத்து நிலைமொழியீறாயும் வருமொழிமுதலாயும் புணரும்

நம்பிகண்வாழ்வு என உயிரீற்று உயர்திணைப்பெயர்முன் வேற்றுமையில் வரும் வல்லினமிகாவென்றும், ணகரம் இடையினம்வரின் இருவழியிலு மியல்பாமென்றும், விதித்தவாறு கண்ணுருபின் முதலு மீறுமியல்பாயின

உரிக்கட்டயிர், என இகர வீற்றுச் சொன்முன் வேற்றுமைப்பொருளில் வரும்வல்லின மிகுமென்றும், ணகரம் வேற்றுமைப்பொருளில் வல்லினம்வரின் டகரமாய்த்திரியுமென்றும், விதித்தவாறு கண்ணுருபின் முதலுமீறும் விகாரமாயின.

சிறுபான்மை நம்பிக்கு, என இகரவீற்று உயர்திணைப்பெயர்முன் வேற்றுமைப்பொருளில் வரும் வல்லினம் இயல்பாமென்றவாறு இயல்பாகாமற் குவ்வுருபு மிகுதலுங்கொள்க

௯௨௧ உயிரீற்று மெய்யீற்று இடைச்சொற்களும், உரிச்சொற்களும், மேற்கூறிய புணர்ச்சிவிதிக்குச் சிறுபான்மை வே

றுபட்டும்வரும். (உ-ம்)
வண்டின்கால், என வேற்றுமைப்பொ
ருட்புணர்ச்சியில் வல்லினம் வருமிடத்து
சாரியை இடைச்சொலின்று னகரந் தி
ரியாமலியல்பாயிற்று
சென்மதிபெரும, என இகரவீற்றி
டைச்சொன்முன் வரும்வல்லெழுத்து மி
காமலியல்பாயிற்று
வரும்வல்லினம் மழகளிறு, நனிபே
தை, கழிகண்ணோட்டம், என அகர இகரவீ
ற்றுஉரிச்சொற்களின்முன் மிகாமல் இயல்
பாயின, தடந்தோள், என அகரவீற்றுரிச்
சொன்முன் இனமெல்லெழுத்துமிகப்பெ
ற்றுப் புணர்ந்தன
௩௨௪ விதியின்றி விகாரப்பட்டு வ
ருவனவுஞ்சிலவுள அவை மருவிவழங்குத
ல் ஒத்துநடத்தல், தோன்றல், திரிதல், கெடு
தல், நீளல், நிலைமாறுதல், என எழுவகைப்ப
டும். மருவிவழங்குதலொன்றுந, தொடர்
மொழியிலும, மற்றவை பெரும்பாலும்
ஒருமொழியிலும்வரும்.
௩௨௫ மருவிவழங்குதல் விதியின்றி
ப்பலவாறு விகாரப்பட்டு மருவிவரும்.

(உ-ம்)

அருமருந்தன்னபிள்ளை என்பது அருமந்தபிள்ளை எ-ம், கிழங்கன்னபழஞ்சோறு எ-து, கிழங்கம்பழஞ்சோறு எ-ம், பாண்டியனாடு எ-து, பாண்டிநாடு எ-ம், தஞ்சாவூர் எ-து, தஞ்சை எ-ம், வடுகன்றந்தை எ-து, வடுகந்தை எ-ம், என்றந்தை எ-து, எந்தை எ-ம், ஆற்றூர் எ-து, ஆறை எ-ம், வடக்குள்ளது எ-து, வடாது எ-ம், வரும்.

௱௨௯ ஒத்துநடத்தல ஒரெழுத்துநின்றவிடத்துமற்றோரெழுத்துவந்து பொருள்வேறுபடாது நடத்தலாம்.

[அவைவருமாறு]

அஃறிணையியற்பெயருள் குறிலிணையின்கீழ் மகரநின்றவிடத்து னகரம்வந்து பொருள்வேறுபடா தொத்துநடக்கும்.

(உ-ம்)

அகம்- அகன், முகம், முகன் } என
நிலம்- நிலன், நலம், நலன், } வரும்.

மொழிமுதலிடைகளிலே சகர ஞகார யகரங்களின்முன் அகரநின்றவிடத்து ஐகாரம்வந்து பொருள்வேறுபடா தொத்து

நடக்கும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| பசல்- | பைசல் | எ-ம், |
| மஞ்சு- | மைஞ்சு | |
| மயல்- | மையல் | |
| அமச்சு- | அமைச்சு | எ-ம், வரும். |
| இலஞ்சி- | இலைஞ்சி | |
| அரயர்- | அரையர் | |

ஒரோவிடத்து மொழிக்கு முதலினுஞ் சிலவிடத்து ஐகாரத்தின் பின்னும் யகரவொற்றின் பின்னும் நகர நின்றவிடத்து ஞகரம்வந்து பொருள் வேறுபடா தொத்து நடக்கும். (உ-ம்)

| | | |
|---|---|---|
| நண்டு- | ஞண்டு | எ-ம், |
| நெண்டு- | ஞெண்டு | |
| நமன்- | ஞமன் | |
| ஐந்நூறு- | ஐஞ்ஞூறு | எ-ம், வரும். |
| செய்ந்நின்ற- | செய்ஞ்ஞின்ற | |

ஒரோவிடத்து அஃறிணைப் பெயரீற்றில் லகரமிருந்தவிடத்து ரகரம்வந்து பொருள்வேறுபடா தொத்து நடக்கும். உ-ம்.

| | | |
|---|---|---|
| சாம்பல்- | சாம்பர் | எனவரும். |
| பந்தல்- | பந்தர் | |
| குடல்- | குடர் | |

அஃறிணைப்பெயர்களில் ஒரோவிட
த்துமெய்ம்முதற்குற்றுகரமொழிகளி னி
றுதி உகரங்கெடவிடத்து அர் வந்து பொ
ருள்வேறுபடாதொழுகு நடக்கும் (உ-ம்)

அரும்பு- அரும்பர்
கரும்பு- கரும்பர்
வண்டு- வண்டர் } எனவரும்.

௬உ௭ தோன்றலாவது எழுத்துஞ்
சாரியையும் விதியின்றித் தோன்றுதலாம்.

(உ-ம்)

யாது-யாவது என வகர வுயிர்மெய்
தோன்றிற்று குன்று-குன்றம் என அம்மு
ச்சாரியை தோன்றிற்று செல்உழி செல்வு
ழி, விண் அத்து- விணவத்து எனமெய்யீற்
றின்முன் உயிர்வர வகரமெய் தோன்றிற்று.

௬உ௮. திரிதலாவது ஒரெழுத்து மற்
றோரெழுத்தாக விதியின்றித் திரிதலாம்.

(உ-ம்)

மகிழ் மாசி எனக் ககரஞ் சகரமாய்த்
திரிந்தது. மழைபெயின்விளையும்- மழை
பெயில் விளையும் என னகரம் லகரமெய்
யாய்த்திரிந்தது

௬உ௯ கெடுதலாவது மெய்யாவது உ

யிராவது உயிர்மெய்யாவது விதியின்றிக் கெடுதலாம்.

(உ-ம்) யாடு-ஆடு, யானை-ஆனை என யகரமெய் கெட்டது யாவர்-யார் என வகரவுயிர்மெய் கெட்டது.

௩௯௰ நீளலாவது விதியின்றிக் குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீளலாம்

(உ-ம்) பொழுது-போழ்து என ஒகரம் ஓகார மாகவும், பெயர்-பேர் என எகரம் ஏகாரமாகவு நீண்டன

௩௯௧ நிலைமாறுதலாவது எழுத்துகள் ஒன்று நின்றவிடத்தொன்று சென்றுமாறி நிற்றலாம் (உ-ம்.)

வைகாசி-வைசாகி எ-ம், நாளிகேரம்-நாரிகேளம் எ-ம், தசை-சதை எ-ம், குடமிஞ்று-மிஞிறு எ-ம், சிவிறி-விசிறி எ-ம், வரும்

இவையன்றி, இலக்கணப்போலிமொழிகளும் விதியின்றி விகாரப்பட்டுவரும்.

(உ-ம்) இன்முன் என்பது முன்றில் எனமாறி னகரவீற்றின்முன் விதியின்றி றகரந்தோன்றப்பெற்றது பொது-வில் என்பது பொதியில் என முற்றுகரவீற்றின் முன்விதியின்றி இகரமும் யகரமெய்யுந் தோன்றப்பெற்றது.

பொதுப்புணரியல்-முற்றிற்று.

# வடவெழுத்துப்புணரியல்.

௧௩௨. வடவெழுத்துப் புணர்ச்சியாவது தமிழில் ஆங்காங்கு வந்து வழங்கும் வடமொழித் தொகைநிலைத் தொடர்களிலே நிலைமொழியும் வருமொழியும் வடநூற்புணர்ச்சி விதிப்படியே தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களைப் பொருந்தியாவது, இயல்பாகவாவது இயைந்து நிற்றலாம்.

வடவெழுத் தென்பது வடமொழி யெழுத்தாம்.

வடநூலார் தோன்றலை ஆகமமென்றும், திரிதலை-ஆதேசமென்றும், கெடுதலை லோபமென்றுங் கூறுவர்.

௧௩௩. வடவெழுத்துக் கிளவியென்னும், வடமொழிகள் தற்சமமாகியுந் தற்பவமாகியுந் தமிழில்வந்து வழங்குமாறுஇவ்வாறென்னும், உணர்ந்தன்றி வடவெழுத்துப்புணர்ச்சி உணரலாகாமையின், அவை இவையென முன்னருணர்த்தப்படும்.

## வடவெழுத்துகளுள்

### உயிரெழுத்துகள்

𑌅, 𑌆, 𑌇, 𑌈, 𑌉 𑌊, 𑌋, 𑍠, 𑌌, 𑍡, 𑌏, 𑌐, 𑌓, 𑌔, 𑌅𑌂, 𑌅𑌃, எனப்பதினாறாம்.

### மெய்யெழுத்துகள்

𑌕, 𑌖, 𑌗, 𑌘, 𑌙, 𑌚, 𑌛, 𑌜, 𑌝, 𑌞, 𑌟, 𑌠, 𑌡, 𑌢, 𑌣, 𑌤, 𑌥, 𑌦, 𑌧, 𑌨, 𑌪, 𑌫, 𑌬, 𑌭 𑌮, 𑌯, 𑌰, 𑌲, 𑌵, 𑌶, 𑌷, 𑌸, 𑌹, 𑌳, 𑌕𑍍𑌷, [illegible]

எனமுப்பத்தேழாம்.

வடநூலார் உயிரை - அச்சென்றும், மெய்யை-அல்லென்றுங் கூறுவர்

௩௩௪ உயிரெழுத்துகள் பதினைந்தனுள், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஓ, ஔ, என்னும் பத்தும், மெய்யெழுத்துகள் முப்பத்தேழனுள், க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ள, என்னும் பதினைந்தும், ஆகிய இருபத்தைந்தும் ஆரியத்திற்குந் தமிழிற்கும்பொதுவெழுத்துகளாம்.

உயிரெழுத்துகளுள் அப்பத்தொழிந்த ஐந்தும், மெய்யெழுத்துகளுள் அப்ப

இனந்தொழிந்த விருபத்திரண்டும், ஆகிய இருபத்தேழும் ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்துகளாம்.

௯௫ ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகி விகாரமுறாமல் தமிழில்வந்து வழங்கும் வடமொழிகள் - தற்சமமொழிகளெனப்படும்.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| கமலம் காரணம் மணி | } | என |
| வேணு குங்குமம் மேரு | } | வரும் |

௯௬. ஆரியத்திற்கேயுரியசிறப்பெழுத்தாலும் பொதுவுஞ் சிறப்புமாகிய வெழுத்தாலுமாகித் திரிதல் முதலாகிய விகாரங்களைப்பெற்றுத் தமிழில்வந்து வழங்கும்வடமொழிகள்- தற்பவமொழிகளெனப்படும்

[அவைவருமாறு]

உயிர்களுள் மொழியிறுதி அகரம் உயர்திணையில் னகரமும், அஃறிணையில் மகரமும்பெறும் (உ-ம்) காமன் எ-ம், கும்பம் எ-ம், வரும்.

மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாயும் ஈகாரம் இகரமாயுந்திரியும். (உ-ம்) மாலை எ-ம், புரி எ-ம், வரும்.

மொழியிறுதி ஊகாரம் உகரமாய்த் திரியும். (உ-ம்) சுயம்பு எனவரும்.

ஏழாமுயிர் இரமாயும் இருவாயுந் திரியும் (உ-ம்) இடபம் எ-ம், மிருகம் எ-ம், வரும்.

மெய்யெழுத்துகளுள் க, ச, ட, த, ப, என்னும் ஐந்துவருக்கங்களினும் இடைநின்ற மூன்றெழுத்துகளும் அவ்வவ்வருக்கங்களின் முதலெழுத்துகளாகும். (உ-ம்)

| | | | | |
|---|---|---|---|---|
| நகம் | நாகம் | மேகம் | எ-ம், | வரும். |
| சலவாதி | விசயம் | சருக்கரா | எ-ம், | |
| மீடம் | மீடை | திடம் | எ-ம், | |
| தலம் | தினம் | தனை | எ-ம், | |
| பலம் | பந்தம் | பாரம் | எ-ம், | |

அன்றியும் எட்டாமெய் யகரமுமாகும். (உ-ம்) பங்கயம் எனவரும்.

பதினாறாமெய்யும் பதினெட்டாமெய்யும் றகரமாகும். (உ-ம்) உற்பலம் எ-ம்,

 வடவெழுத்துப்புணரியல்.

அற்புதம் எ-ம், வரும்.

இருபதாமெய்மொழியிடையிற்பெ
ரும்பாலுமனகரமாகும் (உ-ம்) தினம்மன
ம் எனவரும்

இருபத்தொன்று மெய்முதல் அவ்வ
ருக்கத்து நான்கு மெய்களும்வகரமுமாகு
ம். (உ-ம்)
பாவம் எ-ம், கவம் எ-ம், விந்து எ-ம், வீம
ன் எ-ம், வரும்

இருபத்தெட்டாமெய் றகரமாகும்.
(உ-ம்) கற்பகம், எனவரும்.

இருபத்தொன்பதாமெய்-ஒரோவிட
த்துப் பகரமுமாகும். (உ-ம்) காப்பியம்,
எனவரும்

முப்பதாமெய் மொழிக்குமுதலிற்
சகரமும், இடையிற் சகரமும் யகரமுமா
கும் (உ-ம்; சாலை எ-ம், பாசம், மயாணம்
எ-ம், வரும்

முப்பத்தொன்று மெய்மொழிக்கு
முதலிற்சகரமும், இடையிலுங் கடையிலு
ம டகரமுமாகும். (உ-ம்) சண்முகம் எ-ம்,
விடம்-எ-ம், பாடை எ-ம், வரும்.

முப்பத்திரண்டாமெய் மொழிக்கு முதலிற் சகரமும், இடையிற் சகரமுந் தகரமு மாகும். (உ-ம்) சித்தி எ-ம், வாசம், வாதனை எ-ம் வரும்

முப்பத்து மூன்றாமெய் மொழிக்குமுதலிற்கெடும் இடையிலுங் கடையிலுங்ககரமாகத்திரியும் (உ-ம்) அரன் எ-ம், மோகம் எ-ம், அகி எ-ம் வரும்.

முப்பத்தைந்தாமெய் மொழிக்குமுதலிலொருககரமும், இடையிலுங் கடையிலுமிரு ககரமுமாகும் (உ-ம்) கீரம் எ-ம், பக்கம் எ-ம், குக்கி எ-ம் வரும்.

வடமொழிகளுள் இரண்டு மெய்களிணைந்து ஒரெழுத்துப்போல வருமிடத்து நகர யகர ரகர லகரங்களுக்கு முன்னின்றமெய்கள், மொழிக்குமுதலிலும் இடையிலும் இகரம்பெறும். (உ-ம்)

| முதல் | இடை | |
|---|---|---|
| சிநேகம் | விக்கினம் | எனவரும். |
| தியாகம் | வாக்கியம் | |
| திரவியம் | வக்கிரம் | |
| கிலேசம் | சுக்கிலம் | |

இணைந்துநிற்கு மகர வகரங்களுக்கு முன்னின்றமெய்கள், மொழிக்குமுதலிலும்இடையிலும் உகரம்பெறும(உ-ம்)

| முதல் | இடை | |
|---|---|---|
| சுமார்த்தன் | பதுமம் | எனவரும். |
| துவசம் | பக்குவம் | |

மொழிக்கிடையில் ந ய ர ல வக்களுக்குமுன்னின்ற மெய்கள், பெரும்பாலும் இரட்டித்துவரும் அவையிரட்டித்துவருதல்-மேற்காட்டிய வுதாரணங்களிற்கண்டுகொள்க

இணைந்துநிற்கு நகரத்திற்கு முன்னின்றமெய் அகரம்பெறும் (உ-ம்) அரதனம் எனவரும்.

தனிக்குறிலின்கீழ்நின்ற ரகரம் பின்னின்றமெய்களோடு இணைந்து நிற்கும்போது உகரம்பெறும் (உ-ம்) அருக்கன், கருப்பம் எனவரும் பிறவுமன்ன.

நகர யகர ரகர லகர வகர மகரங்களல்லாத மெய்களுக்கு முன்னின்றமெய்கள், பெரும்பாலும் கெடும. (உ-ம்) தானம் ஞானம் எனவரும்.

மொழிக் கீற்றினிற்குங் ககரமுதலிய வல்லினமெய்கள், இரட்டித்து உகரம்பெறும் (உ-ம்) வாக்கு, விராட்டு எனவரும்.

மேலுஞ் சம்பகம், எ-து சண்பகம் எ-ம், கோகநதம் எ-து கோகநகம் எ-ம், தபநீயம் எ-து - தமனியம் எ-ம், ரூபம் எ-து உருவம், உருவு, உரு எ-ம், ஆத்மா- எ-து ஆன்மா எ-ம், தர்மம் எ-து தன்மம் எ-ம், அஸ்தம் எ-து அத்தம் எ-ம், சப்தம் எ-து சந்தம் எ-ம், சக்தி எ-து சத்தி எ-ம் மோக்ஷம் எ-து மோக்கம் என வருதலன்றி மோட்சம் எ-ம், பத்மம் எ-து பதுமம் என வருதலன்றி-பற்பம் எ-ம், பலவாறு விகாரப்பட்டுவருதலுங்கொள்க.

௩௩௭. வடசொற்களுக்கு முதலாகிவருகின்ற ரகரலகர யகரங்களில் ரகரம் அகர இகர உகரங்களிலொன்றையும், லகரம் இகர உகரங்களிலொன்றையும், யகரம் இகரத்தையும், முதலிற்பெற்றுவரும் (உ-ம்)

அரங்கன், இராமன், உரோமம் எ-ம்,
இலாபம், உலோபம் எ-ம்,
இயக்கன், ——————— எ-ம், வரும்.

௬௬௮. தமிழில் ஆங்காங்குவந்து வழங்கும் வடமொழித் தொகைநிலைத்தொடர்களிலே பெரும்பாலும்வடநூற்புணர்ச்சி விதிப்படியே வருஞ் சந்திகள்-தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி என மூன்றுவகைப்படும் இம்மூன்று சந்திகளும் வருதல் உயிரீற்றின்முன் உயிர்வருமிடத்தெனவறிக.

௬௬௯. அம்மூன்றுசந்திகளிலேதீர்க்கசந்தியாவன- அ ஆக்களி லொன்றன்முன் அ ஆக்களிலொன்றுவந்தால், நிலைமொழியீறும் வருமொழி முதலுங்கெட ஆகாரமும், இ ஈக்களி லொன்றன்முன் இ ஈக்களிலொன்றுவந்தால், நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெட ஈகாரமும், உ ஊக்களிலொன்றன்முன் உ ஊக்களிலொன்றுவந்தால் நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெட ஊகாரமும் வருவனவாம்.

(உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| பத- | அம்புயம் | பதாம்புயம் | தீர். |
| பரம- | ஆனந்தம் | பரமானந்தம் | |
| கங்கா- | அமிர்தம் | கங்காமிர்தம் | |
| சதா- | ஆனந்தம் | சதானந்தம் | |

சுசி- இந்திரம் சுசீந்திரம்
கிரி- ஈசன் கிரீசன்
மகி- இந்திரன் மகீந்திரன்
மகி- ஈசன் மகீசன்
} எ-ம்.

குரு- உதயம் குரூதயம்
மேரு- ஊர்த்துவம் மேரூர்த்துவம்
சுயம்பூ- உபதேசம் சுயம்பூபதேசம்
சுயம்பூ- ஊர்ச்சிதம் சுயம்பூர்சசிதம்
| எ-ம்.

௩௱௪௰ குணசந்தியாவன -அ ஆக்களிலொன்றன்முன் இ ஈக்களிலொன்றுவந்தால் நிலைமொழியீறும்வருமொழிமுதலுங்கெட ஏகாரமும், அ ஆக்களிலொன்றன்முன் உ ஊக்களிலொன்றுவந்தால் நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெட ஓகாரமும் வருவனவாம். (உ-ம்)

நர- இந்திரன் நரேந்திரன்
சுர- ஈசன் சுரேசன்
தரா- இந்திரன் தரேந்திரன்
உமா- ஈசன் உமேசன்
} எ-ம்.

பாத-உதகம் பாதோதகம்
ஞான ஊர்ச்சிதன் ஞானோர்ச்சிதன்
தயா-உற்பத்தி தயோற்பத்தி
தயா-ஊர்ச்சிதன் தயோர்ச்சிதன்

௱௪௧ விருத்திசந்திபாவன-அ ஆக்களிலொன்றன்முன் ஏ ஐகளிலொன்றுவந்தால்-நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெட ஐகாரமும், அ ஆக்களிலொன்றன்முன் ஓ ஔக்களிலொன்றுவந்தால்-நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெட ஔகாரமும் வருவனவாம்.

(உ-ம்.)

ஏக-ஏகன் ஏகைகன்
பர-ஐக்கியம் பரைக்கியம்
சதா-ஏகரூபம் சதைகரூபம்
மகா-ஐச்சுவரியம் மகைச்சுவரியம்

கோமள-ஓடதி கோமளௌடதி
திவ்விய-ஔடதம் திவ்வியௌடதம்
மகா-ஓடதி மகௌடதி
மகா-ஔடதம் மகௌடதம்

௱௪௨. இவ்விருத்தி சந்தியிருமொழி

ப்புணர்ச்சிக்கண்ணன்றி ஒருமொழியினும்வரும். அவற்றையாதிவிருத்தி சந்தியென்பர்

அவைமொழிமுதலி லிருக்கின்ற இ ஈ எக்கள் ஐ யாகவும், உ ஊ ஒக்கள் ஔவாகவும், அகரம் ஆகாரமாகவும், ஏழாமுயிர் ஆராகவும், திரிந்துவருவனவாம். (உ-ம்)

| | |
|---|---|
| சிவனைத்தொழுவோன் | சைவன் |
| வீரத்தின்றன்மை | வைரம் |
| கேவலத்தின்றன்மை | கைவல்லியம் |
| புத்தனைத்தொழுவோன் | பௌத்தன் |
| சூரன்றன்மை | சௌரியம் |
| கோசலையிற்பிறந்தாள் | கௌசலை |
| தசரதன்புதிரன் | தாசரதி |
| கிருத்திகையின் புத்திரன் | கார்த்திகேயன் |

கார்த்திகேயன் என்று மிடத்து இறுதியி லிருக்கின்ற எய என்னும் விகுதிமகனென்னும் பொருளையுணர்த்தி நிற்றல் காண்க

௩௪௩ வடநூன் முடிபெய்திய நிலைமொழியீறும் வருமொழிமுதலும் இயல்பாய் ஆங்காங்குவடமொழித்தொகை நிலைத்தொடர்கள் வருதலுமுண்டு.

இயல்பாயவருதல் உயிர்நின்முன்
மெய்முதன்மொழிவருமிடத்தெனவறிக.

உ-ம

தாரதம்மியம், உமாபதி,
குலசேகரன், தனதடம்,
கங்காதீரம், மாயாகாரியம்,
ஆதிபகவன், அளிகுலம், } எனவரும்.

சகரவருக்கத்துள் இரண்டாமெய்வருமொழிக்குமுதலாகி வருமிடத்து, சூரியச்சாயை-பதச்சேதம் என வருமச்சகர மிகுமெனவும், நிலைமொழியீறு நெடிலாயின்- கௌரீச்சாயை- கௌரீசயை என வருமச்சகர ஒருகான்மிக்கும் ஒருகான் மிகாதும் வருமெனவுமறிக.

௩௪௪. வடமொழித் தொகை நிலைத்தொடருள் நிலைமொழியேனும் வருமொழியேனும் அவ்விரண்டுமேனுந்தமிழ்மைநோக்கி விகாரமுற்ற விடத்தும், நிலைமொழியேனும்வருமொழியேனுந் தமிழ்மொழியாகியவிடத்துந் தமிழ்நூற்புணர்ச்சிவிதியைப்பெற்றுவரும். (உ-ம்)

கங்கைச்சடை, மாயைக்குணம் எ-ம்,
அலிக்கூட்டம், முலத்தடம் எ-ம், } [illegible]

மற்றவைவருமிப்படியே.

௩௪௫. மெய்யீற்று வடமொழிகளின்முன் உயிருமெய்யு வருமிடத்து, திக்-அந்தம்-திகந்தம் எ-ம், சித்-ஆகாசம்- சிதாகாசம் எ-ம், சித்-சத்தி சிச்சத்தி எ-ம், சகத்-நாதன்-சகந்நாதன் எ-ம், சித் மயம்- சின்மயம் எ-ம், மநஸ்-லயம்- மனோலயம் எ-ம், சரஸ்-ருகம்- சரோருகம் எ-ம், தத்தமக்குரிய புணர்ச்சி விதியைப்பெற்றுவரும் அவற்றையெல்லாந்தனித்தனி சொல்லப்புகுந் நால்விரியுமென்றுவிட்டனம்.

உண்மைநோக்குமிடத்து வடவெழுத்துமெய்களில், லகரம் ளகரமாக வுச்சரிக்கப்படுவதன்றி ளகரம்வேறெழுத்தன்றெனவும், க்ஷகரங் கூட்டெழுத்தன்றித் தனியே ஓரெழுத்தன்றெனவும் உணர்க.

வடவெழுத்துப்புணரியல்.

முற்றிற்று.

புணர்ச்சியதிகாரம்

முற்றுப்பெற்றது.

[illegible]

நான்காவது

# தொடர்மொழியதிகாரம்.

௧-வது.

## தொகைநிலைத்தொடரியல்

௩௪௬. தொடர்மொழியதிகாரந் தொகைநிலைத்தொடரியல், தொகாநிலைத் தொடரியல், பிரயோகவியல், ஒழிபியல் என நான்கியல்களாக வகுக்கப்படும்

௩௪௭. தொடர்மொழிகள் பெயர், வினை, இடை, உரி என்னு நால்வகைச்சொற்களுள் இரண்டுமுதலியன தொகைநிலைவகையாலும், தொகாநிலைவகையாலுந் தொடர்வனவாம்.

௩௪௮. தொகைநிலைத்தொடர் பெயரோடும் பெயரொச்சத்தோடும் பெயரும், பெயரோடு வினைவினைக்குறிப்புப் பெயர்களும், இடையில் வேற்றுமையுருபுமுதலியவுருபுகள்கெட்டு நிற்க ஒருமொழித் தன்மைப்பட்டுத் தொகுவனவாம் ஒருமொழித் தன்மைப்படுதலாவது பிளவுபடாமனிற்றலாம்.

௩௱௪௯. அத்தொகைகள் வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என அறுவகைப்படும்.

௱௫௰ வேற்றுமைத்தொகை இரண்டாவதுமுதல் ஏழாவது இறுதியாகிய ஆறுவேற்றுமையுருபுகளும் இடையிலேகெட்டுநிற்க மொழிகள்தொகுவனவாம்.

(உ-ம்.)

நிலங்கடந்தவன்
தலைவணங்கினவன்
சாத்தன்மைந்தன்
ஊர்நீங்கினவன்
சாத்தன்கை
குன்றக்கூகை
எனவரும்.

பொன்னாற்செய்தகுடம் எ-து பொற்குடம் எ-ம், கையையுடையகளிறு எ-து கைக்களிறு எ-ம், வருவன உருபும் பொருளுமொருங்குகெட்ட வேற்றுமைத்தொகையெனக் கொள்க.

௫௬௯ வினைத்தொகை - பெயரெச்சத்தினுருப்பாகிய இடைநிலையும் இறுதிநிலையுமாகிய வுருபேனும், இறுதிநிலையுருபேனுங்கெட்டு நிற்க அவற்றின்முதனிலையோடு பெயர்ச்சொற்கள் தொகுவனவாம் (உ-ம்)

| | |
|---|---|
| நேற்றுக்கொல்களிறு<br>முன்விடுகணை | இறந்தகாலவினைத்தொகை. |
| இன்றுகொல்களிறு<br>இப்போதுவிடுகணை | நிகழ்காலவினைத்தொகை |
| நாளைக்கொல்களிறு<br>பின்விடுகணை | எதிர்காலவினைத்தொகை. |

எனவரும்.

இவை அவ்வுருப்புகள் கெடாமனிற்குமிடத்து-கொன்ற கொல்கின்ற கொல்லும் எ-ம், விட்ட விடுகின்ற விடும் எ-ம், நிற்குமெனக்கொள்க.

கொல்களிறு, விடுகணை என்றாற்போல்வன முக்காலமும்பற்றிவரின் முக்காலவினைத்தொகை யெனப்படும்.

சிலவினைத்தொகைகள் நடந்திடுகுதிரை படித்திடுபுத்தகம் என [illegible]ப்பெற்றுவரும்.

௧௫௨. பண்புத்தொகை-பண்புக்கும் பண்பிக்குமுண்டாயிருக்கின்ற ஒற்றுமையை விளக்குகிற ஆகியவென்னுமுருபு இடையிலேகெட்டு நிற்கப் பண்புச்சொல்லோடு பண்பிச்சொல், தொகுவனவாம். பண்பு-வண்ணம், வடிவு, அளவு, சுவைமுதலியனவாம். (உ-ம்)

| | |
|---|---|
| செந்தாமரை, கருங்குவளை, | வண்ணப்பண்புத்தொகை. |
| வட்டக்கடல், சதுரப்பலகை, | வடிவுப் பண்புத்தொகை. |
| ஒருபொருள், முக்குணம், | அளவுப் பண்புத்தொகை |
| துவர்க்காய், இன்சொல், | சுவைப் பண்புத்தொகை. |

எனவரும்.

அன்றியும், ஆகியவென்னும் பண்புருபு இடையிலே கெட்டு நிற்கப் பொதுப்பெயரோடு சிறப்புப்பெயராவது, சிறப்புப்பெயரோடு பொதுப்பெயராவது, ஒருபொருண்மேல்வந்து தொகுவன, இருபெ

யொட்டுப் பண்புத் தொகையாம்.

(உ-ம்.)

சாரைப்பாம்பு, ஆயன்சாத்தன் என வரும் இவை அவ்வுருபு கெடாமனிற்குமிடத்துச் செம்மையாகிய தாமரை, சாரையாகியபாம்பு என நிற்குமெனக்கொள்க

௫௱௬ உவமைத்தொகை, போலமுதலிய உவமையுருபுகள் இடையிலே கெட்டு நிற்க, உபமானச் சொல்லோடு உபமேயச் சொல், தொகுவனவாம். இவ்வுவமை-வினை, பயன், மெய், உருவு, ' என்பன பற்றிவருமெனக்கொள்க. (உ-ம்)

| | |
|---|---|
| புலிக்கொற்றன்- | வினையுவமைத்தொகை. |
| மழைக்கை- | பயனுவமைத்தொகை. |
| துடியிடை- | மெய்யுவமைத்தொகை. |
| பவளவாய்- | உருவுவமைத் தொகை. |

எனவரும் இவை அவ்வுருபுகெடாமனிற்குமிடத்துப் புலிபோலுங் கொற்றன் மழைபோலுங்கை என நிற்கும்.

உவமை யுருபுகளாவன போல, புரை, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்

ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன, முதலியனவாம்.

௩௫௬ உம்மைத்தொகை எண்ணப்படுபொருளில்வரும் உம்முருபு, இடையிலும் இறுதியிலுங்கெட்டு நிற்கச்சொற்கள்தொகுவனவாம்.

இவ்வும்மைத்தொகை எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னு நால்வகை அளவுப்பெயர்களிலே வருமென்றுகொள்க.

(உ-ம்.)

| | |
|---|---|
| இராப்பகல், ஒன்றேகால் | எண்ணலளவை. |
| கழஞ்சேகால், தொடியேகஃசு | எடுத்தலளவை. |
| கலனேதூணி, நாழியாழாக்கு | முகத்தலளவை. |
| சாணரை, சாணங்குலம், | நீட்டலளவை. |

எனவரும். இவை அவ்வுருபுகெடாமனிற்குமிடத்து இரவும்பகலும், ஒன்றுங்காலும், என நிற்கும். மற்றவைகளுமிப்படியே

௩௫௫. அன்மொழித்தொகை - வேற்றுமைத்தொகை முதல ஐந்து தொகைநிலைத்தொடர்ப் புறத்தே பொருள்படத்தொகாது அவையல்லாத மொழிப் பொருள்படத் தொடர்வனவாம். (உ-ம்)

பூங்குழல், பொற்றொடி, கவியிலக்கணம், பொற்றாலி, கிள்ளிகுடி, கீழ்வயிற்றுக்கழலை என வரும். இவை வேற்றுமைத்தொகையிடத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

இவை அவ்வுருபுகெடாமனிற்குமிடத்து பூவையுடைய குழலினையுடையாள், பொன்னாலாகிய தொடியினையுடையாள், கவிக்கிலக்கணஞ்சொல்லப்பட்ட நூல், பொன்னிருகிய தாலியினையுடையான், கிள்ளியினதுகுடியிருக்குமூர், கீழ்வயிற்றின்கண்ணெழுந்தகழலைபோல்வான், எனநிற்கும்.

தாழ்குழல் என்பது, வினைத்தொகையிடத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது அவ்வுருபுகெடாமனிற்குமிடத்துத் தாழ்ந்தகுழலினையுடையாள் எனநிற்கும்.

கருங்குழல் என்பது, பண்புத்தொகையிடத்துப்பிறந்த அன்மொழித்தொ

கை இது அதனுருபுகெடாமனிற்குமிடத்
து கருமையாகிய குழலினையுடையாள் எ
னநிற்கும்

தேன்மொழி என்பது, உவமைத்தொ
கையிடத்துப் பிறந்த அன்மொழித்தொ
கை இது அதனுருபுகெடாமனிற்குமிடத்
து தேன்போலு மொழியினையுடையாள்
எனநிற்கும்.

உயிர்மெய், என்பது, உம்மைத்தொ
கையிடத்துப்பிறந்த அன்மொழித்தொ
கை இது அதனுருபுகெடாமனிற்குமிடத்
து உயிரு மெய்யுமாகிய இரண்டெழுத்து
க்கூடிப் பிறந்த வெழுத்தெனநிற்கும்

கூசுஎ ஐயுருபுங் கண்ணுருபுங்கெட்
டு நிற்குந்தொகைநிலைகளிலே முடிக்குஞ்
சொல் சிறுபான்மைமுன் வரவும்பெறும்.

(உ-ம்)

கடந்தானிலம்
இருந்தான்மாடத்து } எனவரும்.

இவ்வாறு வருவன வெல்லாம் உருபு
கெட்டு நிற்கினும் ஒருமொழித் தன்மைப்
படாமற் பிளவுபட்டு வருதலாலே. தொ

கா நிலைத்தொடரென்றே கொள்ளப்படும்.

௯௭. வேற்றுமையுருபுகள் கெடாம னிற்குமிடத்து எப்பொருள்படுமோ அப்பொருள்படு மிடத்தே கெட்டுநிற்கப்பெறும். அப்பொருள் படாவிடத்துக்கெட்டு நிற்கப்பெறுவாம். (உ-ம்)

சாத்தனையடித்தான், சாத்தனோடுவந்தான், என உருபுகெடாமனிற்குமிடத்துச் செயப்படுபொருளும் உடனிகழ்ச்சிப்பொருளும்படுதல்போலச் சாத்தனடித்தான், சாத்தன்வந்தானென்னுமிடத்து அப்பொருள்படாமையால் இவ்விடங்களிலே அவ்வுருபுகள்கெட்டுநிற்கப் பெறுவெனவறிக

௯௮. வினைத்தொகையை விரித்தவிடத்துப் பெயரெச்சத்தொடரும், பண்புத்தொகையையும் உம்மைத் தொகையையும் விரித்தவிடத்து இடைச்சொற்றொடரும், உவமைத் தொகையை விரித்தவிடத்து முன்னது இடைச்சொற்றொடரும் பின்னது இடைச்சொலடியாகப்பிறந்த பெயரெச்ச வினையெச்சத் தொடரும், அன்மொழித் தொகையைவிரித்தவிடத்துச்சொற்களுஞ்

சந்திகளும்பலவாதலின் பலதொடரும்,ஆமாதலால இவைதொகைநிலையாயேவருமென்றும், வேற்றுமைத் தொகையை விரித்தவிடத்துப்பொருளுஞ்சந்தியும்வேறுபடாமையால்அது தொகைநிலையுந்தொகாநிலையுமாய் வருமென்றுங்கொள்க.

௩ரு௧. உயர்திணை யொருமைப்பாலில்வரும் உம்மைத்தொகைகள் ரகரமெய்யும், கள்ளுமாகிய பலர்பால் விகுதியையுடையனவாய்வரும் (உ-ம்)

சேரசோழபாண்டியர், } எனவரும்
தேவனடிறனிகள்,

தன்மைநீமை, நன்மைதீமைகள், தந்தைதாய், தந்தைதாய்கள், என அஃறிணை, பொதுத்திணை யொருமைப்பாலில் வரும் உம்மைத் தொகைகள் ஒருமை யீற்றாலும் பன்மையீற்றாலும் வருமெனவுங்கொள்க.

௩௬௰ தொகைநிலைத்தொடர் மொழிகள் விரித்துப்பொருள் கொள்ளப்படுமிடத்து ஒருபொருள் கொள்ளப்படுவதுமன்றி இரண்டுமுதல் எழெல்லையாகப்பல பொருளுங்கொள்ளப்படுவனவாம். (உ-ம்)

தெய்வவணக்கமென்பது, தெய்வத்தை வணங்கும்வணக்கம், தெய்வத்துக்கு வணங்கும்வணக்கம், எனவிருபொருள்கொள்ளப்பட்டது.

தற்சேர்ந்தாரென்பது, தன்னைச்சேர்ந்தார், தன்னோடுசேர்ந்தார், தன்கட்சேர்ந்தார், எனமூன்றுபொருள் கொள்ளப்பட்டது

சொல்லிலக்கணமென்பது, சொல்லினதிலக்கணம், சொற்கிலக்கணம், சொல்லின்கணுள்ளவிலக்கணம், சொல்லிலக்கணஞ்சொன்னநூல், எனநான்குபொருள் கொள்ளப்பட்டது.

பொன்மணியென்பது, பொன்னாலாகியமணி, பொன்னாகியமணி, பொன்னினகண்விளங்குகின்றமணி, பொன்னோடுசேர்ந்தமணி, பொன்னும்மணியும், எனவைந்து பொருள்கொள்ளப்பட்டது

மரவேலியென்பது, மரத்தைக்காக்கும்வேலி, மரத்திற்குவேலி, மரத்தினதுவேலி, மரத்தின்புறத்துவேலி, மரத்தாலாகியவேலி, மரமாகியவேலி, எனவாறுபொருள் கொள்ளப்பட்டது.

சொற்பொருளென்பது, சொல்லாலறியப்படும்பொருள், சொல்லினதுபொருள், சொற்குப்பொருள், சொல்லின்கணுள்ளபொருள், சொல்லும்பொருளும், சொல்லாகியபொருள், சொல்லானதுபொருள், எனவேழுபொருள்கொள்ளப்பட்டது.

௩௯௨ தொகைநிலைத்தொடர்மொழிகளுள், வேற்றுமைத்தொகையினும், பண்புத்தொகையினும், முன்மொழியிலாயினும் பின்மொழியிலாயினும் பொருள் சிறந்துநிற்கும் வினைத்தொகையினும் உவமைத்தொகையினும், முன மொழிகளிற் பொருள் சிறந்துநிற்கும் உம்மைத் தொகையின்கண் பலமொழிகளினும் பொருள்சிறந்துநிற்கும் அன்மொழித் தொகையில் இருமொழியுமல்லாத மொழியிலே பொருள்சிறந்துநிற்கும். (உ-ம்)

வேங்கைப்பூ, செந்தாமரை, எனவரும் வேற்றுமைத்தொகை பண்புத்தொகைகளிலே முன்மொழிகள் இனம்விலக்கிநிற்கையால், அம்முன்மொழிகளிற் பொருள் சிறந்தன.

கண்ணிமை, செஞ்ஞாயிறு, எனவரும் வேற்றுமைத்தொகை பண்புத்தொகைகளிலே முன்மொழிகள் இனம் விலக்குதலின்றிநிற்கையாற் பின்மொழிகளிற் பொருள்சிறந்தன

ஆடுபாம்பு, வேற்கண், எனவரும் வினைத்தொகை உவமைத்தொகைகளிலே முன்மொழிகள் இனம் விலக்கி நிற்கையால், அம்முன்மொழிகளிற் பொருள்சிறந்தன.

இராப்பகல், சேரசோழபாண்டியர், எனவரும் உம்மைத்தொகைகளிலே பலமொழிகளும் இனம் விலக்கலும் விலக்காமையுமின்றி நிற்கையால் அப்பலமொழிகளினும் பொருள்சிறந்தன.

பொற்றொடி, உயிர்மெய், எனவரும் அன்மொழித்தொகைகளிலே சொல்லுவோன்கருத்து இவ்விருமொழிப்பொருண்மேலதாகாமல், இவ்விருமொழியுமல்லாத உடையாள்முதலிய மொழிப்பொருண்மேலதாதலால், அவ்வல்லாத மொழிகளிற் பொருள்சிறந்தன

தொகைநிலைத்தொடரியல்

முற்றிற்று.

# தொகாநிலைத்தொடரியல்.

---

௩௱௨ தொகாநிலைத்தொடர்மொழிகள், இடையேவேற்றுமையுருபுமுதலியவுருபுகள்கெட்டு நில்லாமலும், ஒருமொழித்தன்மைப்படாமலும், சொற்கள்தொடர்வனவாம்.

௩௱௩. அத்தொகாநிலைத்தொடர்கள், எழுவாய்த்தொடர், விளித்தொடர், ஐமுதலியவேற்றுமை யுருபாறுங் கெடாமனிற்குந்தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச் சொற்றொடர், என எண்வகைப்படும். (உ-ம்)

சாத்தன்வந்தான், எ-ம், சாத்தாவா, எ-ம், நிலத்தைக்கடந்தான், எ-ம், செய்தானவன், எ-ம், உண்டசாத்தன், எ-ம், உண்டுவந்தான், எ-ம், மற்றொன்று, எ-ம், கடிக்கமலம், எ-ம், வரும்.

இவற்றின் விகற்பங்களெல்லாஞ்சொ
ல்லதிகாரத்திலே விரித்துரைக்கப்பட்டமை
யால் ஈண்டுவிரிக்கப்படவில்லை எனவறிக.

சாத்தன்வந்தான், என வினைமுற்று
எழுவாய்க்கு முடிக்குஞ்சொல்லாக வருமி
டத்துச்சாத்தனிது செய்தான், என வினை
முதல் விசேடணமாக வினைமுக்கியப்பொ
ருளாம்.

வந்தான்சாத்தான், என வினைமுற்றீ
ற்றுப்பெயர்முடிக்குஞ் சொல்லாக வருமி
டத்து இதுசெய்தான் சாத்தன், என வினை
விசேடணமாக வினைமுதல் முக்கியப்பொ
ருளாம்.

௬௬௪ வேற்றுமையுருபுகளுஞ், வி
னைமுற்றுகளும், பெயரெச்சங்களும் வினை
யெச்சங்களும், கொள்ளும் பெயர்வினைக
ளுக்கிடையே வருமொழியோடியையத்த
க்க பிறசொற்கள் வரவும்பெறும் (உம்)

சாத்தன்வயிறாரவுண்டான், அறத்தை.

மழகுபெறச்செய்தான், வாளான் மாயவெட்டினன், தேவர்க்குச் செல்வம்வேண்டிச் சிறப்பெடுத்தான், மலையினின் றுருண்டு வீழ்ந்தார், சாத்தனைத்தடக்கையானை,உனரகமுயர்ந்த வொளிமாடம், சாத்தாவினைந்தோடிவா எ-ம், வந்தானவ்வூர்க்குப்போனசாத்தன், வந்தவடகாசி மன்னன், வந்துசாத்தனின் றவனூர்க்குப்போயினன் எ-ம், வரும்.மற்றவைகளுமிப்படியே

உண்டுவிருந்தோடுவந்தான், என்னுமிடத்து இடையில் வந்தவிருந்தென்னுஞ்சொல் வருமொழியோடியைதலன்றி விருந்தோடென்றுவந்தானென நிலைமொழியோடியைதலால் இதுபோல்வன இடையில்வரப்பெறுமென்றறிக.

தொகாநிலைத்தொடரியல்

முற்றிற்று.

# பிரயோகவியல்.

---

௱௬௫ பிரயோகமாவது, வாக்கியங்களிலே முடிக்குஞ்சொல்லாகவரும் வினைமுற்றுகள், முடிக்கப்படுமுடிப்பாம்

௱௬௬ வாக்கியங்களாவன, எழுவாயும் பயனிலையுஞ் செயப்படுபொருண் முதலியவைகளோடுகூடியேனுங் கூடாதேனு முடிவுபெற்று நிற்பனவாம் (உ-ம்)

சாத்தன் சோற்றையுண்டான்
சாத்தன் மரத்தைவாளால்வெட்டினன்
சாத்தன் வந்தான்
} என வரும்

௱௬௭ அம்முடிப்புகள், செயப்படுபொருளுடைவினைமுதலின் முடிப்பெனவும், செயப்படுபொருளில்வினைமுதலின் முடிப்பெனவும், செயப்படுபொருளிரண்டுடைவினைமுதலின் முடிப்பெனவும், செயப்படுபொருளின் முடிப்பெனவும், செயப்படுபொருளிரண்டிடைச் செயப்படுபொருளின் முடிப்பெனவும், ஐந்துவகைப்படும்.

௩௬௮ செயப்படுபொருளுடை வினைமுதலின்முடிப்பாவது, செயப்படுபொருள்குன்றுதவினையை வினைமுதலைக்காட்டும்விகுதியான்முடித்தலாம் (உ-ம்)

சாத்தனுண்டான் எனவரும்.

இதனைவடநூலார், சகர்மககர்த்தரிபிரயோகமென்பர்.

௩௬௯ செயப்படுபொருளில் வினைமுதலின்முடிப்பாவது, செயப்படுபொருள்குன்றியவினையை வினைமுதலைக்காட்டும் விகுதியான்முடித்தலாம் (உ-ம்)

சாத்தன்வந்தான் எனவரும்.

இதனைவடநூலார், அகர்மககர்த்தரிபிரயோகமென்பர்.

௩௭௰ செயப்படுபொருளிரண்டுடை வினைமுதலின் முடிப்பாவது, இரண்டுசெயப்படுபொருளுடையவினையை வினைமுதலைக்காட்டும்விகுதியான்முடித்தலாம்.

(உ-ம்.)

அரசன்பகைவனைச்சிறைச்சாலையையடைவித்தான் எனவரும்.

இதனைவடநூலார், அவிகர்மககர்த்தரிபிரயோகமென்பர்.

௩௭௧. செயப்படு பொருளின் முடிப்பாவது, செயப்படுபொருள்குன்றுதவினையை அச்செயப்படுபொருளைககாட்டும் விகுதியான்முடித்தலாம் (உ-ம்)

அரசனாற்பகைவர் கொல்லப்பட்டார் எனவரும்.

இதனைவடநூலார், கர்மணிபிரயோகமென்பர்.

௩௭௨. செயப்படுபொருளிரண்டுடைச்செயப்படுபொருளின் முடிப்பாவது, இரண்டுசெயப்படு பொருளுடையவினையை அவ்விரண்டுசெயப்படு பொருள்களுளொன்றைக்காட்டும் விகுதியான்முடித்தலாம்.

(உ-ம்)

அரசனாற் பகைவர் சிறைச்சாலையையடைவிக்கப்பட்டார் எனவரும்.

இதனைவடநூலார், அவிகர்மககர்மணிபிரயோகமென்பர்.

கூஎகூ மேற்கூறிய வாக்கியங்களின் பொருளை யுணர்தற்குக்கருவியா யிருப்பனவைகள் அவாய்நிலையும், அண்மையும், தகுதியும், கருத்துணர்ச்சியும், ஆற்றலுணர்ச்சியுமாகியவைகளுமாம்.

கூஎஅ அவற்றுள் அவாய்நிலையாவது, வாக்கியத்தில் எந்தச்சொல்லுக்கு எந்தச் சொலலின்றி யமையாததாக விருக்கின்றதோ இன்றி யமையாத சொல்லே அந்தச் சொல் அவாவி நிற்றலாம்.

(உ-ம்)

ஆவைக்கொணு என்னுமிடத்து,கொணுவென்பதற்கு ஆவையென்பது இன்றியமையாததா யிருத்தலால் அதற்கு இது அவாய்நிலையாம ஆவையென்பதற்குக்கொணுவென்பதும் இன்றியமையாததாயிருத்தலால்இதற்கு அதுவும் அவாய்நிலையாம.

கூஎகூ அண்மையாவது, வாக்கியத்திலுள்ள சொற்கள் காலமிடையீடின்றிச்சொலலப்படுதலாம். (உ-ம்)

ஆற்றங்கரைக்கணோர் கனிகளுளவா

கின்றன என்பதிலுள்ள சொற்கள் ஒவ்வொருசாமத்துக் கொவ்வொரு சொல்லாகச் சொல்லப்படுமாறல் வாககியப்பொருளுணர்ச்சி யுண்டாகாது ஆதலால் அச்சொற்களைக்காலமிடையீடின்றிச்சொல்லுக அவ்வாறுசொல்லுதல் அண்மையாம் மற்றவைகளுமிப்படியே

அன்றியும், மலையண்டா னெருப்புடையது தேவதத்தன், என வாக்கியப்பொருளுணர்ச்சிக்குக்காரணமாகாதவாறுமொழிகளைப்புணாத்திக் கூறுதல் அண்மையாகாதெனவும், மலைநெருப்புடையது, உலாடான்றேவதத்தன், எனவாக்கியப்பொருளுணர்ச்சிக்குக்காரணமாகுமாறுமொழிகளைப்புணர்த்திக்கூறல் அண்மையாமெனவும், அறிக.

௩௭௩ தகுதியாவது, வாக்கியத்துட் சொற்கள் ஒன்றற்கொன்று பொருள்பொருத்தமுடைத்தாயிருக்கத்தொடர்தலாம்.

(உ-ம்.)

நீராலேநனை, என்னுமிடத்துநனைத்தற்கு நீர்கருவியாதலால் அதற்கு இதுதகு

தியாம். நெருப்பாலேநனை, என்றால் நனை
த்தற்கு நெருப்புகருவி அன்றாதலின் அத
ற்கிது தகுதியன்றாமெனவறிக.

௬௭௭ கருத்துணர்ச்சியாவது, வாக்கி
யத்துள் எப்பொருளைத்தரல்வேண்டுமெ
ன்று எச்சொல் சொல்லப்பட்டதோ அச்
சொல்லில் அமயம்பார்த்து அப்பொரு
ளையறிதலாம். (உ-ம்)

மாவைக்கொண்டுவா என்பது பசித்
தோனாற் சொல்லப்பட்டால், தின்னுகின்ற
மாவெனவும், கவசம்பூண்டோனாற் சொல
லப்பட்டால், குதிரையெனவும், அமைய
நோக்கியறிதல்.

௬௭௮ ஆற்றலுணர்ச்சியாவது, விர
லழகிது, என்னுமிடத்து விரலென்னுஞ்
சொல், நகத்தையுணர்த்தாமல் விரலையேயு
ணர்த்துதல், அச்சொல்லின்கணுள்ள சத்தி
யெனவறிதலாம் மற்றவைகளுமிப்படியே.

---

பிரயோகவியல்

முற்றிற்று.

# ஒழிபியல்.

---

௩௭௯ ஈண்டொழிபாவன, முற்கூறிய தொகைநிலைத்தொடரியல் முதலிய மூன்றியல்களிலேகூறாமல் ஒழிந்தனவாம். அவற்றைக்கூறுதலால் இவ்வியலுக்கு ஒழிபியலென்னும் பெயராயிற்று.

[ஆகுபெயர்]

௩௮௰ மொழிகள் தொடருமிடத்து ஒருமொழியின் இயற்பொருள், அதனைமுடிக்கவருமொழிப்பொருளோடு பொருத்தமில்லாதவிடத்து அம்மொழியில் ஆக்கப்பொருள்கொள்ளப்படும்.

அவ்வாறு ஆக்கப்பொருள் கொள்ளப்படுமொழிகள், ஆகுபெயர்களெனப்படும். அவ்வாகுபெயர்கள், பொருளாகுபெயர், இடவாகுபெயர், காலவாகுபெயர், சினையாகுபெயர், குணவாகுபெயர், தொழிலாகுபெயர், எண்ணலளவையாகுபெயர், எடுத்தலளவையாகுபெயர், முகத்தலள

வையாகுபெயர், நீட்டலளவையாகுபெயர், சொல்லாகுபெயர், தானியாகுபெயர், கருவியாகுபெயர், காரியவாகுபெயர், கருத்தாவாகுபெயர், உவமையாகுபெயர், எனப் பதினாறுவகைப்படும் (உம்)

[பொருளாகுபெயர்]

தாமரைமுகம், என்னுமிடத்துத்தாமரை என்னுமொழியின் இயற்பொருளாகிய முதற்பொருளுக்கு, அதனைமுடிக்கவந்த முகமென்னும் உபமேயப் பொருளோடு பொருந்தமில்லாமையால், அம்மொழியில் அதன்சினைப்பொருளாகிய மலரொன்றும் ஆக்கப்பொருள் கொள்ளப்படும் அதனாலே தாமரைபொருளாகுபெயராம்.

[இடவாகுபெயர்]

ஊர்வந்தது, என்னுமிடத்து ஊர் என்பதின் இயற்பொருளாகிய இடச்சிறப்புப்பொருளுக்கு, அதனை முடிக்கவந்த வருதலென்னும் வினைப் பொருளோடு பொருந்தமில்லாமையால், அம்மொழியில் அவ்விடத்தில்வாழ்வோரொன்றும் ஆக்கப்பொருள் கொள்ளப்படும். அதனால் ஊரிடவாகுபெயராம்.

[காலவாகுபெயர்]

காரறுத்தது, என்னுமிடத்துக் காரெ
ன்பதின் இயற்பொருளாகிய காலசிறப்
புப்பொருளாகு, அதனைமுடிக்கவந்த அ
றுத்ததென்பதனாற் பொருளோடு
பொருத்தமில்லாமையால், அம்மொழியி
ல் அக்காலத்திலுண்டாம் பயிரென்னும்
ஆகுபொருள் கொள்ளப்பட்டது. அதற்
குக் காலவாகுபெயராம்.

[சினையாகுபெயர்]

மருக்கொழுந்து நட்டான், என்னு
மிடத்துக்கொழுந்தென்பதின் இயற்பொ
ருளாகிய சினைச்சிறப்புப்பொருளுக்கு, அ
தனைமுடிக்கவந்த நட்டானென்பதன்
பொருளோடு பொருத்தமில்லாமையால்,
அம்மொழியில் அதன்முதலென்னும் ஆக்
கப்பொருள் கொள்ளப்பட்டமை. அதனால் ம
ருக்கொழுந்து சினையாகுபெயராம்.

[குணவாகுபெயர்]

நீலக்குடுமியன், என்னுமிடத்து நீல
மென்பதின் இயற்பொருளாகிய கருமையெ
ன்னும்பொருளுக்கு அதனை முடிக்கவந்த
குடுமியென்னுஞ்சினைப்பொருளோடு பொ

பொருத்தமில்லாமையால், அம்மொழியில் அந்நிறத்தையுடைய மலரென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்படும். அதனும் நீலங் குணவாகுபெயராம்

[தொழிலாகுபெயர்]

வற்றலோடுண்டான், என்றவிடத்து வற்றலென்பதின் இயற்பொருளாகிய வற்றுதல் என்னுந் தொழிற்சிறப்புப் பொருளுகிறு, அதனோடு கூடின உண்ணுதலென்னும் வினைப்பொருளோடு பொருத்தமில்லாமையால்; அம்மொழியில் அத்தொழிலையுடைய பொருளென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்படும். அதனும் வற்றல் தொழிலாகுபெயராம்.

[எண்ணளவையாகுபெயர்]

காலெறிந்தது, என்றவிடத்துக் கால் என்பதின் இயற்பொருளாகிய எண்ணுச் சிறப்புப்பொருளாகாது, அதனை முடிக்கவந்த எறிதலென்னும் வினைப்பொருளோடு பொருத்தமில்லாமையால், அம்மொழியில் உடம்பின்கணுள்ள அவ்வளவைக்கொண்ட உறுப்பென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்படும் அதனுங்கால் எண்ணளவையா

யாகுபெயராம்.

[எடுத்தலளவையாகுபெயர்]

துலாக்கோல், என்றுமிடத்துத் துலாமென்பதின் இயற்பொருளாகிய நிறையளவைச்சிறப்புப் பொருளுக்கு, அதனை முடிக்கவந்த கோலென்னும் பெயர்ப்பொருளோடு பொருந்தமில்லாமையால், அச்சொல்லில் அந்நிறையளவை [illegible] இய நிறைகோலென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்படும். அதனாலே துலாம் எடுத்தலளவை யாகுபெயராம்.

[முகத்தலளவையாகுபெயர்]

நாழியுடைந்தது, என்றுமிடத்து நாழியென்பதின் இயற்பொருளாகிய முகத்தலளவைச்சிறப்புப் பொருளுக்கு, அதனை முடிக்கவந்த உடைதலென்னும் வினைப்பொருளோடு பொருத்தமில்லாமையால், அம்மொழியில் அவ்வளவைக்கொண்ட ஓர்கருவியென்னும் ஆக்கப்பொருள்கொள்ளப்படும். அதனாலே நாழிமுகத்தலளவையாகுபெயராம்.

[நீட்டலளவையாகுபெயர்]

கெஜமத்தழிவிழுந்தது, என்றுமிடத்

ரீத் தடியென்பதின் இயற்பொருளாகிய
நீட்டலளவைச் சிறப்புப்பொருளுக்கு, அ
தனை முடிக்கவந்தவிளைதலென்னும் வினை
ப்பொருளோடு பொருத்தமில்லாமையா
ல், அம்மொழியில் அதனளக்கப்படுங்க
ழனியென்னும் ஆக்கப்பொருள் கொள்ள
ப்படும் அதனாலே தடிநீட்டலளவையாகு
[சொல்லாகுபெயர்] [பெயராம்.
இந்நூலுக்குரைசெய்தான்,என்னுமி
டத்து உரையென்பதின் இயற்பொருளா
கிய சொல்லென்னும் பொருளுக்கு, அத
னைமுடிக்கவந்த செய்தலென்னும் வினைப்
பொருளோடு பொருத்தமில்லாமையால்,
அம்மொழியிற் பொருளென்னும் ஆக்க
ப்பொருள் கொள்ளப்படும் அதனால் உ
ரைசொல்லாகுபெயராம்.

[தானியாகுபெயர்]

விளக்குமுரிந்தது,என்னுமிடத்துவி
ளக்கென்பதின் இயற்பொருளாகிய சுட
ரென்னுந் தானிப்பொருளுக்கு,அதனைமு
டிக்கவந்த முரிதலென்னும் வினைப்பொரு
ளோடு பொருத்தமில்லாமையால், அம்
மொழியிலே அச்சுடர்க்குத்தானமாகிய த

ண்டென்னும் ஆக்கப்பொருள் கொள்ள
ப்படும் அதனால் விளக்குத்தானிபாருபெ
[கருவியாகுபெயர்] [யராம்.
திருவாசகமோதினான், என்னுமிடத்
து வாசகமென்பதின் இயற்பொருளாகிய
சொல்லென்னுங்கருவிப்பொருளுக்கு, அ
தனை முடிக்கவந்த ஓதலென்னும் வினைப்
பொருளோடு பொருத்தமில்லாமையால்,
அம்மொழியில் அதன் காரியமாகிய நூ
லென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்ப
டும். அதனாலே திருவாசகங்கருவியாகுபெ
[காரியவாகுபெயர்] [யராம்.
என்னலங்காரஞ் சோரனாற் கவரப்பட்
டது, என்னுமிடத்து அலங்காரமென்பதி
ன் இயற்பொருளாகிய அணியென்னுங்கா
ரியப்பொருளுக்கு, அதனைமுடிக்கவந்த க
வரப்படுத லென்னும் வினைப்பொருளோ
டு பொருத்தமில்லாமையால் அம்மொழி
யில் அதனைபுணர்த்துதற்குக் கருவியாகிய
நூலென்னும் ஆக்கப்பொருள் கொள்ளப்
படும் அதனால் அலங்காரங் காரியவாகுபெ
[கருத்தாவாகுபெயர்] யராம்.
திருவள்ளுவர்படித்தான், என்னுமிடத்

றத் திருவள்ளுவனென்பதின் இயற்பொரு
ளாகிய வள்ளுவநாயனார் என்னுங் கருத்தா
ப்பொருளுக்கு, அதனை முடிக்கவந்தபடித்
தலென்னும் வினைப்பொருளோடு பொரு
த்தமில்லாமையால் அம்மொழியில் அவரா
ற்செய்யப்பட்டகாரியமாகிய நூலென்னு
ம் ஆக்கப்பொருள் கொள்ளப்படும் அதனா
லே திருவள்ளுவர் கருத்தாவாகுபெயராம்

[உவமையாகுபெயர்]

பாவைவந்தாள், என்னுமிடத்துப் பா
வையென்னுஞ் சொல்லின் இயற்பொரு
ளாகிய சித்திரப்பாவை யென்னும் உபமா
னப்பொருளுக்கு, அதனை முடிக்கவந்த வ
ருதலென்னும் வினைப்பொருளோடு பொ
ருத்தமில்லாமையால், அம்மொழியில் உப
மேயப்பொருளாகிய பெண்மகளென்னு
ம் ஆக்கப்பொருள் கொள்ளப்படும் அதனா
லே பாவையுவமை யாகுபெயராம்.

காருழுத்தது, என்பதிற் காரென்னுங்கரு
மை நிறத்தின்பெயர் மேகத்திற்காய் அம்
மேகத்தின்பெயர் அது பெய்யும் பருவத்
திற்காய், அப்பருவத்தின்பெயர் அப்பருவ
த்தில்விளையு நெற்பயிருக்கானமையாலு

அது மும்மடியாகுபெயரெனப்படும்.

மருக்கொழுந்து நட்டான், திருவாசகமோதினான் என்பவைகளிற்கொழுந்தென்பது, மருவென்னும் அடையினையும், வாசகமென்பது திருவென்னும் அடையினையும், அடுத்துவருதலால் இவை அடையடுத்த வாகுபெயரெனப்படும்.

இவ்வாகுபெயர், விட்டவாகுபெயர், விடாதவாகுபெயர், விட்டும் விடாதவாகுபெயர், எனமூவகைப்படும்.

ஊர்வந்தது, என்பதில் ஊர் என்பது ஊரைவிட்டு அதிலுள்ளமனிதரையுணர்த்தலாலே விட்டவாகுபெயராம்.

பூனைகுடியாமற் பாலைக்காப்பாற்று, என்பதில் பூனை என்பது தன்னைவிடாமற் பாலைக் கவரவருங்காக்கை முதலியவற்றையுமுணர்த்தலால் விடாதவாகுபெயராம்.

அவனிவன், என்பதில் அவனென்பதற்கு அக்காலத்து அவ்விடத்தோடு கூடியவனென்பதும், இவனென்பதற்கு இக்காலத்து இவ்விடத்தோடுகூடியவனென்பதும், பொருளாம் இவ்விடத்து இக்காலத்தோடுகூடியிருக்கிறவனிடத்தே அவ்விடத்

து அக்காலத்தோடு கூடியிருத்தல் பொருத்தாமைபற்றி அவனென்பது விசேடணத்தைவிட்டுவிசேடியத்தை யுணர்த்தலால்விட்டும்விடாத வாகுபெயராம்.

௩௮௧. வேற்றுமை யுருபுகள் கெடாமனின்றுங்கெட்டும் வெவ்வேறுபலவடுக்கிவரினும், கலந்துபலவடுக்கிவரினும், முற்றும் பெயரெச்சமும்வினையெச்சமும் வெவ்வேறுபலவடுக்கிவரினும், இறுதியில் ஒருவினையாவது ஒருபெயராவதுவர அதனோடு அனைத்துமுடியும். (உ-ம்)

சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான் எ-ம், சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை எ-ம், அருளறமுடையான் எ-ம், வேற்றுமையுருபுகள் கெடாமனின்றுங்கெட்டும் வெவ்வேறுபலவடுக்கியொருவினையும் ஒருபெயருங்கொண்டன.

அரசனபகைவனை வாளால்வெட்டினான், அரசன்வாள்கைக்கொண்டான், எனவேற்றுமையுருபுகள் கெடாமனின்றுங்கெட்டுங்கலந்துபலவடுக்கி ஒருவினை கொண்டன.

ஆடினான் பாடினான் சாத்தன் எ-ம், கற்ற கேட்ட பெரியோர் எ-ம், முற்றுகளு

ம் பெயரெச்சங்களும் வெவ்வேறுபலவடு க்கி ஒருபெயர்கொண்டன.

கற்றுக்கேட்டுத்தெரிந்தார், என வி னையெச்சங்கள்வேறுபலவடுக்கி ஒருவினை கொண்டன.

௩௮௨ வேற்றுமையுருபுகள் வேறுப லவடுக்கிவருமிடத்து ஒருதொடரினுள்ளே முன்னிற்கும் பெயர்களிலெல்லாங்கெட்டு நிற்கவும் இறுதியினிற்கும்பெயரொன்றிற் கெடாமனிற்கவும் பெறும். (உ-ம்)

அறம்பொருளின்பங்களைப் பெற்றான்
சேரசோழபண்டியர்களுக்குநட்பினன்.
தந்தைதாயினீங்கினான் எனவரும்.

௩௮௩. ஒருதொடரினுள் ஒருபொ ருளைக்குறிக்க பலபெயர்வரவும் அப்பெயர்க ள்தோறும் ஓர்வேற்றுமையுருபேவரவும், பெறும். (உ-ம்.)

சங்கரனை யெண்குணனைச் சம்புவை
நால்வேதனொரு-சங்கரனைநெஞ்சேசேகருது
எனவரும்.

௩௮௪. உயர்திணையாண்பால் பெண்

பால் இரண்டற்கும்பொதுவாகிய பெயர்களும்,வினைகளும்,அஃறிணையாண் பெண்ணிரண்டற்கும்பொதுவாகிய பெயர்களும்,வினைகளும், தொழின்முதலியகுறிப்பினால்ஒருபாலை யுணர்த்தும். (உ-ம்)

ஆயிரமக்கள்போர்செய்தற்குப்போயினார், என்னுமிடத்து மக்களென்னும்உயர்திணையிருபாற்பொதுப்பெயரும்போயினாரென்னும் பொதுவினையும்போர்க்கு என்னுந் தொழிற்குறிப்பினாலே ஆண்பாலையுணர்த்தின.

பெருந்தேவிமகவீன்றகட்டிலினருகே நால்வர்மக்களிருந்தார், என்னு மிடத்து மக்களென்னும் உயர்திணை யிருபாற்பொதுப்பெயரும் இருந்தா ரென்னும் பொதுவினையும் ஈனுதலென்னுந் தொழிற்குறிப்பினால் உயர்திணைப் பெண்பாலையுணர்த்தின.

இப்பெற்றமுழவொழிந்தன,என்னுமிடத்துப்பெற்றமென்னும் அஃறிணையாண்பெண்ணிரண்டற்கும் பொதுப்பெயரும், ஒழிந்தனவென்னும் பொதுவினையு

ம் உழுவென்னுந் தொழிற்குறிப்பால் எருதென்னும் ஆண்பாலையுணர்த்தின.

இப்பெற்றங்கறத்த லொழிந்தன, என்னுமிடத்துப் பெற்றமென்னும் அஃறிணை ஆண்பெண்ணிரண்டற்கும் பொதுப் பெயருமொழிந்தனவென்னும் பொதுவினையுங் கறத்தலென்னுந் தொழிற் குறிப்பாற் பசுவென்னும் பெண்பாலையுணர்த்தின.

௩௮௫. திணைப்பொருளில் ஐயந்தோன்றியவிடத்து அவற்றின் பொதுச்சொல்லாலும், பாற்பொருளில் ஐயந்தோன்றியவிடத்து அவற்றின் பொதுச்சொல்லாலுங் கூறல்வேண்டும். அன்றியும் அவற்றுள், துணிந்தபொருண்மேலே அன்மையை வைத்துக்கூறின் சுருங்கச் சொல்லலென்னு மழகாம்.

(உ-ம்)

குற்றியோமகனோ எனத் திணைப்பொருளில் ஐயந் தோன்றியவிடத்துக் குற்றியோமகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற வுரு, என உருவென்னும் பொதுச்சொல்லினாலும், ஆண்மகனோ பெண்மகளோ, எனப் பாற்பொருளில் ஐயந்தோன்றியவிடத்து ஆண்மகனோ பெண்மகளோ அங்கேதோ

ன்றாகின்றவர், எனத் தோன்றாகின்றவர் எ
ன்னும்பொதுச்சொல்லினாலும், சொல்லு
க துணிந்தபொருள்குறிப்பினின் மகனெ
ன்றெனவும்,மகனெனிற்குறிப்பியல்லனென
வும், ஆண்மகனெனிற்பெண்மகளல்லனெ
னவும், பெண்மகளெனின் ஆண்மகனல்ல
ளெனவுந் துணிந்த பொருண்மேல் அன்
மையைவைத்துஞ் சொற்களுகுதற்பொரு
ட்டுச்சொல்லுக மற்றவைகளுமிப்படியே

௩அ௯ சொற்கள் தொடருமிடத்து
முடிக்கப்படுஞ் சொற்களோடுமுடிக்குஞ்
சொற்கள், திணை, பால், இடம், காலம், வினா,
விடை, மரபு, என்னும் இவ்வேழினும் பிற
ழாமற்றொடர்ந்துநிற்றல்முறையாம் அவ்
வாறு தொடர்ந்துநிற்பன வழாநிலையாம்,
பிறழ்ந்துநிற்பன வழுவாம், பிறழ்ந்துநிற்
கினுஞ்சான்றோரால் அமைத்துக கொள்ள
ப்பட்டுவருவனவழுவமைதியாம், இம்மூன்
றனுள் வழுநீக்கப்படும் ஏனைய விரண்டுங்
கொள்ளப்படும்.

[நீக்கப்படும்வழுவாவன]

அவன்வந்தது எ-து, திணைவழு அ
வன்வந்தாள் எ-து, பால்வழு யான்வந்தான்

எ-து, இடவழு. நேற்றுவருவான் எ-து, காலவழு ஒருவிரல்காட்டிச் சிறிதோ பெரிதோ எ-து, வினாவழு கடம்பூர்க்கு வழியாதென்றால், இடம்பூணியென்றுவின்கன்று எ-து, விடைவழு ஆடுமேய்ப்பானைப்பாகன் எ-து, மரபுவழு எனவரும்.

[கொள்ளப்படும்வழாநிலையாவன]

அவன்வந்தான் எ-ம், அவள்வந்தாள் எ-ம், நான்வந்தேன் எ-ம், நேற்றுவந்தான் எ-ம், அளவறியாத ஒருபொருளைச் சிறிதோ பெரிதோ எ-ம், கடம்பூர்க்குவழியாதென்றாலிது எ-ம், ஆடுமேய்ப்பானை இடையன் எ-ம், வரும்.

வழுவமைதி இனிக்கூறப்படுவனவற்றாலறிக

௩௮௭. மேற்கூறிய திணைமுதலாகிய வேழனுள் இறுதியிலே கூறப்படும் வினாவும், விடையும் மரபும், இன்னவென முன்னர்யாண்டுங்கூறப்படாமையால், அவை இன்னவென்று திணைமுதலியவற்றின்வழுவமைதியும் இனிக்கூறப்படும்.

௩௮௮ அவற்றுள் வினாவாவது, அறியலுறுவதைவெளிப்படுத்துவதாம்.

௩௮௯. அவ்வினா அறியாமையாலும் ஐயத்தினாலு நிகழாநிற்கும். (உ-ம்)

மாணாக்கனிச்சூத்திரத்துக்குப் பொருள்யாது எ-து, அறியாமைவினா குற்றியோமகனோ எ-து, ஐயவினா எனவரும்.

அன்றியும்-அறிதல், கொள்ளுதல், கொடை, ஏவல், முதலியவைகளாலும விநாநிக ழாநிற்கும். (உ-ம்)

ஆசிரியனிச்சூத்திரத்திற்குப் பொருள்யாது எ-து, அறிவினா. வணிகரே யாடையுண்டோ எ-து, கொள்ளுதல வினா சாத்தற்காடையில்லையோ எ-து, கொடைவினா சாத்தாவுண்டாயோ எ-து, ஏவல்வினா.

வினாநிகழ்தற்கு அறியாமையும் ஐயமுங்காரணமாதல் போல் அறிந்தது முதலியவை காரணமாகாமையால் இந்நான்கினாலுநிகழும்வினாக்கள் வழுவமைதியாம்.

௩௯௰ விடையாவது, வினாவியபொருளை அறிவிப்பதாம்.

௩௯௧. அதுசெவ்வன் விடையும், விடைப்பொருள் தருபவையும், என இருவகைப்படும்.

ருகூஉ அவ்விரண்டனுள் செவ்வன்வி டையாவது, வினாவியதை இஃதெனவிளங் கவறிவிப்பதாம் (உ-ம்)

உயிரொத்தன்மைத்து என வினாவிய விடத்து- உணர்தற்றன்மைத்து எ-து, செ வ்வன்விடை.

ருகூரு விடைப்பொருள் தருபவைக ள், ஒருவழியால் விடையாதற்பொருளைத்த ருபவைகளாகவருவனவாம் அவை உடன்ப டுதலும், மறுத்தலும், வினாவெதிர்வினாவுத லும், ஏவுதலும், உற்றதுரைத்தலும், உறுவ துகூறலும், சொற்றொகுத்துக்கூறலும் எ ன எழுவகைப்படும்.

(உ-ம்)

சாத்தா இதுசெய்வாயோவெனவினா வியவிடத்துச்செய்வேன் எ- து, உடன்ப டல். செய்யேன் எ- து, மறுத்தல், செய, வேனோ எ-து, வினாவெதிர்வினாவல் நீசெ ய் எ-து, ஏவுதல். உடம்புநொந்தது எ-து, உற்றதுரைத்தல். உடம்புநோம் எ-து, உ றுவதுகூறல் பயறுண்டோவணிகீரே என் றவிடத்து உழுந்தல்ல தில்லை எ- து, சொ

ற்றொருகுத்துக்கூறல் எனவரும் இவைசருள் செவ்வன்விடையொன்றும் வழாநிலையும். விடைப்பொருள் தருபவைகள் ஏழும் வழுவமைதியுமாம்

ஙகச. யாதொருபொருளை யாதொருசொல்லால் யாதொருவழியால்மேலோர்கள் சொல்லிவழங்கி வந்தார்களோ அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியாற் சொலலுதல்மரபாம். (உ-ம்)

குதிரைக்குட்டி, யானைக்குட்டி, யானைக்கன்று, பசுவின்கன்று, மான்கன்று, எனவரும்.

ஙகரு. உயர்திணை எழுவாயைத்தொடர்ந்து எழுவாயாகநிற்கும் அஃறிணைப்பொருளாதியாறும், உயர்திணை முடிபைப்பெறும். (உ-ம்)

நம்பிபொன்பெரியன்
நம்பிநாடுபெரியன்
நம்பிவாழ்நாள்பெரியன்
நம்பிமூக்குக்கூரியன்
நம்பிகுடிமைநல்லன்
நம்பிநடைகடியன்
} எனவரும்.

௫௯௬ இருதிணைப் பொருள்கலந்து ஒருதொடராய் வருமிடத்தும், ஆண்பெண்ணென்னும் இருபாற் பொருள்கள் கலந்து ஒருதொடராய்வருமிடத்தும், வெவ்வேறு வினைகட்குரிய பலபொருள்கள் கலந்து ஒருதொடராய்வருமிடத்தும், சிறப்பினாலும், மிகுதியினாலும், இழிவினாலும், ஒருமுடிவைப்பெறும்.

(உ-ம்.)

திங்களுஞ்சான்றோருமொப்பர், எனத்திணைப்பொருள்கள்கலந்து சிறப்பினாலுயர்திணை முடிவைப்பெற்றன.

பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தோர் குழவியெனு மிவர்கள், எனத்திணைப்பொருள்கள் கலந்து மிகுதியாலுயர்திணை முடிவைப்பெற்றன.

மூர்க்கனு முதலையுங் கொண்டதுவிடா, எனத்திணைப்பொருள்கள்கலந்து இழிவினால் அஃறிணைமுடிவைப்பெற்றன.

மனைவியுந் தானும் வந்தான், எனப் பாற்பொருள்கள்கலந்துசிறப்பினால்ஆண்பால முடிபைப்பெற்றன.

கறியுஞ்சோறுமுண்டான், மாலையுமுடியுங்கவிதரான், என வேறு வினைப்பல பொருள்கள்கலந்து சிறப்பினொலொருமுடிபைப்பெற்றன

மற்றவைகளுமிப்படியே.

௩௬௭ மகிழ்ச்சியினாலும், உயர்வினாலும், சிறப்பினாலும், கோபத்தினாலும், இழிவினாலும், ஒருதிணைப்பொருள்வேறுதிணைப்பொருளாகவும், ஒருபாற்பொருள் வேறுபாற்பொருளாகவுங்கூறப்படும்.

(உ-ம்)

ஓராவினை என்னம்மைவந்தாள், இதனில் உவப்பினால் அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டது.

பசுங்கிளியார் தாதுசென்றார், இதனில் உயர்வினால் அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டது.

தம்பொருளென்ப தம்மக்கள், இத

னிற்சிறப்பினால் உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்டது

ஒருவன் பயனில்லாத சொற்களைக் கூறின், நாய்குரைக்கின்ற தென்பர் இதனிற் கோபத்தினால் உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்டது

நாமாரனுடைமை, இதனில் இழிவினால் உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்டது.

நன்புதல்வனை என்னம்மை வந்தாள். இதனில் உவப்பினால் ஆண்பால் பெண்பாலாகக்கூறப்பட்டது.

ஒருவனை அவர்வந்தார், என்னுமிடத்து உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாககக்கூறப்பட்டது.

தேவன் மூவுலகிற்குந்தாய், இதனிற் சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாகக்கூறப்பட்டது

எனைத்துணைய ராயினுமென்னாந் தினைத்துணையுந் தேரான் பிறனில் புகல், இதனிற் கோபத்தினாலே பன்மைப்பால் ஒருமைப்பாலாகக்கூறப்பட்டது.

பெண்வழிச் செல்வானை இவன்பெண், என்னுமிடத்து இழிவினால் ஆண்பால்பெண்பாலாகக்கூறப்பட்டது.

௫௬௮ ஒருமைப் பாலிற் பன்மைச் சொல்லையும், பன்மைப்பாலி லொருமைச்சொல்லையும், ஒரோவிடத்துத் தழுவிக் கூறவும்படும் (உ-ம்)

வெயிலெல்லா மறைத்தது மேகம் என்றுமிடத்து வெயிலென்னுமொருமைப் பாலில் எல்லாமென்னும் பன்மைச்சொற் சேர்த்துக்கூறப்பட்டது

இரண்டுகண்ணுஞ் சிவந்தது என்னுமிடத்து இரண்டென்னும் பன்மைப்பாலிற் சிவந்ததென்னு மொருமைச் சொற் சேர்த்துக்கூறப்பட்டது.

௫௬௯ ஓரிடத்திற்பிறவிடச்சொல்லும் ஒரோவிடத்துத்தழுவிக்கூறவும்படும்.

(உ-ம்)

சாத்தன்று யிவைசெய்வேனே, என்னுமிடத்து யானெனக்கூறல்வேண்டுந்தன்மையிலே சாத்தன்றுனெனப் படர்க்கைச் சொற்றழுவிக்கூறப்பட்டது.

எமியை யீங்குப் பெற்றேனென்

னெனக்கரியனென்றான், என்னுமிடத்து நின்னையெனக் கூறவேண்டு முன்னிலையிலே எம்பியை யெனப் படர்க்கைச்சொற்றழுவிக்கூறப்பட்டது

சா மூன்றுகாலங்களினும் இடையறாதுநிகழுகின்ற தொழிலையுடையபொருள்கள் நிகழ்காலத்தாற்சொல்லப்படும்.

(உ-ம்)

தெய்வமிருக்கிறது } எனவரும்.
மலைநிற்கிறது }

சாக விரைவு, மிகுதி, தெளிவு என்னும் இம்மூன்றுகாரணங்களானும், இக்காரணங்களில்லாமலும், ஒருகாலம் வேறொருகாலமாகக்கூறவும்படும். (உ-ம்)

உண்ணவிருப்பவனும், உண்கின்றவனும், விரைவிலே தம்மை உடன்கொண்டு போக அழைப்பானுக்கு, உண்டேன், உண்டேன் என்பார், என்னுமிடத்து விரைவினால் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாகச்சொல்லப்பட்டன.

இக்காட்டிற்போனாற்கூறையிழந்தாய், என்னுமிடத்து மிகுதியால் எதிர்கால

பிறந்தகாலமாகச் சொல்லப்பட்டது கூறையிழுத்தல் தப்பினுந் தப்பு மாதலாலே மிகுதியாயிற்று.

எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின்மழைபெய்கது, என்னுமிடத்துத் தெளிவினால் எதிர்கால பிறந்தகாலமாகச் சொல்லப்பட்டது

யாம் பண்டுவிளையாடுவ திச்சோலை, யாம் பண்டு விளையாடுகிற திச்சோலை, இவைகளிலே அக்காரணங்களில்லாமலே இறந்தகாலம், எதிர்காலமு நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது.

௪௱௨ வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களையுந் தழுவி நிற்கும் ஒரு பொதுச்சொல்லும் அவற்றின் சிறப்புச் சொற்களாக எண்ணப்பட்டுநிற்கும் பல சொற்களும் எல்லாவற்றிற்குமுரியபொது வினையைக்கொண்டுமுடியும். (உ-ம்)

அணியணிந்தார், அடிசிலயின்றார் எ-ம், கிரீடமுங்குண்டலமும் வீரக்கழலுமணிந்தார், சிலநாட்சோறுஞ் சிலநாண்மா

வுஞ் சிலநாட்பாலுஞ் சிலநாணீருஞ் சில நாட்சருகுமயின்றார் எ-ம், வரும.

இவற்றுள், அணியென்பது- கவிக்கப்படுவது, பூணப்படுவது, கட்டப்படுவது முதலியவற்றிற்கெல்லாம் பொதுப்பெயராமெனவும், அணிதலென்பது- கவித்தல் முதலியவற்றிற் கெல்லாம் பொதுவினையாமெனவும், அடிசிலென்பது- உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது முதலியவற்றிற்கெல்லாம் பொதுப் பெயராமெனவும், அயிலுதலென்பது- உண்ணல், முதலியவற்றிற் கெல்லாம் பொதுவினையாமெனவும் அறிக.

௪௱௯ வினையும், சார்பும், இனமும், இடமும், முதலியவைகளைப் பொருந்திக் குறித்தபொருளை விளக்காநிற்கும் பலபொருளொருசொற்கள் வாளாகூறப்படும். இவைகளைப் பொருந்தியுங் குறித்தபொருளை விளக்காமனிற்கும் பலபொருளொருசொற்கள் சிறப்புசசொற் கூட்டிக்கூறப்படும்.

உ-ம்;

மா, என்பது, மாமரத்திற்கும், வண்

டிற்கும், ஒருசார் விலங்கிற்கும், திருமாலிற்கும் பொதுவான பலபொருளொருசொல் அப்பொருள்களுள் மாபூத்தது, என்னுமிடத்துமரமென்பது வினையாலவிளங்கிற்று மாவீழ் மலர், என்னுமிடத்து வண்டென்பது சார்பாலவிளங்கிற்று. தேர்கரிமா காலாள்கள், என்னுமிடத்துக் குதிரையென்பது இனத்தால்விளங்கிற்று மாவாழ் மார்பன், என்னுமிடத்துத் திருமாதென்பது இடத்தால்விளங்கிற்று.

மாவேறினான், மாயாது என்னுமிடத்துக் குறித்தபொருள் விளங்காமையால் விளங்குதற்பொருட்டுப் பாய்மாவேறினான், மாமரமேறினான் எ-ம், பாய்மாயாது, மாமரம்யாது எ-ம், சிறப்புச்சொற்கள் கூட்டிக்கூறுக

௪௱௪. எழுத்தினியல்பு வேறுபடாமற் பொருள்வேறுபட்டுநிற்குந் தொடர்மொழிகள், குறிக்கப்பட்ட சொற்களினிறுதியும்முதலுந்தோன்ற இசையறுத்துச்செ

ல்லும்வகையாலேதெளியப்படும் (உ-ம்)

செம்பொன்பதின்றொடி, நாகன்றேவன்போத்து, குன்றேறுமா, குறும்பரம்பு, என்பனவற்றைச்செம்- பொன்பதின்றொடி செம்பொன்-பதின்றொடி, நாகன்-றேவன்போத்து, நாகன்றே-வன்போத்து, குன்றேறு-மா, குன்-றேறுமா, குறும்- பரம்பு, குறும்ப-ரம்பு, எனக்குறித்தபொருள்விளங்கும்படிஇசையறுத்துஉச்சரித்துக்கூறுக

சாரு. தேசமும், குலமும், குடியும், உடைமையும், பண்பும், தொழிலும், கல்வியும், முதலியவற்றைப்பற்றிவருகிற சிறப்புப்பெயரோடு இயற்பெயரொருபொருள் ஒருசேர வேற்குமாயின் அவ்வியற்பெயர் பின்வருதல்சிறந்தமரபாம். (உ-ம்)

| | |
|---|---|
| சோழியன்கொற்றன், | தேசம். |
| பார்ப்பான் பாராயணன், | சாதி. |
| பாண்டியன் குலசேகரன், | குடி. |
| பொன்னன் பொறையன், | உடைமை. |
| கரியன் கம்பன், | பண்பு. |

நாடகி நம்பி, தொழில்.
ஆசிரியனமிழ்கன், பெயர்.

எனவரும் சிறுபான்மை இயற்பெயர், சொ
ற்றன் சோழியன், பாராயணன் பார்ப்பான்
எனமூன்வருதல் அவ்வளவு சிறப்பன்றெ
னக்கொள்க. மற்றவைகளுமப்படியே

சாகூ ஒருசொல் விஞவு, கோபம், உவகை, அச்சம், துன்பம், முதலிய பொருணிலை யிடத்தும், அசைநிலை இசைநிறைக ளிடத்தும், இரண்டுமுதல் நான்களவும் அடுக்கிவரும்.

(உ-ம்)

போபோ - - விஞவு.
எறியெறி - - கோபம்.
பொலிகபொலிகபொலிக - உவகை
தீத்தீத்தீ - - - அச்சம்.
வாழேன்வாழேன்வாழேன் - துன்பம்.
அன்றேயன்றே - - அசைநிலை.
பாடுகோ பாடுகோ }
பாடுகோ பாடுகோ } இசைநிறை.

௬௱௭. பிரிந்திசைத்தாற் பொருள்படாமற் பிரியாது நின்று பொருள் படுஞ் சொற்கள் இரட்டைச்சொற்களெனப்படும். (உ-ம்)

சலசலவெனமழைபெய்தது
கலகலவென்றொலிக்கும்
குறுகுறுவெனநடந்துவரும் } என வரும்.

௬௱௮ இருசொற்கள் ஒருபொருண் மேல்வந்து செவிக்கின்பம்படநின்றுதொடர்ந்துவரவும் பெறும். (உ-ம்)

மீமிசைஞாயிறு
புனிற்றிளங்கன்று
நாகிளங்கமுகு
உயர்ந்தோங்குபெருவரை
குழிந்தாழ்ந்தகண் } என வரும்.

௬௱௯. இவ்வளவென்று அறியப்படாப் பொருள்களும், எக்காலத்தும் எவ்விடத்துமில்லாத பொருள்களும், முடிக்குஞ் சொற்களோடியைபு மிடத்து முற்றும்மை பெறும். எக்காலத்து மெவ்விடத்துமில்லாதபொருளுக்குக் காலப்பெயரு மிடப்பெயருங் கூட்டப்படும்.

(உ-ம்)

தமிழ்நாட்டுமூவேந்தரும்வந்தார்
இறைவர்க்குக்கண்மூன்றுமுச்சுடர்
கண்ணிரண்டுஞ்சிவந்தன
விரல்களைந்துநொந்தன எ-ம்,

முயற்கோடாகாயப்பூவென்றுமில்லை,
ஒளிமுன்னிருளெங்குமில்லை எ-ம், வரும்.

சாய செயப்படுபொருள், கருவி, இடம், செயல், காலம், என்றுமிவைகளை வினைமுதல் போலவைத்து வினைமுதல்வினையைப்புணர்த்தி ஒரோவிடத்துக் கூறவும்படும். (உ-ம்)

இம்மாடியான்கொண்டது
இச்சோறியான்கொடுத்தது } செயப்படுபொருள்.

இவ்வெழுத்தாணியானெழுதியது கருவி.
இவ்வீடியானிருந்தது இடம்.
இத்தொழில்யான்செய்தது தொழில்.
இந்நாள்யான்பிறந்தது காலம். எனவரும்.

சாயக பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழிலென்னும் இவ்வாறுஞ்

சொல்லப்படும் பொருளுக்கு அடைமொழிகளாகவரும் இவ்வடைமொழிகள்-சொல்லப்படும் பொருட்கு இனமாயுள்ள பொருளைவிலக்கிச் சொல்லப்படும் பொருளையுணர்த்திவரின் இனச்சுட்டுள்ள அடையெனப்படும் சொல்லப்படும்பொருளினினத்தை விலக்குதலின்றிவரின் இனச்சுட்டில்லா அடையெனப்படும். (உ-ம்)

[இனச்சுட்டுள்ளவடை]

நெய்க்குடம் - - - பொருள்.
குளநெல் - - - - இடம்.
கார்த்திகைவிளக்கு - காலம்.
பூமரம் - - - - சினை.
செந்தாமரை - - - பண்பு.
ஆடுபாம்பு - - - தொழில்.

[இனச்சுட்டில்லாவடை]

உப்பளம் - - - - பொருள்.
ஊர்மன்று - - - இடம்.
நாளரும்பு - - - - காலம்.
இலைமரம் - - - - சினை.
செம்போத்து - - பண்பு.
தோய்தயிர் - - - தொழில்.

௪௱௰௨ அடைமொழிகள் சிறுபான்மை இனத்தைத்தருதலன்றி இனமல்லதையுந்தரும். (உ-ம்)

மேலைச்சேரிச்சேவலலைத்ததென்றுமிடத்துக் கீழைச்சேரிச்சேவலலைப்புண்டதென இனத்தைத்தந்ததுமல்லாமல் அச்சேவலையுடையார்க்கு வெற்றியாயிற்றென இனமல்லதையுந்தந்தது

௪௱௰௩ ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலும் ஒன்றையொன்று விசேடித்துவரவும், ஈரடை முதலையாவது சினையையாவது விசேடித்துவரவும், அடையடுத்துவரும் பலசினைகள் ஒருமுதலை விசேடித்துவரவும்பெறும் (உ-ம்)

வேற்கைமுருகன் } எ-ம்,
செங்கானாரை }
சிறுகருங்காக்கை - எ-ம்,
சிறுகருங்கண் - - எ-ம்,
பெருந்தோட்சிற்றிடை } எ-ம்,
ப்பேரமர்க்கட்பேதை }

வரும்.

௪௱௰௪. குறிப்பினாற்பொருளுணர

ப் றமொழிகள் தொ[illegible]ொழிக்கண் ஒ ன்றாவிடத்துவரும். உ-ம)

குடைபூகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர், என்னுமிடத்துப்பெருஞ்செல்வத்தினனென்பது குறிப்பா லுணரப்பட்டபொருளாம்.

கல்லைக்கடித்து நன்றாய்ச் சுமைத்தாய், என்னுமிடத்து நன்றாய்ச் சமைத்திலையென்பது குறிப்பா லுணரப்பட்டபொருளாம் மற்றவைகளுமிப்படியே.

**௪௭௰௫.** சொல்லெச்சம், இசையெச்சமென இருவகையெச்சங்களுண்டு அவைகள் பெரும்பாலுஞ் செய்யுளிலுஞ் சிறுபான்மை வழக்கிலும்வரும் அவற்றுட் சொல்லெச்சம் ஒருசொல்லொழியநிற்பது இசையெச்சம இரண்டுமுதலிய பலசொல லொழியநிற்பது (உ-ம்)

பிறவிப்பெருங்கட னீந்துவர்நீந்தார், இறைவனடிசேராதார், என்னு மிடத்துச் சேர்ந்தார் பிறவிப்பெருங்கடனீந்துவர், என ஒருசொல்வருவிக்கப்படுதலாற்சொல்லெச்சமாமெனவும்.

அந்தாமரையன்னமே நின்னையானக ன்றுற்றவமே, என்னுமிடத்து என்னுயி ரினுஞ்சிறந்த நின்னை எனப்பலசொற்கள் வருவிக்கப்படுதலால் இசையெச்சமாமென வுங்கொள்க.

௪௱௰௪. அஃறிணைப்பொருள்களுள் கேளாதவைகள் - கேட்பவைகளாகவும், சொல்லாதவைகள்- சொல்பவைகளாகவும், நடவாதவைகள் - நடப்பவைகளாகவும், செய்யாதவைகள்- செய்பவைகளாகவுஞ் சொல்லவும்படும்

இரவெல்லா நின்று யீர்ங்கதிர்த் திங்கள் எ-ம், பகைமையுங்கேண்மையுங் கண்ணுரைக்கும் எ-ம், இவ்வழி யவ்வூர்க்குப் போகும் எ-ம், தன்னெஞ்சே தன்னைச்சுடும் எ-ம், வரும்

௪௱௰௫. ஒருபொருளினது பண்பு முதலியவற்றை அப்பொருளினது உடைமையாகிய மற்றொருபொருண்மேல் வைத்துக்கூறவும்படும (உ-ம்)
செங்கோல், வீரக்கழல், எனவரும்.

இவ்வு காரணங்களி் உடையானுடை ய[illegible]யும், வீரமும், அவ்வுடைமை டாக்கப்போவின்மேலும், நிழலின்மேலும், வைத்துக்கூறப்படுதல் காண்க.

சாங்கு. சொற்கடோறும் இதனிற விலக்கணம் இவ்வாறென்று சொலலப்புகு ந்தாலமிகவும்விரியம்ஆதலாலே மேற்சொ ல்லப்பட்டவற்றின் இலககணங்களை எது வாகக்கொண்டு சொல்லப்படாதவற்றின் இ லக்கணங்களையும் ஆராய்ந்தறிந்துகொள்க.

ஒழிபியல் - முற்றிற்று.

தொடர்மொழியதிகாரமுற்றுப்பெற்றது.

---

திருத்தணிகைக்

கந்தப்பையர் குமாரராகிய

விசாகபபெருமாளையரால்

இயற்றப்பட்ட

[illegible]